விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 பங்குனி 08 வியாழக்கிழமை (22.03.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 093

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

# இலங்கை மீது நம்பிக்கையில்லை
# சர்வதேச பங்களிப்புடன்
# விசேட நீதிமன்றம் அமைப்போம்

## ஐ.நா மனித உரிமை ஆணையாளர் கடும் எச்சரிக்கை

(ஜெனிவா) ஐ.நா. பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் முழுமையாக நடைமுறைப்படுத்தும் என்பதில் தாம் நம்பிக்கை கொண்டிருக்கவில்லையென தெரிவித்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் செய்ட் அல் ஹுசைன் சர்வதேச நாடுகளின் பங்களிப்புடன் விசேட நீதிமன்றம் ஒன்றை அமைப்போம் என இலங்கைக்கு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)



ஜெனிவா தீர்மானத்தின்

## பாதகத்தை தற்போது அனுபவிக்கின்றோம்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த

(ஜெனிவா)

ஜெனிவா தீர்மானத்திற்கு இலங்கை அரசாங்கம் இணை அனுசரணை வழங்கியமையால் அதன் பாதகத்தை தற்போது அனுபவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி 23

இடையூறு ஏற்படுத்த வேண்டாம்

## யாழ்.பல்கலைக் கழக ஊழியர் சங்கத்திற்கு

யாழ்.நீதிமன்றம் கட்டளை

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள் மற்றும் மாணவர்களுக்கு இடையூறு ஏற்படாதவாறு செயற்படுமாறு யாழ் பல்கலைக் கழக ஊழியர் சங்கத்துக்கு யாழ் நீதவான் நீதிமன்று நேற்று 24

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் மூதூரில் போராட்டம்



23

## உடுப்பிட்டி இமையாணன் பகுதியில் பட்டப் பகலில் 3 வீடுகள் உடைத்து திருட்டு

(கரணவாய்)

உடுப்பிட்டி இமையாணன் பகுதியில் பட்டப்பகலில் மூன்று வீடுகள் உடைத்து திருட்டில் ஈடுபட்ட நால்வர் அப்பகுதி இளைஞர்களினாலும் பொலிஸாரின் துரித செயற்பாட்டினாலும் மடக்கிப்பிடிக்கப்பட்டுள்ளனர்.

### அப்பகுதி இளைஞர்களாலும், பொலிஸாரின் துரித செயற்பாட்டாலும் கள்வர்கள் மடக்கிப்பிடிப்பு



நேற்று புதன்கிழமை 21.03.2018 இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, அப்பகுதியில் வடி ரக வாகனத் 23

## கொடிகாமம் பகுதியில் கதவுடைத்து திருட்டு

(சாவகச்சேரி)

பருத்தித்துறை வீதி கொடிகாமம் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் முன்கதவினை உடைத்து உள்ளே சென்ற திருடர்கள் 1 1/2 பவுண் தங்கச்சங்கிலி, 82 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் கைபேசியினை திருடிச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் காலை 9.00 மணி 23

ஆனந்த சுதாகரனை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஜனாதிபதி மைத்திரிக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் மனைவியின் இறுதி கிரியைக்காக கிளிநொச்சிக்கு வந்திருந்த அரசியல் கைதியான ஆனந்தசுதாகரனை பொது மன்னிப்பில் விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவுக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். இந்த கடிதத்தை நேற்றைய தினமே அவர் அனுப்பி வைத்துள்ளார்.

2008 இல் கைது செய்யப்பட்ட ஆனந்தசுதாகரன் கடந்த 24

முதலமைச்சர் அலுவலகத்திற்கு முன்

## தொண்டராசிரியர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் அலுவலகத்திற்கு முன்பாக நேற்றைய தினம் வடமாகாண தொண்டராசிரியர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டிருந்தனர். 24

## ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை சபாநாயகரிடம் சமர்ப்பிப்பு

### மகிந்த கையொப்பமிடவில்லை

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை சபாநாயகர் கரு ஜெயசூரியவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. கூட்டு எதிர்க்கட்சியினரால் முன்வைக்கப்படும் குறித்த நம்பிக்கையில்லா 23



## ஜனாதிபதி, பிரதமருக்கு ராஜித எச்சரிக்கை

(கொழும்பு)

தனிப்பட்டவர்களின் தேவைகளுக்காக நல்லாட்சி அரசாங்கத்தை உருவாக்கவில்லை.

மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை எதிர்கால திட்டங்களாக முன்னெடுக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 23

## 2020 ஆண்டு வரை ரணிலே பிரதமர்

(கொழும்பு)

பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்தாலும் எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு வரை ரணில் விக்கிரமசிங்கவே பிரதமராக பதவி வகிப்பார் என அமைச்சர் பீ.ஹரிசன் தெரிவித்துள்ளார். 23

## இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட காணிகள் மீள ஒப்படைக்கப்படும்

சட்ட ஒழுங்கு அமைச்சர் ரஞ்ஜித் மத்தும பண்டார தெரிவிப்பு



(கொழும்பு)

இராணுவத்தினால் கைப்பற்றப்பட்ட காணிகளை மீண்டும் மக்களிடம் ஒப்படைக்கும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படும் என சட்ட ஒழுங்கு அமைச்சர் 23

## தமிழர்களின் சொத்துக்களை இராணுவம் கொள்ளையிட்டது

ஐ.நாவில் சிறீதரன் எம்.பி

(ஜெனிவா)


இலங்கையில் மனித உரிமைகள் பேரவை தீர்மானம் 30/1 படி இடைநிலை நீதியை நிலை நாட்டுவதை கடந்த ஓராண்டாக ஆளும் அரசு கிடப்பில் போட்டுள்ளது 23



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்

## நாகலிங்கம் துரைசிங்கம் (ராசு)



வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை இல.84/3, தபாற்கந்தோர் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் இலக்கம் 259, பருத்தித்துறை வீதி, நல்லூரை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் துரைசிங்கம் (ராசு) 21.03.2018 புதன்கிழமை நேற்று காலமாகி விட்டார்.

அன்னார் ஸ்ரீலங்கா புத்தகசாலை, நியூட்டோன் எலக்ரிக்கல், ஸ்ரீராம் களஞ்சியம் ஆகியவற்றின் முன்னாள் காசாளரும்,

ஈஸ்வரியின் (ஈசு) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், பராசக்தி ஆகியோரின் அன்பு மகனும், பிரமநாயகம்பிள்ளை மற்றும் மரகதம் ஆகியோரின் அன்பு மருமகனும், விஜயராஜா மற்றும் காலஞ்சென்ற சுமதியின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற விஜயசங்கர் மற்றும் யாழினி (UK), சுமன் (UK) ஆகியோரின் அன்பு பேரனும், காலஞ்சென்றவர்களான சிவமணி, நாகேஸ்வரி, சாரதா, ரூபசிங்கம், இரத்தினசிங்கம் மற்றும் பரமேஸ்வரி (UK) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான பாக்கியலட்சுமி, தயாபரன் மற்றும் அமராவதி, கண்ணபிரான் (UK) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் வீரசிங்கம் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (22.03.2018) வியாழக்கிழமை மாலை 3.00 மணியளவில் அன்னாரது தற்காலிக வதிவிடமான இல.259, பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.259, பருத்தித்துறை வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தகவல்:-**
**மனைவி-ஈஸ்வரி (ஈசு)**

(3321)

## யாழ்.போதனா வைத்தியசாலையிலுள்ள சிற்றுண்டிச்சாலையை ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல் 09.04.2018 தொடக்கம் 31.03.2020 வரை

யாழ்.போதனா வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைகள் குழுத் தலைவர் தகுதியான/ தகைமை வாய்ந்த சிற்றுண்டிச்சாலை நடாத்துனர்களிடமிருந்து 09.04.2018 தொடக்கம் 31.03.2020 வரையான காலப்பகுதிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலையினை நடாத்துவதற்கு முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

1. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இவ் வைத்தியசாலையில் கிடைக்கும் "கேள்வி கோரும் ஆவணங்களைப் பெறுவதற்கான விண்ணப்பம்" என்ற படிவத்தினை பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 2000/= காசாக அலுவலக காசாளரிடம் செலுத்தி பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாட்களில் 23.03.2018 தொடக்கம் 03.04.2018 வரையான காலப்பகுதியில் (மு.ப) 9.00 மணி தொடக்கம் (பி.ப) 3.00 மணிவரை (பி.ப 12.30 தொடக்கம் பி.ப 1.00 மணி தவிர்ந்து) நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

2. கேள்வி தொடர்பான முன்னோடிக் கூட்டம் 2018.04.03ஆம் திகதி காலை 10.00 மணிக்கு பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெறும்.

3. கேள்விதாரர்கள் மீளளிக்கப்படக்கூடிய வைப்புக்கட்டணமாக (Bid Bond) ரூபா 50,000/=ஐ அலுவலகத்தில் செலுத்தி அதனுடைய பற்றுச்சீட்டின் மூலப்பிரதியையும் கேள்வி விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

4. விண்ணப்பப்படிவங்களை பெறவரும் போது உணவகத்திற்குரிய வியாபார பெயர்ப்பதிவுச் சான்றிதழின் (Business Registration) பிரதியையும், குறித்த உள்ளூராட்சி அதிகார சபையினால் வழங்கப்பட்ட வியாபார அனுமதிப்பத்திரத்தின் பிரதியினையும் மற்றும் சுகாதாரப் பகுதியினால் வழங்கப்பட்ட "A" அல்லது "B" தரச் சான்றிதழின் பிரதியையோ அல்லது அதனை உறுதிப்படுத்தக் கூடிய ஏனைய சான்றிதழின் பிரதியையோ கட்டாயம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

5. விலைக்கேள்விகள் 04.04.2018 திகதி (பி.ப) 03.00 மணிக்கு முன்பதாக இவ் போதனா வைத்தியசாலையின் கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கேள்விகள் கேள்வி நேரமுடிவில் விலைக்கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.

6. சமைத்த உணவுகளை வழங்குவதற்காக தாங்கள் பயன்படுத்தப்படும் சமையற்கூடமானது வைத்தியசாலையிலிருந்து 10 கி.மீ உட்பட்டிருப்பதுடன் உரிய தகுதி விதிகளைப் பூர்த்தி செய்துள்ளதா என்பது தொழில்நுட்பமதிப்பீட்டுக் குழுவின் நேரடி பரிசோதனை மூலம் மதிப்பீடு செய்யப்படும்.

7. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும் விலைக் கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கீழ்க்காட்டப்பட்ட முகவரியில்/தொலைபேசி இலக்கத்துடன் 021 2222261 (Exchange No 201) தொடர்பை ஏற்படுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

8. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு பிராந்திய பெறுகைகள் குழுவிற்கு அதிகாரமுள்ளது.

9. மேற்படி வைத்தியசாலையின் சிற்றுண்டி உணவகத்தை நடாத்த விண்ணப்பம் செய்யும் எவரும் வைத்தியசாலையினால் உறுதிப்படுத்தும் தரத்திலும் அளவுகளிலும் உணவுப்பண்டங்களை வழங்குவதுடன் ஒப்பந்தகாலப்பகுதியில் இடையறாத சேவையினை வழங்க வேண்டும்.

**தலைவர்/ பணிப்பாளர்**
**போதனா வைத்தியசாலை**
**யாழ்ப்பாணம்.**

(சி-1953)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 2221 7603, 021 567 1532

### கலட்டி மெ.மி.த.க பாடசாலை விளையாட்டுப் போட்டி நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கலட்டி மெ.மி.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு இடம்பெறும். இந் நிகழ்வில் நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எவ்.எக்ஸ்.அன்ரன் பிரதம விருந்தினராகவும் இலங்கை வங்கி திருநெல்வேலி கிளையின் முகாமையாளர் திருமதி யாமளை தனேஷ் சிறப்பு விருந்தினராகவும் மிலேனியம் இயக்குநர் சீ.சுகுமாரன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம)


### தேவை

முல்லைத்தீவில் இயங்கும் உணவகத்திற்கு கொத்து, றைஸ், அப்ப வேலைகள் தெரிந்த பாஸ்மார் மற்றும் வெயிற்றர் தேவை.

தொடர்புகளுக்கு:
0775360958

(சி-1956)



### பிரத்தியேக ஆசிரியர் தேவை

நெல்லியடி நாவலர்மடம் பகுதியில் வசிக்கும் தரம் 5இல் கல்வி கற்கும் மாணவருக்கு வீட்டில் வந்து கற்பிக்கக்கூடிய ஆசிரியர் தேவை. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:
0702202209

(இ)


### 41ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**செல்வரட்ணம் சுரேஸ்குமார்**

மாகியப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் படித்த மகளிர் திட்டம் மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரட்ணம் சுரேஸ்குமார் கடந்த 11.02.2018 ஞாயிறு அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் மரணச் சடங்கில் கலந்து கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் நேரில் வந்தும் தொலைபேசி மூலமாகவும் முகப்புத்தகம் மூலமாகவும் ஆறுதல் தெரிவித்த அனைத்து உறவுகளுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் நாளை (23.03.2018) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் ஆன்மா இளைப்பாற்றிக்காக பழைய வாய்க்கால் புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு அதனை தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-1957)

படித்த மகளிர் திட்டம்
பாம் மிருசுவில்.

-குடும்பத்தினர்

### நல்லை மங்கையர்க்கரசி ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றாள்

எமது வித்தியாலயத்தின் பெருமை மிகு பழைய மாணவர் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானதேசிக பரமாச்சாரிய சுவாமிகளின் அன்புத் தாயார்

**அமரர் பார்வதி நாகலிங்கம்**

அவர்களின் 31ஆம் நாள் அமரத்துவப் பிரார்த்தனையில் நாமும் கலந்து கொண்டு அன்னையின் ஆத்மா நல்லை முருகனின் தாள் சேர வேண்டுதல் செய்கின்றோம்.



(C-1955)

2018.03.22 யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்

# சிறுமி சங்கீதாவின் கண்ணீருக்கு மனிதாபிமான நீதி வேண்டும்

## நாடாளுமன்றில் டக்ளஸ் கோரிக்கை



(கொழும்பு)

மனைவியின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டிருந்த் அரசியல் கைதியான சுதாகரனின் 10 வயது பெண் குழந்தை, தாயை இழந்த நிலையில், செய்வதறியாது தந்தையுடன் சிறைச்சாலை வாகனத்தில் ஏறிய பரிதாபம் எமது மண்ணில் தொடரக் கூடாது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற நம்பிக்கைப் பொறுப்புக்கள் திருத்தச் சட்டமூலம், நீதித்துறை சட்டம், சட்டக் கல்விப் பேரவை தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2008ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு, ஆயுள் தண்டனை வழுங்கப்பட்டு, கொழும்பு மகசீன் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கிளிநொச்சி, மருதபுரம் பகுதியைச் சேர்ந்த ஆனந்தசுதாகரன் என்பவரது மனைவி, கணவனின் பிரிவுத் துயரங்கள் மற்றும் குடும்ப சூழ்நிலைகள் காரணமாக நோய்வாய்ப்பட்ட நிலையில் கடந்த 15 ஆம் திகதி உயிரிழந்துள்ள நிலையில் 3 மணி நேர அவகாசம் வழங்கப்பட்டு, மனைவியின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டிருந்த சுதாகரின் 10 வயது பெண் குழந்தை தாயும் அற்ற நிலையில், செய்வதறியாது தந்தையுடன் சிறைச்சாலை வண்டியில் ஏறிய பரிதாபமும் எமது மண்ணில் நடந்தேறியிருக்கின்றது.


அதுமட்டுமன்றி புலிகள் இயக்கத்திற்கு வாகனங்களைப் பெற்றுக் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டில் கடந்த 2008 ஆண்டு பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி கைது செய்யப்பட்டு, கொழும்பு மகசீன் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வவுனியாவைச் சேர்ந்த 70 வயதுடைய சண்முகநாதன் தேவகன் என்ற முதியவரது வழக்கு நீர்கொழும்பு நீதிமன்றத்தில் நடைபெற்று, கடந்த வருடம் இவருக்கு 2 வருடங்கள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டிருந்த நிலையில், சட்டமா அதிபர் திணைக்களம் இவர்மீது இன்னுமொரு வழக்கினை தாக்கல் செய்திருந்தது. இந்த நிலையில் நோய்வாய்ப்பட்டிருந்த இவர் கடந்த 12 ஆம் திகதி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு, கடந்த 16ஆம் திகதி உயிரிழந்த பரிதாபச் சம்பவமும் நடந்துள்ளது.

இந்த நிலையில் 2 பேர் 22 வருடங்களாகவும், 3 பேர் 18 வருடங்களாகவும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும், ஒரு சிலரது வழக்குகள் கிடப்பில் போடப்பட்டுள்ளதாகவும், இவர்களது வழக்குகள் நடைபெறாததன் காரணமாக அடுத்த கட்டமாக தங்களுக்கு என்ன நடக்கும் என்பது புரியாமலேயே தாங்கள் நிலை குழம்பிப் போயுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அங்கு இடம்பெறுகின்ற பல்வேறு கெடுபிடிகள், சித்திரவதைகள் காரணமாக உள மற்றும் உடல் ரீதியில் பாதிக்கப்பட்டு 9 பேர் உயிரிழந்துள்ளதாகவும் ஏனைய கைதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்நிலையில் தங்களது வழக்குகள் விசாரணை செய்யப்பட்டு, முடிவுகள் ஏதேனும் வருமா? அல்லது நீதிமன்ற விசாரணைகள் இன்றிய நிலையில் எதுவுமே அறியக் கிடைக்காமல், வாழ்நாள் முழுவதையும் சிறையிலேயே கழிக்க நேரிடுமா? என்ற திக்கற்ற நிலையில் இந்த தமிழ் அரசியல் கைதிகள் தவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

எனவே, தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினை தொடர்பில் விரைந்த சாதகமான ஏற்பாடுகள் தேவை என்பதையே நான் மீண்டும், மீண்டும் இங்கு வலியுறுத்த விரும்புகின்றேன் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)




# நாட்டின் பொருளாதாரம் 2017இல் சிறந்த வளர்ச்சி

## மத்திய வங்கியின் ஆளுநர் தகவல்

(கொழும்பு)

கடந்த ஆண்டு நாட்டின் பொருளாதாரத்தில் சிறப்பான வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்தார்.



கொழும்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

'நாட்டின் நிதி உள்ளடக்கத்தை அதிகரிப்பதற்கு மத்திய வங்கி பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன், நிதி நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டமையும் முக்கிய அம்சமாகும்.

கொடுக்கல்-வாங்கலில் ஈடுபடுவோருக்கு தேவைப்படும் வசதிகளை வழங்குவது மத்திய வங்கியின் இலக்காகும். கடன் பெறுவதை இலகுவாக்குமாறு உரிய தரப்புக்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

நுண்கடன் மற்றும் சிறிய, நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு கடன் வழங்கும் முறைமையை ஊக்குவிக்குமாறும் மத்திய வங்கி வலியுத்தியிருக்கின்றது' என மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி மேலும் தெரிவித்தார். (இ-7)

## ராஜபக்ஷக்களைப் பழிவாங்கவே விசேட நீதிமன்றக் கட்டமைப்பு

(கொழும்பு)

ராஜபக்ஷக்களைப் பழி வாங்குவதற்காகவே விசேட நீதிமன்ற கட்டமைப்பு சட்ட மூலத்தை அரசாங்கம் நாடாளுமன்றில் சமர்ப்பித்துள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பொரளை என்.எம். பெரேரா நிலையத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## பிரதமருக்கு எதிரான பிரேரணைக்கு நான் ஆதரவளிக்க இணங்கவில்லை

### துமிந்த மறுப்பு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக மகிந்த அணி கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிப்பது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இணக்கப்பாடு எட்டப்படவில்லை என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார். ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-7)

## ஜனாதிபதி இன்று பாக். பயணம்

(கொழும்பு)

பாகிஸ்தான் ஜனாதிபதி மம்னூன் ஹுசைனின் அழைப்பின் பேரில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாகிஸ்தானின் தேசிய தினத்தில் கலந்து கொள்வதற்காக இன்று 22 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பாகிஸ்தானுக்கு மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்கிறார்.

இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி மைத்திரி பாகிஸ்தான் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஷாஹித் கான் அப்பாசி ஆகியோருடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளதுடன், நான்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்களைக் கைச்சாத்திடும் நிகழ்விலும் பங்குபற்றவுள்ளார். (இ-7)

# பிழையான சட்டத்தால் தமிழர்களின் வாழ்க்கை நிர்க்கதியில்

## நாடாளுமன்றில் சாள்ஸ் கடும் கண்டனம்

(கொழும்பு)

இலங்கையில் நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தின் விளைவு கொடூரமானதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார். பிழையான இச்சட்டத்தால் தமிழ் இளைஞர்கள் பலர் சிறையில் வாடுகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நீதித்துறை சட்ட ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கடந்த 2008ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட சச்சிதானந்தம் ஆனந்த சுதாகரன் என்ற அரசியல் கைதியின் மனைவி கடந்த வாரம் கிளிநொச்சியில் உயிரிழந்தார்.



இதனையடுத்து அவரது பிள்ளைகள் நிர்க்கதியாகியுள்ளனரென சபையில் சுட்டிக்காட்டிய சாள்ஸ் நிர்மலநாதன், குழந்தைகள் மீது பாசத்தை பொழியும் ஜனாதிபதி, இச்சிறார்களின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு ஆனந்தசுதாகரனுக்கு பொது மன்னிப்பு வழங்க வேண்டுமென கோரிக்கை விடுத்தார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கி சர்வதேச நியமங்களுக்கு ஏற்ற வகையில் புதிய சட்டமொன்று கொண்டுவரப்படுமென ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கடந்த 2015ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கம் வழங்கிய உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லையென்றும் சாள்ஸ் நிர்மலநாதன் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில், பயங்கரவாத தடைச்சட்டம் எப்போது நீக்கப்படும் என்பதை நீதியமைச்சு உடன் அறிவிக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

## ஸ்கொட்லாந்தின் உலகக் கிண்ண கனவு மழையுடன் கலைந்தே போனதே...

# இங்கிலாந்தில் மட்டை விசுக்க மேற்கிந்தியத் தீவுகள் ரெடி

மழையின் குறுக்கீட்டுடன் வந்த டக்வொர்த் லூயிஸ் விதியால் ஸ்கொட்லாந்தை 5 ஓட்டங்களால் வெற்றி கொண்ட மேற்கிந்தியத் தீவுகள் அணி, உலகக் கிண்ண தகுதிச் சுற்றுப் போட்டிகளின் இறுதிக்கு தகுதி பெற்றதுடன், இங்கிலாந்தில் (2019) நடக்கும் பிரதான தொடருக்கும் ஜோராக முன்னேறியது.

உலக கிண்ண கிரிக்கெட் தகுதிச்சுற்றில், 'சுப்பர்-6' போட்டிகள் தற்போது நடக்கின்றன.

இதில் நேற்று நடந்த முக்கிய போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் (6 புள்ளி), ஸ்கொட்லாந்து (5) அணிகள் ஹராரேயில் மோதின.

இதில் வெல்லும் அணி, உலக கிண்ண தொடருக்கு தகுதிபெறலாம் என்ற நிலையில்,

நாணயச் சுழற்சியில் வென்ற ஸ்கொட்லாந்து, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு 'சீனியர்' கெய்ல், ஆட்டத்தின் முதல் பந்திலேயே 'டக்' அவுட்டாகி அதிர்ச்சி கொடுத்தார்.

அடுத்து வந்த சாய் ஹோப்பும் (0) ஏமாற்ற, மேற்கிந்தியத் தீவுகள் 2 ஓட்டங்களுககு 2 விக்கெட்டுக்களை இழந்து சறுக்கல் ஆரம்பம் கண்டது.

எனினும் ஆரம்ப வீரர் லீவிஸ் (66), சாமுவேல்ஸ் (51) அரைச்சதம் அடிக்க பின்வரிசையில் கார்லேஸ் பிராத்வைட் (24) சற்று உதவ; மேற்கிந்தியத் தீவுகள் 48.4 ஓவர்களில் 198 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் பறிகொடுத்தது.


பந்துவீச்சில் ஸ்கொட்லாந்து அணி சார்பில் சரீப், வீல் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை கைப் பற்றினர்.

இலகுவான வெற்றி யிலக்கை நோக்கி களமிறங்கிய ஸ்கொட்லாந்து அணி, சீரான இடைவெளியில் விக்கெட்டுக்களை இழக்க, நிலைமை மோசமானது.

இந்நிலையில் அணி 35.2 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 125 ஓட்டங்களை எடுத்திருந்தபோது மழை குறுக்கிட, 'டக் வோர்த்' லீவிஸ் விதிப்படி ஸ்கொட்லாந்து அந்நேரத்தில் 130/5 ஓட்டங்கள் எடுத்திருக்க வேண்டும்.

இதனால், மேற்கிந்தியத் தீவுகள் அணி 5 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இவ்வெற்றி மூலம் புள்ளிக் கணக்கை 8ஆக அதிகரித்த மேற்கிந்தியத்தீவுகள் எதிர்வரும் 25ம் திகதி நடக்கும் தொடரின் இறுதிக்கு முன்னேறியதுடன், 2019ல் இங்கிலாந்தில் நடக்கவுள்ள உலகக் கிண்ண தொடருக்கும் தகுதி பெற்றது.



# இதுவும் கடந்து போகும்...

## சோகத்தில் விஜய் சங்கர்



முத்தரப்பு தொடரின் இறுதி எனக்கான நாளாக அமையவில்லை. இதனை மறக்க முடியாமல் நெஞ்சம் தவிக்கிறது. 'ஹீரோ' வாக உருவெடுக்க கிடைத்த அரிய வாய்ப்பை வீணடித்து விட்டேன் என விஜய் ஷங்கர தெரிவித்தார்.

இந்திய அணி இளம் வீரர் விஜய் ஷங்கர், (வயது-27), தமிழகத்தின் சகல துறை வீரரான இவர், சமீபத்தில் கொழும்பில் நடந்த முத்தரப்பு 'ரி20' தொடரில் பங்கேற்றார்.

பங்களாதேசுக்கு எதிரான இறுதியில் களமிறங்கிய இவர், கடைசி கட்டத்தில் ஆமை வேகத்தில் ஆடினார். முஷ்டபிசுர் வீசிய 18 ஆவது ஓவரில் தொடர்ந்து 4 பந்துகளில் ஓட்டம் எதுவும் எடுக்கவில்லை. மொத்தம் இப்போட்டியில் 19 பந்துகளில் 17 ஓட்டங்கள் மட்டும் எடுத்தார்.

இவரைவிட மற்றொரு தமிழக வீரர் தினேஷ் கார்த்திக் அதிரடியாக விளையாடி, இந்தியா கிண்ணம் வெல்ல காரணகர்த்தாவாக விளங்கினார்.

**விமர்சனம் முக்கியம்**

இது குறித்து விஜய் ஷங்கர் கூறியதாவது,

நான் சற்று வருத்தமாக இருந்ததால், பெற்றோர் மற்றும் நண்பர்கள் எதுவும் பேசவில்லை. சிலர், 'சமூக வலைதளத்தில் வெளியிடப் படும் செய்தி குறித்து கவலை வேண்டாம்,' என. எஸ்.எம்.எஸ்., அனுப்பினர். இப்படி எனக்கு ஆறுதல் கூறினாலும், எந்த பயனும் இல்லை. இந்திய அணிக்காக விளையாடும்போது, சமூகவலைதளத்தில் வரும் விமர்சனத்தை எதிர் கொண்டு தான் ஆக வேண்டும். நான் வெற்றிக்கு கைகொடுத்திருந்தால் இந்த கடுமையான எதிர்ப்பு தலைகீழாக மாறி இருக்கும். ஒரு வீரராக முன்னேற்றம் காண, இம்மாதிரியான விமர்சனமும் முக்கியம்.

**மனம் உடைந்தது**

ஒருவேளை, முதலிரண்டு பந்திலேயே நான் ஆட்டமிழந்து இருந்தால், யாருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்பட்டிருக்காது. ஆனால், சில நேரங்களில், சவாலை சந்தித்துதான் ஆக வேண்டும். என்னை தற்காத்துக் கொள்ள எண்ணவில்லை. ஒரு 'ஹீரோ வாக' மாறி இருக்கக்கூடிய வாய்ப்பு கிடைத்தது. சிறப்பாக செயல்பட்டு, அணிக்கு வெற்றி தேடிக் கொடுத்திருக்க வேண்டும். என்னால் முடியவில்லையே என வருத்தப்பட்டேன். போட்டி முடிந்ததும் கிண்ணம் வென்ற உற்சாகத்தில் ஒவ்வொரு வீரரும் இருந்தனர். நான்மட்டும்மனம உடைந்து போய் இருந்தேன்.

**மறப்பது கடினம்**

ஒட்டுமொத்தமாக பார்த்தால், முத்தரப்பு 'ரி20' தொடர நன்றாகவே அமைந்தது. இறுதிப் போட்டி நடந்த நாள் மட்டும் எனக்கானதாக அமையவில்லை. இதை கடந்து செல்ல வேண்டும் என எண்ணுகிறேன். இருப்பினும், மறப்பதற்கு கடினமாக உள்ளது. சையது முஷ்டாக் மற்றும் விஜய் ஹசாரே டிராபியில், ஒவ்வொரு பந்திற்கும் ஓட்டம் எடுத்துவிடுவேன். பங்களாதேசுக்கு எதிரான இறுதியில், ஒரு ஓட்டம் எடுத்து விட்டு, ஸ்டிரைக்கை எதிர்முனையில் இருக்கும் வீரருக்கு கொடுத்திருக்க வேண்டும். மாறாக பந்தை விளாச முடிவு செய்ததுதான் பிரச்சினைக்கு காரணம். இந்திய அணி தேர்வு குறித்து கவலைப்படவில்லை. ஐ.பிஎல், தொடரில் டில்லி அணிக்காக களமிறங்க உள்ளேன். இதில் மட்டும்தான் தற்போது கவனம் உள்ளது. இவ்வாறு விஜய் ஷங்கர் கூறினார்.

## மஞ்சள் நிறத்தில் 'தல' தோனி

ஐ.பி.எல்., தொடருக்காக தோனி தனது தலை முடியை மஞ்சள் நிறத்துக்கு மாற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.


இந்திய அணியின் முன்னாள் தலைவர் தோனி (வயது-36), இவர் அறிமுகமானபோது, நீண்ட தலைமுடியுடன் காணப்பட்டார். 2008ல் அவுஸ்திரேலிய தொடரில் சாதாரண ஸ்ரைலுக்கு மாறினார். அடுத்து 2011ல் உலக கிண்ண தொடர வென்றதும், மொட்டைத் தலைக்கு மாறினார். பிறகு, 2013 ஐ.பி.எல்., தொடரின் போது, 'மொஹாக்' என்ற கீரிப்புள்ள ஸ்ரைலில் களமிறங்கினார்.

இதனிடையே, இரு ஆண்டு தடைக்குப் பின், ஐ.பி.எல்., தொடரில்சென்னை அணி களமிறங்குகிறது. இதனை கொண்டாடும் வகையில், சென்னை அணித் தலைவராக உள்ள தோனி, தனது தலை முடிக்கு மஞ்சள் நிற 'ஹேர் டை' அடித்து களமிறங்குவார் என எதிர் பார்க்கப்படுகிறது.

இதுகுறித்து தோனியின் 'ஹேர் ஸ்டைலிஸ்ட்' ஆக உள்ள சப்னா பவானி, இவருடன் எடுத்த பல்வேறு போட்டோ, வீடியோக்களை சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ளார். இதுகுறித்து வெளி யிட்ட 'டுவிட்டர்' செய்தியில்,' மும்பை அணிக்கு எதிரான முதல் ஐ.பி.எல்., போட்டியில், தோனி மஞ்சள் நிற 'ஹேர் ஸ்ரைலில்' இருக்க வேண்டும்,' என, தெரிவித்துள்ளார்.

## மகளிர் முத்தரப்பு

# முத்திரை பதிக்குமா இந்தியா?



மகளிர முத்தரப்பு 'ரி20' தொடர இந்தியாவில் இன்று ஆரம்பமாகிறது.

இதன் முதலாவது லீக் போட்டியில் இந்தியா - அவுஸ்திரேலியா அணிகள் மும்பையில் மோதுகின்றன.

இதில் இந்திய அணி அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி தொடரை வெற்றியுடன் ஆரம்பிக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

இதில் ஒவ்வொரு அணியும் மூற்றைய அணிகளுடன் தலா இரண்டு முறை மோதும். லீக் சுற்றின் முடிவில் புள்ளிப்பட்டியலில் முதலிரண்டு இடங்களை பிடிக்கும் அணிகள், எதிர்வரும் 31ஆம் திகதி நடக்கும் இறுதிப் போட்டியில் மோதும்.

**மிதாலி எழுச்சி**

சமீபத்தில், அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை முழுமையாக இழந்த சோகத்தில் உள்ள இந்திய அணி, தென்னாபிரிக்க மண்ணில் நடந்த 5 போட்டிகள் கொண்ட 'ரி20' தொடரை 3-1 எனக் கைப்பற்றி இருப்பது ஆறுதலான விடயம்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில், 2 அரைச்சதம் உட்பட 131 ஓட் டங்கள் எடுத்த மந்தனா, மீண்டும் அசத்தலாம். அணித தலைவி ஹர்மன் பிரீத் கவுர், மிதாலி ராஜ் எழுச்சி கண்டால் நல்லது.

நடுத்தர வரிசையில்வேதா, பூஜா உள்ளிட்டோர் கைகொடுத்தால் சுலப வெற்றி பெறலாம். மும்பையை சேர்ந்த ஜெமிமா ரோட்ரிக்ஸ், நல்ல ஆரமபம் தர முயற்சிக்கலாம்.

அனுபவ யூலான் கோஸ்வாமி, அணிக்கு திரும்புவது வேகப்பந்துவீச்சின் பலத்தை அதிகரிக்கும்.

சமீபத்திய ஒருநாள் தொடரில் 5 விக்கெட் கைப்பற்றிய ஷிகா பாண்டே, மீண்டும் கைகொடுக்கலாம். தென்னாபிரிக்க மண்ணில் 'சுழலில்' அசத்திய பூணம் யாதவ் (5 விக்கெட்), தீப்தி சர்மா (2) விக்கெட்வேட்டை நடத்தலாம்.

**அலிசா நம்பிக்கை**

சமீபத்தில் முடிந்த ஒரு நாள் தொடரில் இந்தியாவை 'வைட் வோஷ்' செய்த உற்சாகத்தில் அவுஸ்திரேலிய அணி உள்ளது.

மூன்றாவது ஒருநாள் போட்டியில் சதம் கடந்து கைகொடுத்த அலிசா ஹீலியின் ஓட்ட வேட்டை தொடரலாம்.


ஒருநாள் தொடரில் பெரிய அளவில் சோபிக்காத அணித் தலைவி மேக் லான்னிங், துடுப்பாட்டத்தில் எழுச்சி காணலாம்.

ஒருநாள் தொடரில் 8 விக்கெட்டுக்கள் கைப்பற்றிய 'சுழல்' வீராங்கனை ஜெஸ் ஜோனாசன், இந்திய வீராங்கனைகளுக்கு தொல்லை கொடுக்கலாம். இவருக்கு, மற்றைய சுழற்பந்துவீச்சாளர்களான அமன்டா-ஜாடே வெலிங்டன், ஆஷ்லீக் கார்ட்னர் ஒத்துழைப்பு கொடுத்தால் சுலப வெற்றி பெறலாம்.



ஆஸிக்கு எதிராக இன்று கேப் டவுணில் ஆரம்பமாகும் 3வது டெஸ்டுக்கான பயிற்சியில் தென்னாபிரிக்க வீரர்கள்...

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை







# உலக நீர் தினம் 22.03.2018

ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை அரசின் நிதிப்பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்டு வரும் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தினூடாக இனங்காணப்பட்ட இடங்களுக்கு

## 2020 இல் சுத்தமான குடிநீர்



- திட்டச்செலவு (மீளமைக்கப்பட்ட பின்பு) - 40,432 மில்லியன் ரூபாய் (266 Mn USD)
- பயனாளிகள் : குடிநீர் வழங்கல் - 300,000 பேர், விவசாயிகள் - 55,000 பேர்

## நீர்த்தாங்கி அமையும் இடங்கள்



- கட்டுடை
- வட்டுக்கோட்டை
- காரைநகர்
- மீசாலை
- நாவற்குழி
- கொடிகாமம்
- பளை
- பழைய பூங்கா (யாழ். மாநகரம்)
- நல்லூர்
- புத்தூர்
- ஊர்காவற்றுறை
- வேலணை
- புங்குடுதீவு
- பூநகரி
- மண்டைதீவு
- கரவெட்டி
- பொம்மைவெளி (யாழ். மாநகரம்)
- நயினாதீவு
- அனலைதீவு
- எழுவைதீவு

நீர் இன்றி அமையாது இவ் உலகு

குடிநீர் வழங்குவது பொதுநலக்கடமை!
நன்னீர் பெறுவது தனி மனித உரிமை!

எதிர்காலத்தின் தேடுதலாக நீர் அமையாதிருக்க திட்டமிட்டு உபயோகிப்போம்,
எதிர்கால சந்ததியினருக்கு பாதுகாப்புடன் கையளிப்போம்

நீர் வளத்தைப் பாதுகாத்து மேம்படுத்துவோம்

மழை நீரை சேகரிப்போம்

### யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட சமூகமயப்படுத்தப்பட்ட கிராமிய நீர் வழங்கல் திட்டத்தினூடாக (JFPR Grant - 9154 SRI) நடைபெற்று முடிந்த வேலைத்திட்டங்கள்

திட்ட செலவு 248 மில்லியன் ரூபாய்

- மாதகல், சாந்தை, வட்டக்கச்சி மற்றும் அக்கராயன் பகுதிகளில் புதிதாக கிணறு, நீர்த்தாங்கி அமைக்கப்பட்டு நீர்வழங்கல் சேவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
- நீர்த்தாங்கி பவுசர் வழங்கப்பட்டது.
- நெடுந்தீவுப் பகுதியில் 26 மழை நீர் சேகரிப்புத் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன.
- நெடுந்தீவில் கடல்நீர் சுத்திகரிப்பு ஆலை, 02 நீர்த்தாங்கிகள் என்பன அமைக்கப்பட்டு மக்களுக்கு பாதுகாப்பானதும் சுத்தமானதுமான குடிநீர் வழங்கப்படுகின்றது.
- பயனாளிகள்:
  நீர் வழங்கல் - 3623 குடும்பங்கள்,
  சுகாதாரம் - 611 குடும்பங்கள்
  பயிற்சி - 2500 குடும்பங்கள்,
  காசுக்கான வேலைத்திட்டம் - 1000 பேர்





### நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைத்திட்டங்கள்

அலகு : 1

நிறைவேற்றுநர்:

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு

செயற்படுத்துநர்:

நீர்ப்பாசனத்திணைக்களம், வட மாகாணசபை

- இரணைமடு அணைக்கட்டு மேம்படுத்தல் திட்ட வேலைகள் முடிவுறும் நிலையிலுள்ளன.
- ஏற்று நீர்ப்பாசன கட்டமைப்பு புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.



அலகு : 2

நிறைவேற்றுநர்:

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு

செயற்படுத்துநர்:

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

- நீர்த்தாங்கிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.
- குடிநீர் விநியோகத்திற்கான குழாய் பதிக்கும் வேலைகள் நடை பெற்று வருகின்றன.
- கடல்நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- யாழ். மாநகர சபை கழிவகற்றல் திட்டத்திற்கான திட்ட வடிவமைப்பு நிறைவடைந்துள்ளது. திட்டத்திற்கான நிதி பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.




திட்ட அமுலாக்கப் பணிமனை
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டம்

# 'வெள்ளியில் ஞாயிறு' திருப்பாடுகளின் காட்சி இன்று ஆரம்பமாகின்றது

(யாழ்ப்பாணம்)

கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்குகின்ற மாபெரும் அரங்க ஆற்றுகையான 'வெள்ளியில் ஞாயிறு' திருப்பாடுகளின் காட்சி இன்று 22ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை நான்கு நாட்களுக்கு இல. 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் இடம்பெறவுள்ளது.

வியாழன், சனி, ஞாயிறு தினங்களில் மாலை 6.45 மணிக்கு ஆரம்பமாகும் திருப்பாடுகளின் காட்சி வெள்ளிக்கிழமை மட்டும் மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. பிரமாண்டமான அரங்க அமைப்பு, காட்சியமைப்பு, இசையமைப்பு, ஒலி, ஒளி போன்றவற்றுடன் அரங்கிலும் அரங்கப் பின்னணியிலுமாக இருநூறுக்கும் அதிகமான கலைஞர்களுடன்மேடையேற்றப்படவுள்ளது. (இ-7)

# மா சேரி -குடத்தனை வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(வரணி)

வரணி மாசேரி ஊடாகக் குடத்தனை செல்லும் இரண்டு கிலோமீற்றர் நீள வீதியானது பல வருடங்களாக செப்பனிடப்படாது குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான இவ் வீதியானது பல வருடங்களாகச் செப்பனிடப்படாமையால் இவ்வீதியால்பயணிக்கும் விவசாயிகள், மீன் வியாபாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் அசௌகரியத்திற்குஉள்ளாகின்றனர். தென்மராட்சியையும் வடமராட்சி கிழக்கையும் இணைக்கும்வீதியாகவும்காணப்படுகின்றமையால் இந்த வீதியை அதிகளவான மக்கள் பயன்படுத்துகின்றனர்.

மழை காலத்தில் இந்த வீதிக்கு மேலாக தண்ணீர் பாய்ந்து செல்வதனால் மக்கள் இவ்வீதியைப் பயன்படுத்தாமல் மிகவும் நீண்டதூரம் பயணித்து கொடிகாமம்- பருத்தித்துறை வீதியின் ஊடாக தென்மராட்சி பிரதேசத்தை அடைந்துதமது தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்கின்றனர்.

ஆகவே மழைகாலம் தொடங்குவதற்கு முன்பாக இவ் வீதியைப் புனரமைத்து விவசாயிகள், மீன் வியாபாரிகள், பொதுமக்கள் போன்றோரின் இலகுவான பயணத்திற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளிடம் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-103)

# கழிவுகள் குறித்து மக்கள் விசனம்



(கரணவாய்)

மாவீரர் லெப்டினன் சங்கரின் நினைவுத்தூபிக்கு அருகாமையில் கழிவுகள் கொட்டப்பட்டுள்ளமை தொடர்பில் எவரும் கண்டுகொள்ளவில்லை என பொது மக்களால் விசனம் வெளியிடப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் அமைப்பின் முதல் மாவீரரான லெப்டினன்சங்கர் எனும்கம்பர்மலையைச் சேர்ந்த சந்தியநாதனின் நினைவுத்தூபி உடுப்பிட்டி பகுதியில் உள்ள கம்பர் மலைச் சந்தியில் அமைக்கப்பட்டிருந்தது.

இந் நினைவுத் தூபியில் மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

கடந்த முறை அந் நினைவுத்தூபி வர்ணங்கள் பூசப்பட்டு காணப்பட்டது.

அந் நினைவுத்தூபிக்கு அருகாமையில்கழிவுகள்தொடர்ந்தும் கொட்டப்படுகிறது.

எனவே பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இது விடயத்தில் கவனம் செலுத்தி கொட்டப்பட்ட கழிவுகளை அகற்றுவதுடன் இனி வரும் காலத்தில் கழிவுகள் கொட்டப்படாமல் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-60)

# உலக மகளிர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபை பொதுநூலகத்தின் ஏற்பாட்டில் உலக மகளிர்தினம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வலி. தெற்கு பிரதேசசபை தலைமை அலுவலக மண்டபத்தில் உடுவில் உப அலுவலக பொறுப்பதிகாரி கண்மணி உமாகரன் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக உடுவில்பிரதேசசெயலகபெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கேதார கௌரி ழதிவர்ணன், சிறப்பு விருந்தினர்களாக வலி. தெற்கு பிரதேச சபை செயலாளர் திரு நாவுக்கரசு சுதர்சன், உடுவில் வலி. தெற்கு பிரதேச சபைஉப அலுவலகஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர் திருமதி கிளமென்ரீனா ஷார்லி விஜினாட் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

# பலநாட்கலம் கொள்வனவுக்கு 50 வீத மானியம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

பலநாட்கலம் கொள்வனவு செய்வதற்காக 50 வீத மானியம் வழங்குவதற்கு கடற்றொழில் திணைக்களத்தால் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

ஆழ்கடல் மீன்பிடியை ஊக்குவித்து மீன் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் 55 அடிக்கு மேற்பட்ட பலநாட்கலம் ஒன்றை கடற்றொழில் திணைக்களத்தில் பதிவு செய்த வள்ளச்சாலையொன்றில் உற்பத்திசெய்து கொள்வனவு செய்வதற்கு 50 வீத மானியம் வழங்க கடற்றொழில் திணைக்களத்தால் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

எதிர்வரும், ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதிக்கு முன்னர் குறித்த விண்ணப்பப்படிவத்தினை அந்தந்த பகுதி கடற்றொழில் பரிசோதகரிடம் அல்லது யாழ்.மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தில் பெற்று விண்ணப்பிக்குமாறு யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வள திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஜே.சுதாகரன் அறிவித்துள்ளார். (இ-9)

# வீதியின் மருங்கில் வீசப்படும் கோழிக்கழிவுகளால் சிரமம்



(கரணவாய்)

வீதியின்மருங்கில்கொட்டப்படும்கோழிக்கழிவுகளால்பொதுமக்கள் பயணம்மேற்கொள்ள முடியாத அளவிற்கு துர்நாற்றம் வீசுவதாக தெரிவிக்கப்படுகிறது.

பருத்தித்துறை-மருதங்கேணி வீதியில் வல்லிபுரம் சந்திக்கும் வலிகண்டிக்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள வீதியோரமாக கோழிகளின் கழிவுகள்கொட்டப்படுகின்றன.

இவ்வாறு கொட்டப்படும் கழிவுகளை தெருநாய்கள் இழுத்து வந்து வீதிகளில்போடுவதனால் வீதியால் பயணிப்போர் பெரும் அசௌகரியங்களிற்கு உள்ளாகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(இ-60)

# பனை வளத்தை பாதுகாக்க தண்டனைச் சட்டங்கள்

## பனை அபிவிருத்திச் சபை அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக பனை மரங்கள் தறிக்கும் செயற்பாடுகள் அதிகரித்து வருவதால் பனை வள அழிப்பு நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் நோக்கில் தண்டனை சட்டங்கள் கடுமையாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவித்துள்ள பனை அபிவிருத்தி சபை, இவ்விடயம் தொடர்பாக பொது மக்கள் விழிப்புடன் இருக்குமாறும் அறிவுறுத்தியுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக பனை அபிவிருத்திச் சபையின் முகாமையாளர், எஸ்.ஸ்ரீவிஜிந்திரன் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள செய்திக்குறிப்பில்,

தமிழர் பாரம்பரியத்தின் சின்னமாகவும் வடக்கு-கிழக்கு மாகாணங்களின் மதிப்பிட முடியாத பொக்கிசமாகவும் விளங்கும் கற்பக விருட்சமாகிய பனை வளத்தினை அழியவிடாது பாதுகாக்க வேண்டிய தார்மீக கடமை சமூக அக்கறையுள்ள அனைவரையும் சார்ந்துள்ளது.

இவ்வளத்தின் அபிவிருத்திச்செயற்பாடுகளுக்கு அனைவரும் பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டும்.

பனை வளத்தினை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள பல்லாயிரக்கணக்கான குடும்பங்களுக்கும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றி வரும் இப்பனை வளத்தினை வருடாந்தம் பல்வேறு காரணங்களை காட்டி அழித்து வருகின்றமை மிகவும் மனவேதனைக்குரிய விடயமாகும்.

பனை வள அழிப்பு நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் நோக்கிலும், பனை வளத்தினைப் பாதுகாத்து, அபிவிருத்தி செய்வதற்காகவும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு 1993 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 27 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 452 ஆம் அத்தியாயமான மரங்களைத் தறித்தல் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் (2) ஆம் பிரிவின் கீழ் பனை தறித்தலானது தண்டனைக்குரிய குற்றமாக பிரகடனப்படுத்தியுள்ளது.

குறிப்பாக வடக்கு- கிழக்கு மாகாணங்களில் பல பகுதிகளில் பனை மரங்கள் சட்டவிரோதமாக தறிக்கப்படுகின்றன. இதனைக் கட்டுப்படுத்தும் பாரிய கடமையினை பனை அபிவிருத்திச்சபையுடன் இணைந்து கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் மேற்கொண்டு வருகின்றன.

சமூக அக்கறை கொண்டவர்களும் சட்டவிரோத பனை தறித்தல் தொடர்பான தகவல்களை வழங்கி எமக்கு சிறப்பான ஒத்துழைப்பினை வழங்கி வருகின்றனர்.

சட்டவிரோதமாக பனை தறித்தலுக்கு உடந்தையானவர்களுக்கும், சட்டவிரோத பனை தறித்தலில் ஈடுபடுபவர்களுக்கும் மேற்குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலில் தண்டப்பணம் மற்றும் சிறைத்தண்டனை வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்விடயம் சார்பாக சகல சட்ட நடைமுறைகளும் இறுக்கமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றமையால் இது தொடர்பாக பொது மக்கள் விழிப்புடன் இருக்குமாறும், இசசட்ட நடைமுறைகளால் பனை வளம் பாதுகாக்கப்படுவதோடு, இவ்வளத்தினை நம்பியிருக்கும் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் நன்மையடைவார்கள். இவர்களின் வாழ்வும் வளம் பெறும் என அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)


# பொலிஸார் பற்றாக்குறை

(கரணவாய்)

நெல்லியடிபொலிஸ்நிலையத்தில் தமிழ்ப் பொலிஸார் பற்றாக்குறை காணப்படுவதாக பொதுமக்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அப்பகுதியில் உள்ள மக்களின் சனத்தொகைக்கு ஏற்ப தமிழ்ப் பொலிஸார் பற்றாக்குறையாக காணப்படுகின்றது.

தற்போது ஏழு தமிழ்ப் பொலிஸார் கடமையாற்றும் நிலையில் இன்னமும் பத்து தமிழ்ப் பொலிஸார் தேவையாக உள்ளதாக பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-60)



இலங்கையின் 152 ஆவது பொலிஸ் வீரர்கள் தினம் நேற்று யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரொஷான் பெர்னான்டோ, யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விஜித குணவர்த்தன, பொலிஸ் உத்தியோகத்தர்கள், உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் உறவினர்கள் கலந்து கொண்டு உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மலர் அஞ்சலி செலுத்தினர்.

(படங்கள்:-சாளின், சோபிகா)

# புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கில் விடுவிக்கப்பட்டவரின் விளக்கமறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கில் முதலாவது சந்தேகநபராக இருந்து நீதிமன்றால் விடுவிக்கப்பட்ட பின்னர் பொலிஸார் ஒருவரை அச்சுறுத்திய வழக்கில் விளக்கமறியலில் உள்ள பூபால சிங்கம் இந்திரகுமாரின் விளக்க மறியல் எதிர்வரும் 28ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்று இவ் வழக்கு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் நீதவான் ஏ.எம். எம். றியால் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே அவர் இவ் உத்தரவைப் பிறப்பித்தார்.

குறித்த வழக்கு தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து கிடைக்க வேண்டிய அறிக்கை கிடைக்கவில்லை என பொலிஸார் மன்றுக்குத் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து குறித்த வழக்கு விசாரணையை எதிர்வரும் 28ஆம் திகதி வரை ஒத்திவைத்ததுடன் அதுவரை அந் நபரை விளக்கமறியலில் வைக்கவும் உத்தரவிட்டார்.

இதேவேளை குறித்த நபர் அம் மாணவியின் படுகொலை தொடர்பான வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் இடம்பெறும்போது ஒரு முறை வழக்கு விசாரணை நிறைவடைந்து வெளியேறுகையில், பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் பெயரைக் கூறி அவருக்கு அச்சுறுத்தல் விடுத்திருந்தார்.

இதனையடுத்தே குறித்த நபருக்கு எதிராக சாட்சிகளை அச்சுறுத்திய குற்றச்சாட்டில் வழக்குப் பதிவு செய்யப்பட்டிருந்தது. இந்நிலையில் குறித்த நபர் வித்தியா கொலை வழக்கில் நிரபராதியாக விடுதலை செய்யப்பட்ட போதும் பொலிஸாரை அச்சுறுத்திய வழக்கிலேயே தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

# அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரியகுளத்தடியில் அமைந்துள்ள புதிய உயர்கல்லூரியில் நடைபெறும். இதில் அனைத்துத் தொண்டர் ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது. (இ)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை மாணவி

செல்வி அமிர்தலிங்கம் மயூரி

05.03.2018 அன்று பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டில் நடைபெற்ற தேசிய இலக்கிய விழாவில் பாடல் நயத்தல் போட்டியில் சிரேஷ்ட பிரிவில் 3 ஆம் இடத்தைப் பெற்றுத் தங்கப் பதக்கமும் சான்றிதழும் பெற்றமைக்காகப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்.

யா/கோண்டாவில் இராமகிருஸ்ண மகா வித்தியாலயம்.

(சி-1946)


# அசாத் சாலியின் கடவுச் சீட்டில் தவறான தகவல்



(கொழும்பு)

மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் அசாத் சாலிக்கு தவறான தகவல் அடங்கிய கடவுச்சீட்டை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் வழங்கியுள்ளது.

தற்போது மாகாண சபை உறுப்பினராக பதவி வகிக்காத அசாத் சாலியின் கடவுச் சீட்டில், தொழில் என்ற இடத்தில் மாகாண சபை உறுப்பினர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய மாகாண சபை உறுப்பினராக பதவி வகித்த அசாத் சாலி கடந்த 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8 ஆம் திகதி அந்த பதவியை இராஜினாமா செய்தார்.

இந்த நிலையில், கடந்த 2017 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ள கடவுச்சீட்டில், அவரது தொழில் மாகாண சபை உறுப்பினர் எனக் குறிப்பிட்டுள்ளது. (இ-7)




நூல் வெளியீட்டு விழா அழைப்பு

எழுத்தாளரும் ஓய்வுநிலை மக்கள் வங்கி முகாமையாளருமாகிய மு.சிவநேசன் அவர்களின்

## கம்பன் கடலமுதம்

காலம்: 25.03.2018 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணி

(ஸ்ரீ இராமபிரான் அவதார தினமாகிய ஸ்ரீராம நவமி உற்சவத்தினைத் தொடர்ந்து)

இடம்: ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்-

தலைமை

பண்டிதர் சைவப்புலவர் பொன்.சுகந்தன் அவர்கள்

பிரதம விருந்தினர்

வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் அவர்கள் (மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்)

சிறப்பு விருந்தினர்கள்

பேராசிரியர் சிதம்பரப்பிள்ளை சிவலிங்கராஜா அவர்கள்

திரு.செல்லத்துரை உதயகுமார் அவர்கள் (மாகாண கல்விப் பணிப்பாளர், வடமாகாணம்)

திரு. தனபாலசிங்கம் ஜெயசீலன் அவர்கள் (தலைவர், யாழ்ப்பாணக் கம்பன் கழகம், யாழ்.மாநகர சபை ஆணையாளர்)

கம்பன் கடலில் அமுதத் தமிழ் சுவைத்திட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். (சி-1947)

நூல் வெளியீட்டு குழு

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் அறங்காவலர் சபையினரும், வடமராட்சி தமிழ்ச் சங்கமும்.



## பணியாளர் தேவை

முதியோர் பராமரிப்பாளர்

சுழிபுரம் தொல்புரத்தில் அமைந்துள்ள சிவபூமி முதியோர் இல்லத்தில் முதியோர்களை பராமரிப்பதற்கு பராமரிப்பாளர் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது. (உணவு, தங்குமிடம் வழங்கப்படும்).

தோட்ட பராமரிப்பாளர் தேவை

சுழிபுரம் நெல்லியானில் அமைந்துள்ள சிவபூமி விவசாய பண்ணையில் பண்ணை பராமரிப்பாளர்கள் தேவை. பண்ணையில் தங்குமிடம், உணவு வழங்கப்படும்.

(3313)

தபால் முகவரி:

தலைமைக் காரியாலயம், சிவபூமி அறக்கட்டளை, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

தொலைபேசி 021 222 7938, 021 321 4230



## வீரசிங்கம் கட்டடத்தொகுதி மூன்றாம் மாடி வாடகைக்கு உண்டு

வீரசிங்கம் கட்டட தொகுதியின் மூன்றாம் மாடி வாடகைக்கு வழங்கப்படும். 3150 சதுர அடி விஸ்தீரணம் கொண்டது. 2 அறைகள், மலசலகூடம், மின்சாரம், நீர்விநியோக வசதிகள் கொண்டது. பாரிய அலுவலகங்கள் நடத்தக் கூடிய தள அமைப்பைக் கொண்டது.

விண்ணப்ப படிவத்தையும் விபரத்தையும் அலுவலக நேரத்தில் ரூபா 20/- செலுத்தி சபையில் பெற்று 20.04.2018 ஆம் திகதிக்கு முன்னதாக கூறுவிலையை சமர்ப்பிக்கவும்.

(அலுவலக நேரத்தில் கட்டடத்தை பார்வையிட முடியும்)

தொடர்பு- செயலாளர்,
யாழ். மாவட்டக் கூட்டுறவுச்சபை,
வீரசிங்கம் கட்டடத்தொகுதி 2 ஆம் மாடி,
இல. 12, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2324 (சி/1941)



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

#### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்
தொ.இ: B/8393

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: அனுசம்
உயரம்: 174cm
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: B/8394

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 54 செவ் 1 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:B.A/அரசதொழில்
தொ.இ: B/8400

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 32 செவ் 2 இல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்:BBA/வங்கியாளர்
எதிர்பார்ப்பு: சைவபோசனம் முக்கியம்
தொ.இ: B/4860

#### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பூராடம்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/6862

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: செவ் 1 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L/ஆசிரியர்
தொ.இ: G/6864

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: செவ் 12 இல்
தகைமை/தொழில்: G/L
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/6876

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
தகைமை/தொழில்: G/L
தொ.இ: G/6884

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு- 021 720 1065, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 200 அறவிடப்படும்.

# கால்நடைகளின் குடிநீரைப் பூர்த்தி செய்ய தண்ணீர்த் தொட்டிகள் அமைக்கப்படும்

## கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு

**(கண்டாவளை)** **வரட்சியிலிருந்து கால்நடைகளைப் பாதுகாப்பதற்கு தண்ணீர்த் தொட்டிகளையும் நீர் நிலைகளையும் அமைக்கவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் வரட்சியினால் கால்நடைகளுக்கான குடிநீர்த்தட்டுப்பாடு ஏற்படும் ஏது நிலை காணப்படுவதையடுத்து மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கருத்துத்தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

மாவட்டத்தில் வாழும் மக்களினுடைய வாழ்வாதாரத்தில் பெரும் பகுதி கால்நடைகளில் தங்கியிருப்பதனால் வரட்சிக்காலங்களில் கால்நடைகள் மற்றும் ஏனைய விலங்குகளுக்கான குடிநீர் தேவையென்பது மிக முக்கியனமானது.

அந்தவகையில் கால்நடைகளுக்கான குடிநீரத்தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் தண்ணீர்த்தொட்டிகள் மற்றும் நீர்நிலைகளை உருவாக்கி அவற்றின் மூலம் இவ்வாறான கால்நடைகளுக்கான நீர்த்தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய திட்டங்கள் முன்னெடுக்கவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

# கடந்த இரண்டு வருடங்களாக வவுனிக்குளத்தின் நீர்மட்டம் குறைவு

## சிறுபோக நெற்செய்கை முற்றாக பாதிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவுகின்ற வரட்சியினால் வவுனிக்குளத்தின் நீர்மட்டம் குறைவாகக் காணப்படுவதனால் இரண்டு ஆண்டுகள் சிறுபோகச்செய்கை முற்றாக மேற்கொள்ள முடியாமல் போயுள்ளதாக விவசாய அமைப்புக்கள் கவலை தெரிவித்துள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றான வவுனிக்குளத்தின் கீழ் காலபோகத்தில் சுமார் ஆறாயிரத்து 60 ஏக்கர் நிலப்பரப்பில் இரண்டாயிரத்து 260 வரையான பயனாளிகள் நெற்செய்கையையும் 135 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் 950 வரையான விவசாயிகள் ஏற்றுநீர்ப்பாசனத்தின் மூலமும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த 2016, 2017 ஆம் ஆண்டுகளில் நிலவிய கடும் வரட்சி மற்றும் தற்போது நிலவுகின்ற கடுமையான வரட்சி என்பவற்றால் கடந்த இரண்டு ஆண்டுகள் சிறுபோகச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை காலபோகச் செய்கைகளும் பாதிக்கப்பட்டிருந்தன என்றும் இதனால் விவசாயத்தை வாழ்வாதாரமாக நம்பி வாழ்ந்த விவசாயக் குடும்பங்கள் மேலும் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக வவுனிக்குளத்திற்குட்பட்ட கமக்கார அமைப்புக்கள் மற்றும் விவசாய அமைப்புக்கள் தெரிவித்துள்ளன. (2-315)




# 154ஆவது பொலிஸ் வீரர்கள் தினம் வவுனியாவில் நேற்று அனுஷ்டிப்பு







(குருமன்காடு)

உயிர் நீத்த மற்றும் யுத்தத்தில் உயிரிழந்த பொலிஸாரின் 154ஆவது பொலிஸ் வீரர்கள் தினம் வன்னி பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தலைமையில் இடம்பெற்றது.

வவுனியா வன்னி பிராந்திய பொலிஸ்மா அதிபரின் அலுவலகத்தில் அமைந்துள்ள பொலிஸ் பிரிவில் வீரச்சாவடைந்தவர்களின் நினைவுத்தூபிக்கு அருகே நேற்றுக் காலை 8 மணிக்கு இடம்பெற்ற இந்நிகழ்வில் நினைவுத் தூபிக்கு மலர்கள் வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

தேசத்திற்காக மரணித்த பொலிஸாரை நினைவுகூரும் இந்நிகழ்வில் வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.எம்.எஸ்.தென்னக்கோன், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பியசிரி பெர்னாண்டோ, பொலிஸ் ஆட்சேர்ப்பு உதவியாளர் மல்லவகே, பொலிஸ் கண்காணிப்பாளர் வெல்கம, கணக்காளர் ரவிச்சந்திரன், வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, வவுனியாவிலுள்ள ஏனைய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், உயிர் நீத்த பொலிஸாரின் குடும்பத்தினர், உறவினர்கள், வவுனியா பொலிஸார், சமயத் தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

# த.தே.கூட்டமைப்பின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம்





(குருமன்காடு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சார்பில் வன்னி மாவட்டத்தின் உள்ளூராட்சி சபைகளுக்கு போட்டியிட்டு தேர்தலில் வெற்றிபெற்ற உறுப்பினர்களுக்கான சத்தியப்பிரமாண நிகழ்வு நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

குறித்த நிகழ்வு வவுனியா நகரசபை மண்டபத்தில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

வன்னியின் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இருந்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தெரிவு செய்யப்பட்ட 92 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும் இதன்போது சத்தியப்பிரமாணம் செய்தனர்.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், த.சித்தார்தன், சி.சிவமோகன், சாந்தி சிறிஸ்கந்தராஜா, வடமாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன், மாகாணசபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், கமலேஸ்வரன், புவனேஸ்வரன், து.ரவிகரன், சிராய்வா மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (2-250)

# பொதுமக்களின் முறைப்பாட்டையடுத்து காணி பிரச்சினைகள் தொடர்பான நடமாடும் சேவை முல்லைத்தீவில்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய், மருத்தையன்பற்று, ஒட்டுசுட்டான், கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, வெலிஓயா ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் வசிக்கின்ற பொது மக்கள் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்திற்கு காணி தொடர்பான முறைப்பாடுகள் செய்யப்பட்டதை அடுத்து மேற்படி நடமாடும் சேவையொன்று நேற்று முன்தினம் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது 29 முறைப்பாடுகளும் 3 புதிய முறைப்பாடுகளுமாக மொத்தம் 32 முறைப்பாடுகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையிலான குழுவினர்கள் காணி அமைச்சின் மேலதிக செயலாளர் தயாரட்ண தலைமையிலான குழுவினர்கள், வடக்கு மாகாண காணிப் பணிப்பாளர் கு.குகநாதன் ஆகியோரினால் காணிப் பிரச்சினைகள் ஆராயப்பட்டன.

இதில் பொது மக்களுக்கு இடையிலான காணிப் பிரச்சனைகள் தொடர்பாக உரிய நபர்களிடமிருந்து நேரடியாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு ஒரு சில நபர்களுக்கு உடனடியாக தீர்வுகள் வழங்கப்பட்டன. (2)

# வீதியோரத்தில் வைக்கப்பட்டிருந்த குற்றத் தடயப் பொருட்களை அகற்றத் தீர்மானம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு பிரதான வீதியோரத்தில் வைக்கப்பட்டிருந்த குற்றத் தடயப் பொருட்களை அங்கிருந்து அகற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த தீர்மானத்தின் அடிப்படையில் நேற்று முன்தினம் நீதிமன்ற நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு நீதிமன்றம் இடப்பற்றாக்குறையுடன் இயங்கி வருகின்ற நிலையில், நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படும் தடயப் பொருட்கள் பிரதான வீதியோரத்திலும் வைக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் தடயப் பொருட்களை வீதியோரத்திலிருந்து அகற்றுவதற்கு நீதிமன்ற நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் முல்லைத்தீவு புதிய நீதிமன்ற கட்டட நிர்மாண வேலைத்திட்டங்கள் முல்லைத்தீவு நகர்ப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-25?)

# அரசியல் கைதிகளை தாமதமின்றி விடுதலை செய்யுங்கள்

## ஆனந்தன் எம்.பி.ஜனாதிபதிக்கு கடிதம்

(குருமன்காடு)

அரசியல் கைதிகளை தாமதமின்றி விடுதலை செய்யுங்கள் என வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கு நேற்று அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது,

இந்த நாட்டில் தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைகள் மறுக்கப்பட்டமையே நாடு இந்த நிலைக்கு வருவதற்குக் காரணமாகும், இந்த நிலைக்கு மாறிமாறி இந்த நாட்டை ஆட்சி செய்த கட்சிகள் இரண்டும் பொறுப்பேற்க வேண்டியவை என்றும் தாங்களே ஏற்றுக் கொண்டுள்ளீர்கள். மேலும் பிரதமரும் உங்களின் கருத்தை ஆமோதித்திருந்தார்.

தங்களைக் கொலை செய் வதற்கு முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு தண்டனை அனுபவித்து வந்தவரையே நீங்கள் மன்னித்து விடு தலை செய்து அவரை குடும் பத்தினருடன் இணைத்தவர்.

ஒரு சிறுமி தங்களை தனது வீட்டிற்கு வருமாறு விடுத்த அழைப்பை ஏற்று அந்த ஏழைச் சிறுமியின் வீட்டிற்குச் சென்று அந்தச் சிறுமியை மனம் குளிரச் செய்தவர். எங்கு சென்றாலும் சிறுபிள்ளைகளை வாரி அணைத்து கொஞ்சி மகிழ்வதில் இன்பம் காண்பவர் நீங்கள்.

அப்படிப்பட்ட உங்களால் சமீபத்தில் கிளி நொச்சியில் ஒரு சிறுமி தனது தாயை இழந்து தனயன் தாயின் உடலுக்கு கொல்லி வைக்க போகையில் அநாதரவான நிலையில் தந்தையுடன் எங்கு செல்கிறோம் என்றே தெரியாமல் சிறைச்சாலை வாகனத்தில் ஏறிய காட்சியை தங்களால் ரசிக்க முடியாது என்பதும் எங்களுக்குத் தெரியும்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பத்தாண்டுகளாக தடுப்பிலிருந்த சண்முகநாதன் தேவகன் விடுதலைப் புலிகளுக்கு வாகனம் கொள்வனவு செய்து கொடுத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இரண்டு வருடம் சிறைத்தண்டனை அனுபவித்து வந்த நிலையில் அடுத்த சில மாதங்களில் விடுதலை ஆகப் போகிறோம் என்று எண்ணி மகிழ்கையில் இருக்க அவர்மீது மீண்டும் ஒரு வழக்கு பதிவு செய்யப்படுகிறது. இதனால் உளரீதியாகவும் உடல்ரீதியாகவும் பாதிப்புக்குள்ளான அவர் சுகவீனமுற்ற நிலையில் தனது எழுபது வயது மனைவியையும் ஒரு மகளையும் தவிக்க விட்டு விட்டு மரணித்திருக்கிறார். அவரது காணியும் தற்பொமுது பிரச்சினையில் இருக்கிறது.

இதனைப் போன்றே கிளிநொச்சியைச் சேர்ந்த சச்சிதானந்தம் ஆனந்த சுதாகரனின் மனைவி யோகராணி கணவனைப் பிரிந்த சோகத்தினாலும்குடும்பத்தைக்கொண்டு நடத்த முடியாத வறுமையினாலும் உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் பாதிப்புக்குள்ளாகி இரண்டு பிள்ளைகளை நிர்க்கதியாக்கிவிட்டு தனது கண்களை நிரந்தரமாக மூடிக்கொண்டுள்ளார். ஆண்பிள்ளை தாய்க்கு கொல்லி வைக்கச்செல்லபெண்பிள்ளை செய்வதறியாது தந்தையுடன் சிறைச் சாலை வாகனத்தில் ஏற முற்பட்டுள்ளது.

இந்த சம்பவம் அருகிலிருந்த பொலிஸாரையே கண் கலங்கச் செய்திருக்கிறது.

இனியேனும் இத்தகைய சோகக் கதைகள் தொடராமல் இருப்பதற்கு தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசியல் கைதிகள் அரசியல் காரணங்களுக்காகவே கைது செய்யப்பட்டுள்ளனர் என்பதை நாம் பலமுறை பாராளுமன்றத்தில் தெரிவித்து வந்துள்ளோம்.

எமது கோரிக்கைகள் உதாசீனம் செய்யப்பட்டதன் விளைவே மேற்கண்ட மரணங்கள் சம்பவிக்கக் காரணம் என்பதையும் தங்களது மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

அரசியல் காரணங்களுக்காக கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழர்களை விடுவிப்பதில் தயக்கம் காட்டுவதற்கான காரணத்தை புரிந்துகொள்ள முடியவில்லை.

எனவே இனியும் தாமதமின்றி மனிதாபிமானமிக்கவராகவும் குழந்தைகளின் மீது அன்பு செலுத்துபவராகவும் திகழும் தாங்கள் தமிழ் அரசியல் கைதிகளை விடுவித்து தங்களது நற்பெயரையும் நாங்கள் தங்களுக்கு வழங்கிய ஆதரவிற்கு கௌரவமளிக் கும் வகையிலும் செயற்படுவீர்கள் என்று நாம் நம்புகிறோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-250)


# வெடிக்காத நிலையில் கிளிநொச்சியில் குண்டு மீட்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி பன்னங்கண்டி பிரதேசத்தில் வீட்டின் அருகில் வெடிக்காத நிலையில் சக்திவாய்ந்த குண்டு காணப்படுவதாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

புதிதாக அமைக்கப்பட்டு வரும் வீட்டினருகில் மலசல கூடம் அமைப்பதற்கு புதிதாக தோண்டப்பட்ட குழியில் குறித்த வெடிக்காத நிலையில் குண்டு இருப்பது அவதானிக்கப்பட்டதை அடுத்து கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது, நில மட்டத்திலிருந்து 4 அடி ஆழத்தில் குறித்த குண்டு இருப்பது காணப்படுகின்றமை குறிப்பிடதக்கது. சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (2-312-315)




## அனுமதிப்பத்திர விதிமுறைகளை மீறி

# மணல் அகழ்வில் ஈடுபட்ட 10 உழவு இயந்திரங்கள் கைப்பற்று



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்குட்பட்ட சுதந்திரபுரம் பகுதியில் சட்ட விரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட 10 உழவியந்திரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அதன் சாரதிகளையும் புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்துள்ளார்கள்.

நேற்றுக் காலை சுதந்திரபுரம் பகுதியில் அனுமதிப் பத்திர விதிமுறைகளை மீறல் மற்றும் அனுமதிப்பத்திரங்கள் இல்லாமல் மணல் அகழ்வில் ஈடுபட்ட 10 உழவியந்திரங்கள் கைப்பற்றப் பட்டதுடன் அதன் சாரதிகளையும் கைது செய்த புதுக்குடியிருப்பு பொலிஸார் உழவியந்திரங்களை பொலிஸ் நிலையம் கொண்டு சென்றுள்ளனர். சாரதிகளை நீதி மன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளார்கள். (2-28)

## சுதாகரனின் விடுதலையை வலியுறுத்தி

# கருணைமனு அனுப்புவதற்கான செயற்றிட்டம் விஸ்வமடுவில் நேற்று ஆரம்பித்து வைப்பு





(பரந்தன்)


2008 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு மகசீன் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டு கடந்த வருடம் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட அரசியல் கைதியான சச்சிதானந்தம் ஆனந்தசுதாகரனை நிபந்தனையின்றி விடுதலை செய்ய வலியுறுத்தி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கருணை மனுக்களை அனுப்புவதற்கான செயற்றிட்டம் நேற்று முற்பகல் பத்து மணியளவில் விஸ்வமடுப் பகுதியில் தமிழ் இளைஞர் சமூகத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

ஆனந்தசுதாகரனின் விடுதலையை வலியுறுத்தி கருணை மனுக்கள் அனுப்புவதன் மூலம் விரைவுபடுத்த முடியும் என்ற சட்டவல்லுநர்களின் ஆலோசனையின் பேரில் தமிழ் இளைஞர் சமூகத்தினால் வடக்கு-கிழக்கில் உள்ள பொது அமைப்புக்களிடம் கருணை மனுக்கள் சேகரிக்கப்பட்டு ஜனாதிபதிக்கு அனுப்பும் செயற்றிட்டம் விஸ்வமடுப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது. இச் செயற்றிட்டத்தில் கிளி நொச்சி வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் உள்ள பொது அமைப்புக்கள் மற்றும் இளைஞர் அமைப்புக்கள் மாதிரி கருணை மனுக்களை பெற்று கையெழுத்திட்டு ஏற்பாட்டாளர்களிடம் வழங்க முடியும்.

ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்ட கருணை மனுக்கள் , பொது அமைப்புக்கள்.இளைஞர் அமைப்புக்கள் என வடக்கு- கிழக்கில் உள்ள அனைத்து அமைப்புக்களுக்கும் நேரடியாகவும் மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பி கையெழுத்து இடப்பட்ட பின்னர் சேகரிக்கப்பட்டு ஒரு வாரத்திற்குள் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.. இச் செயற்திட்டத்திற்கு அரசியல் பேதமின்றி அனைவரையும் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.. சுமார் ஆயிரத்துக்கும் மேறபட்ட கருணை மனுக்களை அனுப்புவதே இதன நோக்கமாகும். மாதிரி கருணை மனுக்களினை நேரடியாகவோ மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பி வைக்க முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (2-312)

# கருணை அடிப்படையிலான விடுதலையை வலியுறுத்தி கையொப்பம் திரட்டும் பணி

## கிளிநொச்சி பொதுச்சந்தை முன்பாக



(கண்டாவளை)

சச்சிதானந்தம் ஆனந்த சுதாகரின் கருணை அடிப்படையிலான விடுதலையை வலியுறுத்தும் கையொப்பம் திரட்டும் பணிகள் கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்டது.


மகசீன் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டு கடந்தவருடம் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட அரசியல் கைதியான ஆனந்த சுதாகரனின் மனைவியின் இறுதி கிரியைகள் கடந்த 18ஆம் திகதி கிளிநொச்சியில் இடம்பெற்றது. மனைவியின் இறுதிக்கிரியைகளில் ஆனந்தசுதாகர் கலந்து கொள்வதற்காக சிறைச்சாலை அதிகாரிகளால் அழைத்து வரப்பட்டிருந்தார்.

இந்நிலையில் குறித்த சிறார்கள் தமது தந்தையை கருணை அடிப்படையில் விடுதலை செய்து, பெற்றோரை இழந்து நிற்கும் எமக்கு உதவுமாறு ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த நபரை கருணை அடிப்படையில் விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி நேற்று கிளிநொச்சி பொதுச்சந்தை முன்பாக கையெழுத்து திரட்டும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன, வடக்குமாகாண சபை உறுப்பினர் த.குருகுலராஜா தலைமையில் குறித்த பணி முன்னெடுக்கப்பட்டது. இதன்போது பொது மக்கள் பலர் கையொப்பமிட்டனர். (2-315)

# கலைத்தரிசனம்





# இசைநாடகபூபதி செ.இரத்தினகுமார் அவர்களுடனான சந்திப்பு

"கலாபூஷணம் செல்லையா– இராசமணி தம்பதிகளின் ஐந்தாவது மகனாக 1954 ஆம் ஆண்டு மார்கழி மாதம் பத்தாம் திகதி பளையிலே பிறந்தார். தற்போது புதுமுறிப்புக் கிராமத்தில் நிரந்தரமாய் வசித்து வருகின்றார். தனது பத்தாவது வயதில் கலாநிதி நடிகமணி வீ.வீ.வைரமுத்து அவர்களின் மயான காண்டம் இசை நாடகத்தில் லோகிதாசனாக பதினொரு மேடைகளில் நடித்தார். ஆண்–பெண் இரு பாத்திரங்களையும் ஏற்று நடிக்கும் அற்புத இசை நாடகக் கலைஞர். ஸ்ரீ வேணுகான சபா நாடக மன்றத்தை அமைத்து தலைவராகச் செயற்பட்டு வந்தவர். இவர் பளைப் பிரதேச செயலக பண்பாட்டுப் பேரவையினால் இசை நாடக பூபதி விருதையும் பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக் கழகத்தினால் மரபுக்கலைச் சுடர் விருதையும் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் இவரின் நாற்பது வருட கலைச் சேவையினைப் பாராட்டி முதலமைச்சர் விருதும் வழங்கப்பட்டன. இவர் நடிப்போடு இசை நாடகங்களையும் நெறியாள்கை செய்து வருகிறார். தனது இறுதி மூச்சுள்ளவரை இசை நாடகத்துறைக்குத் தன்னாலான முழுப் பங்களிப்பையும் வழங்குவதாகக் கூறுகின்றார். இசை நாடக பூபதி செ.இரத்தினகுமார் அவர்கள் தன்னைப் பற்றியும் தன் கலைப்பணி பற்றியும் வலம்புரிக்கு வழங்கிய செவ்வி பிரசுரமாகிறது."

**❖ ஈழத்து தமிழரின் அரிய கலை வடிவங்களில் இசை நாடகமும் ஒன்றாகும். அந்த வகையில் அதற்குள் எவ்வாறு கால் பதித்தீர்கள்?**

எனது பேரன் சிறந்த ஓர் இசைநாடக அண்ணாவியார். அந்த வகையில் தந்தையார் கலாபூஷணம் அவர்கள் சிறந்த ஆர்மோனியக் கலைஞராகவும் நாடக நடிகராகவும் இசை நாடகங்கள் நெறியாள்கை செய்யும் அண்ணாவியாராகவும் திகழ்ந்த காரணத்தால் நானும் என் விருப்பப்படி இசை நாடகத்துக்குள் என்னை ஈடுபடுத்திக் கொண்டேன். சகல இசை நாடகங்களிலும் கதாபாத்திரம் ஏற்று நடிக்க வேண்டும் என்ற ஆசையை நிறைவேற்றிக் கொண்டேன்.

**❖ இசை நாடகத்தில் துறைதோய்ந்த கலைஞராகத் திகழும் தாங்கள் இது வரை எந்தெந்தப் பாத்திரங்களில் நடித்தீர்கள்.?**

நான் எனது 10 வது வயதில் நடிகமணி வீ.வீ. வைரமுத்துவின் மயான காண்டம் இசை நாடகத்தில் லோகிதாசனாக பதினொரு மேடைகளில் நடித்தேன். அத்துடன் அவருடைய நல்லதங்காள் நாடகத்தில் நல்லதங்காளின் மூத்த மகனாக நடிக்கும் பாக்கியமும் கிடைத்தது. பின்பு நான் சற்று வளர்ந்துவிட்டதாலும் பாடசாலைப் படிப்போடும் இருந்தபடியால் நடிப்பதைக் குறைத்துக் கொண்டேன். 1969 ஆம் ஆண்டு S.S.E பரீட்சை முடிந்ததும் திரும்பவும் இசைநாடகத்துக்குள் என்னை ஈடுபடுத்திக் கொண்டேன். எனது தந்தையாரின் வழிகாட்டலிலும் நாடகத்திலகம் K.V நற்குணம் அவர்களின் வழிகாட்டலிலும் ஈழத்தில் மேடையேற்றப்படுகின்ற இசை நாடகங்களின் பாடல் வசனம், நடிப்பு ஆகியவற்றைக் கற்றுக் கொண்டேன். ஆண் பாத்திரம் மட்டுமல்லாமல் பெண் பாத்திரங்களிலும் நடித்துள்ளேன். அரிச்சந்திரா நாடகத்தில் லோகிதாசன் முன் அரிச்சந்திரன், பின் அரிச்சந்திரன், பின் சந்திரமதி, பின் சத்திய கீர்த்தி, சத்தியவான் சாவித்திரியில் சத்தியவான், சாவித்திரி, நல்லதங்காளில் மூத்தமகன் நல்லண்ணன், ஞானசௌந்தரியில் புலேந்திரன், பக்தநந்தனில் நந்தன், கோவலன் கண்ணகியில் கோவலன், சிறிவள்ளியில் வேடன், சாரங்கதாரனில் நரேந்திரன், பூதத்தம்பியில் பூதத்தம்பி போன்ற ஆண், பெண் இரு பாத்திரங்களையும் நடித்துள்ளேன் என்பதை கூறிக்கொள்வதில் மனநிறைவடைகின்றேன்.

**❖ இவற்றுள் தங்களுக்குப் பிடித்த பாத்திரம் என்றால் எதனைக் குறிப்பிடுவீர்கள்? காரணம்?**


பொதுவாகச் சொன்னால் எனக்கு எல்லாப்பாத்திரமும் பிடிக்கும். அதிலும் 1998 ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தில் பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக்கழகம் நடத்திய மாபெரும் நாடகப்போட்டியில் பங்கு கொண்டு மயான காண்டம் நாடகத்தில் அரிச்சந்திரனாக நடித்தேன். முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டேன். பல பரிசில்கள் வழங்கப்பட்டது மட்டுமல்லாமல் பொன்னாடை போர்த்தி, மகுடம் சூட்டி, சிறந்த நடிகனுக்குரிய சான்றிதழும் பெற்றுக் கொண்டேன். இருந்தும் எனது இசைநாடகத்தில் எனக்குப் பிடித்த பாத்திரம் காரணம் என்று கேட்டுள்ளீர்கள். எனக்குப் பிடித்த முதல் பாத்திரம் சத்தியவான் சாவித்திரி நாடகத்தில் முழுமையான சத்தியவான் பாத்திரமாகும். அந்நாடகத்தில் காதல், சிங்காரம், குணச்சித்திரம்,சோகம் ஆகிய அனைத்தும் அமைந்த நாடகம். அதிலும் சுமாலியுடன் குதிரைச்சவாரி, சாவித்திரியுடன் காதல் காட்சி, தந்தையார் தூய்மைசேனனுடன் காட்டில் புலம்பல்,பின் சாவித்திரியுடன் திருமணம், பின் காட்டிலே சாவித்திரியுடன் விறகு வெட்டும் போது யமதர்மன் சத்தியவானுக்கு காட்சி கொடுத்து உயிர் எடுக்கும் காட்சி இதை என்னால் மறக்கமுடியாத காரணமாகும். என்னுடன் சாவித்திரியாக முதன் முதல் நடித்த நடிககலாமணி V.செல்வரத்தினம் அண்ணா அவர்கள். என் கண்களில் நீர் சொரியும் அப்பொழுது அவருடைய கண்களிலும் கண்ணீர் சொரியும். வாழ்க்கையில் அன்பு மனைவியை விட்டு உயிர் பிரியும் காட்சி தான் என்னால் மறக்கமுடியாத காட்சியாகும். என்னுடன் இப்பொழுது மரபுக்கலைசுடர் யஸ்ரின் தைரியநாதன், மரபுக்கலைச்சுடர் பருத்தித்துறை மக்கள் வங்கி பிரதி முகாமையாளர் தம்பி சிதம்பரநாதன் சசீவன் ஆகிய இருவரும் நடிககலாமணியைப் போன்று மிகவும் திறமையான முறையில் சாவித்திரி பாத்திரத்தை தங்களுடைய பெயரைவிட்டு சத்தியவானின் மனைவியாகவே நாடக அரங்கை அலங்கரிக்கின்றார்கள். அவர்களையும் என் வாழ்நாள் முழுவதும் மறக்கமாட்டேன் என்பதையும் கூறிக் கொள்வதில் மன மகிழ்வடைகின்றேன்.

**❖ இன்றைய இசை நாடகத்தின் போக்கு எப்படியாயிருக்கிறது?**

பொதுவாக மக்களிடையிலும் மாணவர்களிடையிலும் இசை நாடகத்தில் பற்று குறைந்து கொண்டே போகின்றது என்பதை ஏற்றுக் கொள்கிறேன். இதற்குப் பிரதான காரணம் தொழில்நுட்பக் கலைகளின் வருகையும் அவற்றை இலகுவாகப் பெற்றுக்கொள்வதுமேயாகும். பொதுவாக சினிமாவில் அதிக தொலைக்காட்சி நாடகங்களைப் பார்ப்பதும் அவர்கள் அக்கலைகளில் இருந்து வெளியேவரமுடியாதிருப்பதும் எமது பாரம்பரிய இசைநாடகங்கள் வீழ்ச்சியடையக் காரணமாக உள்ளது. பெற்றோர்களும் மாணவர்களும் சினிமாவில் காட்டும் ஆர்வம் இசை நாடகத்தில் காட்டுவதில்லை என்பது தற்போது உண்மையாக உள்ளது. இருந்தும் தமிழ்த் தினப் போட்டிகளில் இசை நாடகத்தின் பங்கு கணிசமான அளவிற்கு இருப்பதைக்காணக்கூடியதாக இருக்கின்றது. தற்பொழுது பாடசாலையில் நாடகமும் அரங்கியலும் ஒருபாடமாக அமைவதால் பெற்றோர்கள் இசை நாடங்களை பயில்வதற்கு அனுசரணையாக இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அத்துடன் இளைஞர்களும் இசைநாடகங்களை பார்த்து ரசித்து நடிக்க முன்வரவேண்டும்

**❖ இசை நாடக வரலாற்றில் தங்களால் மறக்க முடியாத அனுபவம் பற்றி?**

முதன் முதல் லோகிதாசன் பாத்திரம் ஏற்று நடித்த போது நடிகமணி வீ.வீ. வைரமுத்து அவர்கள் இறந்து கிடக்கும் மகனை எடுத்துச் சொல்லடி என்று சுடுகோலினால் உதைக்கும்போது நான் பயத்தில் எழுந்து ஓடியது என்னால் மறக்க முடியாததாகும். பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக் கழகம் நடத்திய நாடகப் போட்டியில் பங்கு கொண்டு முதலாம் இடம் பெற்றமைக்காக மாலை அணிவித்து பட்டமளித்து பொன்னாடை அணிவித்து மகுடம் சூட்டி பாராட்டி கௌரவித்ததை என்னால் மறக்க முடியாதுள்ளது.



இசை நாடகத்துறையில் என்னை ஈடுபட வைத்த என் பெற்றோர்கள் என்னுடன் கூட நடித்த மாபெரும் மூத்த கலைஞர்கள் யாவரையும் என்னால் மறக்க முடியாது. அதிலும் நடிககலாமணி V.செல்வரத்தினம், நாடகத்திலகம் K.V. நற்குணம், கலைவேந்தன் M.P. தைரியநாதன், ஆர்மோனியச் சக்கர வர்த்தி பிலிப் யோன்கவாஸ், மாஸ்டர் சரணவணமுத்து (வாத்தி இவர்களை மறக்க முடியாது.

**❖ தங்களின் ஸ்ரீ வேணுகான சபா நாடக மன்றத்தைப் பற்றிக் கூறுங்கள்?**

ஸ்ரீ வேணுகான சபா நாடக மன்றத்தை அமைத்து தலைவராக செயற்பட்டு வந்தேன். எனது பலகலைஞர்கள் என்னுடன் இருந்தார்கள். பல இசை நாடகங்களை மேடையேற்றினோம். பல நாடகப் போட்டிகளில் பங்கு கொண்டு வெற்றி பெற்றோம். எனது சபாவில் திறமையான கலைஞர்கள் இருந்தார்கள். அவர்களில் திரு. நல்லையா அம்மான், வி. தியாகராசா ஆகியோர் காலமாகிவிட்டார்கள். அது எமது சபாவிற்கு பேரிழப்பாகும். இருந்தும் நான் தற்பொழுது பளையில் இல்லா விட்டாலும் சபாவை எனது சகோதரன் கலாபூஷணம் தனபாலசிங்கம் (சுந்திரன்) அவர்கள் நடத்துவார் என்று நம்பிக்கையுடன் இருக்கிறேன்.

**❖ தங்கள் கலையுலகில் பெற்ற வெற்றிகள், விருதுகள் பற்றி?**

1998 ஆம் ஆண்டு பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக் கழகம் நடத்திய நாடகப் போட்டியில் பங்குகொண்டு மயான காண்டம் இசை நாடகத்தில் முதலாம் இடம் பெற்றது. யாழ்.மாவட்ட ஆளுநரின் நாடகப் போட்டியில் மாவட்ட மட்டப் போட்டியில் முதலாம் இடம் பெற்றது. அத்துடன் எனக்கு இதுவரையில் கிடைத்த விருதுகள் வரிசையில் பளைப் பிரதேச செயலர் சு.புத்திரசிகாமணி அவர்களினால் இசை நாடகப் பூபதி விருதையும் பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக் கழகத்தினால் மரபுக் கலைச்சுடர் விருதையும் இந்து கலாசார அமைச்சினால் கலைஞானகேசரி விருதையும் நெல்லண்டைப் பத்திரகாளி ஆலய குருக்களினால் இசைவேந்தன் விருதையும் பளைக் கலாசார பேரவையினால் கலைத்தென்றல் விருதையும் கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு பேரவையினால் கலைக்கிழி விருதையும் யாழ்.மாவட்ட பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் திணைக்களம் 40 வருட கலைச் சேவையைப் பாராட்டி கௌரவ முதலமைச்சர் விருதையும் பெற்றுக் கொண்டேன்.

**❖ கலாநிதி, நடிகமணி, வீ.வீ.வைரமுத்து அவர்களுடன் இணைந்து நடித்துள்ளீர்கள். அவரிடமிருந்து நீங்கள் எவ்வகையான அனுபவங்களை பெற்றீர்கள்?**

நான் முதன் முதல் அவருடைய மயான காண்டம் நாடகத்தில்தான் லோகிதாசன் பாத்திரம் ஏற்று நடித்தேன். நான் சிறுவனாக இருந்த காலத்தில் எமது பளையிலும் அதற்கு அண்டிய இடத்திலும் அவருடைய நாடகங்கள் மேடையேற்றப்படும் போது தவறாது பார்க்கச் செல்வேன். ஒரு நடிகன் தனது சொந்த வாயினால் பாடவேண்டும் என்பதையும் வசனத்தைச் சொல்ல வேண்டும் என்பதையும் பாத்திரத்திற்கு ஏற்ற வகையில் நடிக்க வேண்டும் என்பதையும் பாத்திரத்திற்கு ஏற்றமுறையில் உருவ அமைப்பு அமைய வேண்டுமென்பதையும் கற்றுக் கொண்டேன்.

**❖ நாற்பது வருட கலைச் சேவையைக் கொண்ட தாங்கள் இறுதியாக கலையுலகிற்கு மனந்திறந்து கூறுவது?**

நடிகமணி வீ.வீ.வைரமுத்துவோடு 1964 ஆம் ஆண்டு தொடக்கம் ஏறக்குறைய 2010 ஆம் ஆண்டு வரை இசை நாடகங்கள் கூடுதலாக மேடையேற்றப்பட்டு வந்தன. தற்பொழுது. அந்நிலை மாறி விட்டது. தொலைக்காட்சி நாடகங்களும் சினிமாப் படங்களை பார்ப்பதும் அதிகரித்துக் காணப்படுவதால் இசை நாடகத்தில் உள்ள நாட்டமும் பற்றுதலும் இல்லாமல் போய்க் கொண்டிருக்கின்றது என்பதை கூறிக் கொள்கிறேன். இந் நிலை மாறுவதற்கு எமது ஆலயங்களில் நடைபெறுகின்ற திருவிழாக்காலங்களில் ஏனைய நிகழ்ச்சிகளுடன் இசை நாடகத்திற்கும் பங்களிப்பு கிடைக்குமாயின் இசை நாடகங்களை அழியவிடாது பார்த்துக் கொள்ளலாம் என நம்புகின்றேன்.

**❖ தாங்கள் இதுவரை யார் யாருடன் நடித்திருக்கிறீர்கள்.**

வீ.வீ.வைரமுத்து ,K.V.நற்குணம், வீ. செல்வரட்ணம்,M.P.தைரியநாதன்,சின்னமணி, வீ.என். செல்வராசா, கே.எம். பரராசசிங்கம், யஸ்ரீன், சரவணமுத்து, சுசீவன், பிரதீபன், தேவராசா, தவராசா, வேலா யுதம், A.V.M. நா. விமலநாதன்.விஜய பாஸ்கர், தயாநிதி, மெற்றாஸ் மயில், கனகரத்தினம் மனோகரி, தங்கமலர், தியாகராசா டேவிற், வி.மார்க்கண்டு, S.V.. மார்க்கண்டு, ரகுநாதன், கண்ணதாசன் சர்மா, சரவணபவன் பார்வதி சிவபாதம்மா, ஏழுமலைப்பிள்ளை என யாழ். மாவட்ட முன்னணிக் கலைஞர்கள் யாவருடனும் நடித்துள்ளேன்.

நேர்காணல்:
**ஜெயம் ஜெகன்**

# பங்களாதேஷ் அணிக்கு நேர்ந்த கதியே மகிந்த அணிக்கும் ஏற்படும்-ஹரிசன்



(கொழும்பு)

பங்களாதேஷ் கிரிக்கெட் அணிக்கு நேர்ந்த கதியே கூட்டு எதிர்க்கட்சியினருக்கும் நேரும் என அமைச்சர் ஹரிசன் தெரிவித்துள்ளார்.

மிஹிந்தலையில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மான யோசனையில் கையொப்பமிடும் கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, சுதந்திர கிண்ண இருபது -20 போட்டித் தொடரில் பங்களாதேஷ் அணிக்கு நேர்ந்த கதியே ஏற்படும்.

நம்பிக்கையில்லா தீர்மான யோசனைக்கு யார் கையொப்பமிட்டுள்ளனர் என்பது முகநூலில் காணப்படுகின்றது.

கையொப்பமிட்டவர்கள் பற்றி நாட்டு மக்களுக்கு தெரியும். ஐக்கிய தேசியக் கட்சியில் யாரும் இதில் கையொப்பமிடவில்லை.

நம்பிக்கையில்லா தீர்மானம் பற்றி அறிவிப்பதற்கு முகநூல் கிடையாது.

நம்பிக்கையில்லா தீர்மானத்தை சபாநாயகரிடம் வழங்கி, அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சபாநாயகரிடம் ஒப்படைக்கப்பட்டதன் பின்னரே எத்தனை பேர் இதில் கையொப்பமிட்டுள்ளனர் என்பது பற்றி அறிந்து கொள்ள முடியும்.

கூட்டு எதிர்க்கட்சியின் ஒரு தொகுதியினர் வெளிநாடு சென்றுள்ளனர். அவர்கள் கையொப்பமிடுவது பற்றி இன்னும் தீர்மானிக்கவில்லை.

இந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மூலம் பிரதமர் மேலும் தூய்மைப்படுத்தப்படுவார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# உலகில் ஊழல் மிக்க நாடுகளில் 97ஆவது இடத்தில் இலங்கை

(லண்டன்)

உலகில் ஊழல் மிக்க நாடுகளின் பட்டியலை ஒவ்வொரு ஆண்டும் வெளியிடும் Transparency International என்ற அமைப்பு கடந்த ஆண்டுக்கான ஊழல் மிகுந்த நாடுகளின் பட்டியலை வெளியிட்டுள்ளது.

உலகில் உள்ள நாடுகளில் மொத்தம் 180 நாடுகளில் நடைபெறும் ஊழல்களை அலசி ஆராய்ந்து தரவரிசைப்படுத்தி Transparency International என்ற அமைப்பு வெளியிட்டுள்ளது.

குறித்த பட்டியல், அரசு வழங்கும் பொதுச்சேவை மற்றும் அரசு மட்டத்தில் நடைபெறும் ஊழல்கள் அதிகளவில் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில், மிகக்குறைந்த ஊழல் நடக்கும் நாடுகளில் 97ஆவது இடத்தில் இலங்கை காணப்படுகின்றது.

அத்துடன், அவுஸ்திரேலியா உலகில் குறைவான ஊழல் நடக்கும் நாடுகளில் 13 ஆவது இடத்தில் உள்ளது. கடந்த ஆறு ஆண்டுகளில் அவுஸ்திரேலியா ஒவ்வொரு ஆண்டும் ஊழல் குறைவான நாடுகள் பட்டியலில் சரிந்து வருவதாக இந்தப் பட்டியல் காட்டுகிறது.

இதன்மூலம், அவுஸ்திரேலியாவில் ஊழல் அதிகரித்து வருவதாக இந்த புள்ளி விபரம் காட்டுகிறது.

மேலும், மிக குறைந்த ஊழல் நடக்கும் நாடுகளில் முதலிடத்தில் நியூசிலாந்து உள்ளது.

இதனடிப்படையில், 2 ஆவது இடம்: டென்மார்க், 6 ஆவது இடம்: சிங்கப்பூர், 13 ஆவது இடம்: அவுஸ்திரேலியா, 62 ஆவது இடம்: மலேசியா, 81 ஆவது இடம்: இந்தியா, 97 ஆவது இடம்: இலங்கை, 180 ஆவது இடம்: சோமாலியா போன்ற நாடுகள் முறையே காணப்படுகின்றன. (இ-7)

# பாடல் நயத்தல் போட்டியில் தங்கப்பதக்கம்



(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையால் நடத்தப்பட்ட கலை இலக்கிய விழாவில் பாடல் நயத்தல் போட்டி சிரேஷ்ட பிரிவில் யாழ். கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவி மயூரி அமிர்தலிங்கம் பிரதேச சபையிலும் யாழ்.மாவட்டத்திலும் முதலாமிடத்தையும் தேசிய மட்டத்தில் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டார்.

இவரைப் பாராட்டும் முகமாக கடந்த 5ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற தேசிய இலக்கிய விழாவில் தங்கப் பதக்கமும் சான்றிதழும் வழங்கப்பட்டன. (இ-7)

# இலங்கையில் முஸ்லிம்கள் மீதான இன வன்முறையை உடன் நிறுத்து

## ஜெனிவாவில் கோஷம்

(ஜெனிவா)

இலங்கையில் முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்படும் இனவன்முறைக்கு எதிராகவும், அந்த வன்முறையுடன் தொடர்புடையவர்களைக் கைதுசெய்து உடனடியாக சட்டத்தின் முன் நிறுத்தக் கோரியும் ஐரோப்பிய வாழ் இலங்கை முஸ்லிம்கள் ஏற்பாடு செய்திருந்த மாபெரும் போராட்டம் ஜெனிவா நகரில் நடைபெற்றது.

ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு முன் நடைபெற்ற இப்போராட்டத்திற்கான அழைப்பை, சுவிட்ஸர்லாந்தில் இருந்து இயங்கும், ஐரோப்பிய இஸ்லாமிய தகவல் நிலையம் விடுத்திருந்தது.

நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் ஆரம்பமான இப்போராட்டதில் "முஸ்லிம்கள் மீதான இனவாதத்தை உடன் நிறுத்து" பள்ளிவாசல்களை உடைக்காதே", "முஸ்லிம்களின் பொருளாதாரத்தை சூறையாடாதே", "சட்டத்தை சரிசமமாக அமுல்படுத்து",

"குற்றவாளிகளைக் கைதுசெய்"உள்ளிட்ட பல்வேறு சுலோகங்களையும், பதாதைகளையும் தாங்கியபடி மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்(இ-7)


## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பிதழ்

அமரர்

அம்பலவானர் சேதுலிங்கம்



கடந்த 20.02.2018 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அம்பலவானர் சேதுலிங்கம் அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் 20.03.2018 செவ்வாய்க்கிழமை காலை 6.00மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. 22.03.2018 இன்று வியாழக்கிழமை பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஈசன் குடும்பத்தினர்.

ஆத்திக்காட்டு வீரகத்தி பிள்ளையார் கோவிலடி, அல்லாரை.

(3303)

## அந்தியேட்டி நினைவலைகள்

அமரர்

மாணிக்கம் வடிவேலு



கலேவெலயை பிறப்பிடமாகவும் சென்.தோமஸ் ஒழுங்கை, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட எமது அன்புத் தாத்தா மாணிக்கம் வடிவேலு அவர்கள் கடந்த 20.02.2018 அன்று காலமானார். அவரின் அந்தியேட்டி கிரியைகள் 22.03.2018 இன்று வியாழக்கிழமை மேற்படி விலாசத்தில் அமைந்துள்ள அன்னாரின் புதல்வியாரின் இல்லத்தில் நடைபெறும்.

மனைவி: தெய்வானை, பிள்ளைகள்:பவளராணி, மனோகரன், திலகராணி, ரஞ்சன் மற்றும் சகோதரி, மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(சி-1938)


## இராசி பலன்

**மேடம்:** காலைப் பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் உருவாகும், பணத் தேவைகள் பூர்த்தியாகும்.

**இடபம்:** விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** எடுத்த செயலை முடிக்க ஒரு முறைக்கு இரு முறை அலைய நேரிடலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கடகம்:** பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வருமானம் அதிகரிக்கும் நாள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**சிம்மம்:** எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், சந்தோசமான சம்பவங்கள் இடம்பெறலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**கன்னி:** மறைமுக எதிர்ப்புகள் மாறும், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**துலாம்:** நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள், மறதியால் ஒரு சில பணிகளை செய்யாமல் விட்டுவிடுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**விருச்சிகம்:** இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, உடன் பிறப்புக்கள் உதவி செய்ய முன் வருவர், வழிபாட்டால் நம்பிக்கை கூடும்.

**தனுசு:** கடன்சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வியாபார விருத்தியுண்டு, ஆரோக்கியமான நாள்.

**மகரம்:** செல்வாக்கு மேலோங்கும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், எதிர்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்:** வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், நல்ல தகவல்கள் வந்து சேரலாம், சுப காரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**மீனம்:** தொழில் முயற்சியில் எதிர்பார்த்த சில திருப்பங்களைக் காணலாம், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், பகை விலகி பாசம் கூடும் நாள்.

சூரி.சுக். புத. | சந் | ராகு | கேது | சனி, செவ் | குரு

கிரகநிலை

சந்திராஷ்டமம் சுவாதி

**22.03.2018**

பங்குனி 08., வியாழக்கிழமை

சூரிய உதயம் காலை 6.21 மணிக்கு

பஞ்சமி பிற்பகல் 2.26 மணிவரை

கார்த்திகை முன்னிரவு 6.30 மணிவரை

சுபநேரம் 7.47-9.17 மணிவரை

இராகுகாலம் 1.47-3.17 மணிவரை

கார்த்திகை விரதம், பஞ்சமி விரதம்

வளவன்

# நாட்டில் பிக்குகளுக்கு இல்லாத சிறப்புரிமை முஸ்லிம்களுக்கு

## ஓமல்பே சோபித தேரர் காட்டம்



(கொழும்பு)

சமகாலத்தில் இலங்கை சமூகங்களிடையே எழுந்துள்ள முரண்பாடான நிலைமை தொடர்பில் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் முன்னாள் தலைவரும், தென் பகுதி பிக்குகளுக்கான பிரதம தேருமான கலாநிதி ஓமல்பே சோபித தேரர் பதிலளித்துள்ளார்.

சகல பிரச்சினைகளுக்குமான அடிப்படைக் காரணங்களை தேரர் சந்தேகமற தெளிவுபடுத்தியுள்ளதாக சிங்களப் பத்திரிகையொன்று குறிப்பிட்டுள்ளது.

"உண்மையில் இன்று இடம்பெறவேண்டிய முக்கிய விடயம் நாட்டின் சட்டத்தை சகலருக்கும் சமமாக நடைமுறைப்படுத்துவதாகும். ஒவ்வொரு இனத்துக்கும் இந்நாட்டில் சட்டங்கள் வேறுபடக் கூடாது. நாட்டுச் சட்டத்தின் முன்னால் முஸ்லிம்களுக்கு வரப்பிரசாதங்கள் அதிகமாக உள்ளன என்ற கருத்து சிங்கள மக்களிடையே ஆழமாக பதிந்துள்ளது.

நாட்டின் பொதுவான சட்டம் முஸ்லிம்களுக்கு நடைமுறைப்படுத்தப்படாமல் அவர்களுக்கென்று சரீஆ சட்டம் செயற்படுத்தப் படுகின்றது. திருமணச் சட்டங்களுக்கு தனியான நீதிமன்றம் இருக்கின்றது. தனியான பாடசாலை கட்டமைப்பொன்று செயற்படுத்தப்படுகின்றது. அந்தப் பாடசாலைகளுக்கு முஸ்லிம்கள் மட்டுமே செல்ல முடியும்.

இலங்கையில் சிங்கள, தமிழ் மக்களுக்கு அவ்வாறு விசேட பாடசாலை இல்லை. நாட்டின் தேசிய உடை தொடர்பில் சட்டங்கள் உள்ளன. இருப்பினும், முஸ்லிம்களுக்கு அது செல்லுபடியற்றதாகக் காணப்படுகின்றது. சிங்கள மாணவர் ஒருவருக்கு அரசினால் பாடசாலை சீருடை ஒன்றுக்கு 750 ரூபா மாத்திரமே வழங்கப்படுகின்றது.

ஆனால், முஸ்லிம் மாணவர் ஒருவருக்கு பாடசாலை சீருடைக்காக 1500 ரூபா வழங்கப்படுகின்றது. இந்தச் சட்ட நடைமுறையில் பாரிய வேறுபாடு தென்படுகிறதல்லவா?

இலங்கையிலுள்ள அனைவரும் 18 வயதை அடைந்தால் மாத்திரமே திருமணம் முடிக்க முடியும் என சட்டம் உள்ளது. இருப்பினும், திருமணத்தில் கூட முஸ்லிம்களுக்கு இந்தச் சட்டம் செல்லுபடியாவதில்லை.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் அம்பாந்தோட்டையில் முக்கிய சம்பவமொன்று இடம்பெற்றது. 14 வயது பெண் பிள்ளையொருவர் திருமணம் முடித்துள்ளார். அந்த பெண் பிள்ளை முஸ்லிம் இளைஞன் ஒருவரை திருமணம் முடித்துள்ளார். குறித்த பெண் பிள்ளையும் இஸ்லாம் சமயத்துக்கு மாறியுள்ளார். இந்த பெண் வீட்டுக்குத் தெரியாமல் சென்றே திருமணம் செய்துள்ளார்.

இருப்பினும், தற்பொழுது எந்த முறைப்பாடும் இல்லை. வழக்குத் தொடரவும் இல்லை. இந்த பெண் பிள்ளை சிங்கள இளைஞன் ஒருவருடன் சென்றிருந்தால், குறித்த இளைஞன் சிறையில் இருப்பார். இந்த சம்பவத்தில் சட்டத்திலுள்ள விசேட மாற்றம் தெரிவதில்லையா?

முஸ்லிம்களின் வழக்குகள் சாதாரண நீதிமன்றத்துக்கு வருவதில்லை. முஸ்லிம்களின் நீதிமன்றத்தில் தலையிட உயர் நீதிமன்றத்துக்குக் கூட முடியாது. இதுபோன்ற சிறப்புரிமைகள் சிங்களவர்களுக்குக் கூட இல்லை. இதனால், சிங்கள மக்கள் இது தொடர்பில் எதிர்ப்பை வெளியிடுவது நியாயமானது.

நாட்டிலுள்ள சாதாரண நீதிமன்றங்களில் முஸ்லிம் பெண் ஒருவர் விசாரணைக்காக நிறுத்தப்படுவது அநீதியானது என முஸ்லிம்கள் கூறுகின்றனர். அவ்வாறு செய்யும் போது முஸ்லிம் பெண்களிடமுள்ள வெட்கம், பயம் இல்லாமல் போகிறதாம். அப்படியென்றால், சிங்கள, தமிழ் பெண்களின் வெட்கம், பயம் இல்லாமல் செல்வதில்லையா? இந்த சிறப்புரிமை எமது நாட்டிலுள்ள பிக்குகளுக்காவது இல்லை. வழக்குகளின் போது பிக்குகள் கூட பகிரங்கமாக விசாரிக்கப்படுகின்றனர்.

வெள்ளிக்கிழமை முஸ்லிம் பள்ளிவாசல்களின் முன்னால் தனியான சட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அன்றைய தினம் வாகன போக்குவரத்து ஒழுங்குகள் செல்லுபடியற்றதாகின்றன. அந்த இடத்தில் புதுமையான சுதந்திரமொன்றுதான் இருக்கின்றது. இந்த சிறப்பம்சம் தான் என்ன?

முஸ்லிம்கள் அதிகமாக வாழும் நகர்களில் மோட்டார் சைக்கிளில் செல்பவர்களுக்கு தலைக்கவச சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா? அது செயற்படுத்தப்படுவதில்லை. இது தொடர்பில், பௌத்தர்களுக்கும், இந்துமதத்தினருக்கும், கிறிஸ்தவ மதத்தினருக்கும் ஏமாற்றம் இருக்கின்றது.

அப்படியானால், ஒரு தனியான மதப் பிரிவினர் வாழும் பிரதேசங்களுக்கு விசேட சிறப்புக்கள் இருக்க வேண்டியதில்லை. சட்டம் சகலருக்கும் சமமாக்கப்பட வேண்டும். ஹலால் ஊடாக முஸ்லிம் அல்லாத நுகர்வோருக்கும் வரி சுமத்தப்படுகின்றது. இதெல்லாம், நியாயமான நடவடிக்கை ஒன்று அல்ல.

இந்த சகல பிரச்சினைகள் தொடர்பிலும் முஸ்லிம் உட்பட சகல மதத் தலைவர்களும் திறந்த கலந்துரையாடலை நடத்த வேண்டும். அவ்வாறு செய்யவில்லையாயின் சமூகங்களிடையே நீதி நிலைநாட்டப்படுவதில்லை. இந்த நிலைமை தொடர்ந்தும் இருக்குமாக இருந்தால், அழுத்தங்கள் எந்த தோற்றத்தில் வெளிப்படும் என்பது தெரியாது எனவும் தேரர் விளக்கிக் கூறியுள்ளார். (இ-7)

# காச நோயாளர்களின் எண்ணிக்கை எட்டாயிரமாக அதிகரிப்பு!

(கொழும்பு)

நடப்பு ஆண்டின் முதல் மூன்று மாதத்திற்குள் 8 ஆயிரத்திற்கு அதிகமான காச நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நாட்டில் சுமார் 14 ஆயிரம்பேர் வரையில் இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தேசிய காசநோய் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையில் 2035 ஆண்டில் காச நோயை முற்றாக கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தேசிய காச நோய் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் 24 ஆம் திகதி உலக காச நோய் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

இதனை முன்னிட்டு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பு சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் தேசிய காச நோய் தடுப்புப் பிரிவினர் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தனர்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் காச நோய்க்கான விசேட வைத்தியர் கீர்த்தி குணசேகர கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையில் அதிகம் காச நோயினால் பாதிக்கப்படும் மாவட்டமாக கொழும்பு மாவட்டம் இனங்காணப்பட்டுள்ளதோடு கம்பஹா, களுத்துறை உள்ளிட்ட மாவட்டங்களே விரைவில் காசநோய் தொற்றுக்கு உள்ளாகின்றன.

கொழும்பு மாவட்டத்தில் முக்கியமாக மட்டக்குளி, கிராண்ட்பாஸ் உள்ளிட்ட பிரதேசங்கள் அதிகம் காசநோயினால் பாதிக்கப்படும் பிரதேசங்களாக மாறியுள்ளன.

இதுவரையில் இலங்கையில் 8 ஆயிரத்துக்கு அதிகமான காச நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். ஒவ்வொரு வருடமும் இறப்பு வீதத்தை பார்க்கும்போது காச நோயினால் மட்டும் 400 இலிருந்து 500 வரையிலான நோயாளர்கள் இறக்கின்றனர்.

நோய் குறித்து மக்கள் வைத்திய ஆலோசனைகளை முறையாக பெற்றுக்கொள்ளாமையே இவ்வாறு மரண வீதம் அதிகரிப்பதற்கு பிரதான காரணமாகும். "காச நோய் என்பது இலகுவாக தோற்றம் பெறக்கூடியதாகும். அதேபோன்று பல்வேறு முறைகளில் இந்த காச நோயை பரப்பும் பக்றீரியா சுகதேகியான ஒருவரின் உடலைத் தாக்குகின்றது.

இந் நோயின் தன்மை தீவிரம் அடையும் போது குணப்படுத்துவதென்பது கடினமானதொன்றாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அரசைக் காப்பாற்ற அமைச்சர் சம்பிக்க அமைச்சரவைக்கு 45அம்ச யோசனை



(கொழும்பு)

அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முகங்கொடுப்பதாயின், அரசாங்கத்துக்குள்ளும் கட்சிக்குள்ளும் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என நகர அபிவிருத்தி மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க அமைச்சரவைக் கூட்டத்தில் அறிவித்துள்ளார்.

அவ்வாறு செய்யவில்லையாயின் அரசாங்கத்திலுள்ள சில அமைச்சர்கள் தனியான தீர்மானங்களை எடுக்க வாய்ப்பு இருப்பதாக அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கம் எஞ்சியுள்ள காலத்தில் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் அடங்கிய 45 அம்ச பிரேரணையொன்றை அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## மூத்தோர் பேரவை நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச மூத் தோர் பேரவையின் ஆண்டுப் பொதுக் கூட்டம் நல்லூர் பிரதேசசெயலகக் கேட்போர் கூடத்தில் பேரவையின் தலைவர் அ.பரம்சோதி தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதில் அ.பரம் சோதி தலைவராகவும் க.தர்மநாயகம் செயலாளராகவும் பொ.தவராஜசிங்கம் பொருளாளராகவும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் மேலும் எட்டுப்பேர் சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். (இ-7)

## இன்று தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் வடக்கு ஸ்ரீ நாகலிங்கேஸ்வரர் ஆலய அலங்காரத் திருவிழா கடந்த 9ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. இதில் இன்று 22ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் நாளை 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (இ)

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய மஹோற்சவ விஞ்ஞாபனம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 25 நாட்களுக்கு இடம் பெறவுள்ளது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 150 | 70 | 120 | 100 | 120 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 95 | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 200 | 160 | 200 | 200 | 200 |
| தக்காளி | 80 | 100 | 120 | 70 | 80 | 100 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 60 | 70 | 80 | 60 | 60 |
| கோவா | 30 | 40 | 20 | 30 | 20 | 40 | 60 |
| கரட் | 80 | 100 | 60 | 60-120 | 60 | 120 | 60 |
| பூசணி | 60 | 60 | 35 | 60 | 40 | 60 | 60 |
| புடோல் | 50 | 60 | 50 | 80 | 60 | 80 | 70 |
| வாழைக்காய் | 60 | 60 | 40 | 50 | 60 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 150 | 80 | 120 | 120 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 80 | 100 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 100 | 200 | 100 | 120 | 120 | 200 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 70 | 60 | 100 | 200 | 100 |
| கருணைக் கிழங்கு | 50 | 100 | 50 | 60 | 50 | 80 | 50 |
| பயற்றங்காய் | 100 | 200 | 150 | 170 | 160 | 160 | 100 |
| லீக்ஸ் | 60 | 100 | 60 | 60 | 80 | 120 | 70 |
| பீற்றூட் | 40 | 100 | 170 | 60 | 60 | 80 | 80 |
| குடைமிளகாய் | 150 | 200 | 170 | 120 | 60 | 200 | 180 |
| முருங்கைக்காய் | 600 | 600 | 500 | 600 | 600 | 800 | 60 |
| போஞ்சி | 80 | 100 | 70 | 80 | 60 | 120 | 80 |
| கத்தரிதும்புள்ள | 100 | 100 | 40 | 100 | — | 100 | 60 |
| கீரை - 1பிடி | 50 | 20 | 20 | 30 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 200 | 150 | 150 | 200 | 150 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 55 | 50 | 50 | 60 | 60 | 50-60 | 50 |
| இராசவள்ளி | 200 | 180 | 200 | 160 | 160 | 140 | 150 |
| வெங்காயப்பூ | 80 | 60 | 60 | 60 | 80 | 100 | 200 |
| முள்ளங்கி | 60 | 60 | 60 | 60 | 50 | 60 | 70 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | 30 | 40 | 20 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 60 | 60 | 60 | 60 | 80 | 70 |





இலங்கை சின்மயா மிஷன், யாழ்ப்பாண நிலையத்தில் 2011 ஆம் ஆண்டில் இருந்து பணியாற்றி வரும் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யாவுக்கு கடந்த பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி மகா சிவராத்திரி தினத்தில் சந்நியாச தீட்சை வழங்கப்பட்டது. உலகளாவிய சின்மயா மிஷனின் தலைமை ஆச்சிரமம் ஆகிய மும்பை "சாந்தீபனி சாதனாலாயா" குருகுலத்தில் சின்மயா மிஷனின் உலகளாவிய தலைவர் சுவாமி ஸ்வரூபானந்தாவால் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யாவுக்கு சந்நியாச தீட்சை அளிக்கப்பட்டு, "சுவாமி சிதாகாசானந்த ஸரஸ்வதி" எனும் நாமம் வழங்கப்பட்டது. இந்நிலையில் யாழ்.சின்மயா மிஷன் ஞானவேல் ஆச்சிரமம் மற்றும் இல.9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூரில் அமைந்துள்ள சின்மயா மிஷனுக்கு வருகை தந்தபோது சின்மயா மிஷன் குடும்பத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வை படங்களில் காணலாம். (படங்கள் - ஐ.சிவசாந்தன்)

# களேபரமான ஜெனிவா உபகுழுக்கூட்டம்

## சரத் வீரசேகர குழுவினரும் புலம்பெயர் அமைப்பினரும் வாக்குவாதம்

(ஜெனிவா)

ஜெனிவா மனித உரிமை பேரவை வளாகத்தில் உபகுழுக்கூட்டம் நடைபெற்றது. இதன்போது இலங்கை மனித உரிமை நிலைமை குறித்து விரிவாக ஆராயப்பட்டது. இந்த உபகுழுக்கூட்டத்தில் தென்னிலங்கையிலிருந்து ஜெனிவா சென்றுள்ள எலிய அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் சர்வதேச மனித உரிமை செயற்பாட்டாளர்கள் எனப் பலர்கலந்துகொண்டனர்.

இந்த உபகுழுக்கூட்ட த்தில் எலிய அமைப்பின் பிரதிநிதியான நாலக்ககொடஹேவா உரையாற்றுகை யில்,

இலங்கையில் முஸ்லிம் மக்கள் வடக்கிலிருந்து 1991 ஆம் ஆண்டு 48 மணிநேரத்தில் வெளியேற்றப்பட்டனர் என்று கூறிக்கொண்டிருக்கும்போது அவருக்கு பேசுவதற்கு இடையூறு விளைவிக்கப்பட்டது. இருந்தும் தன்னை முதலில் பேச விடுமாறு நாலக்ககொடஹேவா கூறி பேச முயற்சித்தார். பின்னர் அவருக்கு பேசுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது.

அவர்உரையாற்றுகையில்



பயங்கரவாத அமைப்பான புலிகள் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த முஸ்லிம்களை 48 மணிநேரத்தில் வெளியேறுமாறு கோரினர். அவ்வாறு வெளியேற முடியாத 600 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். இவ்வாறு தான் புலிகள் செயற்பட்டனர்.

தமிழ், முஸ்லிம் மக்கள் எமது சகோதரர்கள், இலங்கையில் பிறந்தவர்களுக்கு இலங்கை சொந்தமான நாடாகும். அங்கு எந்த பிரச்சினையும் இல்லை. அந்த உரிமையை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் பயங்கரவாதத்தை ஏற்றுக் கொள்ள மாட்டோம். இலங்கை பிரச்சினை குறித்து பேசுபவர்கள் எனது நாடு புலிகளின் பயங்கரவாதத்தில் சிக்கியிருந்ததை மறந்து விட்டீர்கள்.

எத்தனை சிங்கள மக்கள் கொல்லப்பட்டார்கள் என்று நாலக்ககொடஹேவா உரையாற்றிக் கொண்டிருக்கும் போது உபகு முக்கூட்டங்களை நடத்திக்கொண்டிருந்தவர்கள் அவரின் பேச்சை முடிக்குமாறு கோரினர். இதனையடுத்து எலிய அமைப்பின் பிரதிநிதிகளுக்கும் உபகுழுக்கூட்டத்தை நடத்திக் கொண்டிருந்தவர்களுக்குமிடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதன்போது புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் ஏன் உண்மையை மறைக்கின்றீர்கள் என எலிய அமைப்பினரைப்பார்த்து கேள்வி எழுப்பினர். அந்த சந்தர்ப்பத்தில் உபகுழுக்கூட்டத்தில் களேபர நிலைமை ஏற்பட்டதுடன் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த அனைவரும் கூச்சலிட ஆரம்பித்தனர்.

இந்த சூழலில் நிலைமையை கட்டுக்குள் கொண்டுவர உபகுழுக்கூட்டத்தை நடத்தியவர்கள் முயற்சித்தபோதும் முடியாமல்போனது. அமைதியாக இருங்கள், அமைதியாக இருங்கள் என கூட்டத்தை நடத்தியவர்கள் கோரிக்கை விடுத்தபோதும் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை. புலம்பெயர் அமைப்பினரும் எலிய அமைப்பின் பிரதிநிதிகளும் தொடர்ச்சியாக வாக்குவாதத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

எலிய அமைப்பின் பிரதிநிதிகள் உபகுழுக்கூட்டத்தின் நடைமுறைகளை மீறுவதாக புலம்பெயர் அமைப்பினர் குற்றம்சாட்டினர். இதன்போது மற்றுமொரு எலிய அமைப்பின் பிரதிநிதி உரையாற்றுகையில்,

தமிழ் மக்களின் கொலை தொடர்பில் பேசுகிறீர்கள். எவ்வளவு சிங்கள மக்கள் கொல்லப்பட்டனர் என்று உங்களுக்குத் தெரியுமா? எங்களிடம் சாட்சியங்கள் உள்ளன. கர்ப்பிணித்தாய்மார்கள் கொல்லப்பட்டனர். குழந்தைகளை கொன்றனர். இவ்வாறு அந்த பிரதிநிதி உரையாற்றிக்கொண்டிருக்கையில் மீண்டும் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது.

இரண்டு தரப்பினரும் மாறிமாறி குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர். எலிய அமைப்பினரும் புலம்பெயர் அமைப்பினரும் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டுகொண்டிருந்தனர். இரண்டு தரப்பினரும் எழுந்து நின்று கடும் வாதப்பிரதிவாதங்களில் ஈடுபட்டனர்.

இதன்போதுநிலைமையை கட்டுப்படுத்த உபகுழுக்கூட்டத்தை தலைமைதாங்கி நடத்திக்கொண்டிருந்தவர்கள் முயற்சித்த போதும் அது கைகூடவில்லை. தொடர்ந்து புலம்பெயர் அமைப்பினரும் எலிய அமைப்பினரும் வாக்குவாதப்பட்டுக்கொண்டே இருந்தனர். தொடர்ந்து இரண்டு தரப்பினருக்கிடையில் வாய்த்தர்க்கம் முற்றியநிலையில்அருகருகே சென்று சத்தமிட ஆரம்பித்தனர்.

இந்நிலையில் உபகுழுக்கூட்டத்தை தலைமை தாங்கி நடத்தியவர்கள் செய்வதறியாது திகைத்திருந்தனர். அப்போது இரண்டு தரப்பினரும் பயங்கரவாதிகள், பயங்கரவாதிகள் என கூச்சலிட்டுக்கொண்டனர். வந்து உங்கள் இடங்களில் அமர்ந்து உபகுழுக்கூட்டங்களை நடத்த உதவுங்கள் என்று கூறியபோதும் அவர்களினால் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள்கொண்டுவர முடியவில்லை. இதனையடுத்து கூட்டத்தை நடத்த முடியாத சூழல் ஏற்பட்டதுடன் உபகுழுக் கூட்டம் முடிவுறுத்தப்பட்டது. (இ-7)

## கர்ப்பிணிப் பெண் கொலை

## குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைகள் விரைவில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறையில் கர்ப்பிணிப் பெண் கொலை வழக்கில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளதாக நீதவான் தெரிவித்தார்.

இக் கொலை தொடர்பான வழக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் நீதவான் ஏ.எம்.எம்.றியால் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே நீதிவான் இதனைத் தெரிவித்தார்.

வழக்கு விசாரணையின் போது வழக்கின் விசாரணையை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் ஆரம்பிப்பதில் ஏன் தாமதம் காணப்படுகிறது என சட்டத்தரணி ஷாலினி மன்றை வினவியிருந்தார். இதற்குப் பதிலளிக்கும் போதே நீதவான், இவ் வழக்கின் விசாரணையை ஆரம்பிப்பதற்கான அறிவுறுத்தல்களை தாம் அனுப்பியுள்ளதாகவும் விரைவில் விசாரணைகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஆரம்பிப்பார்கள் எனவும் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து குறித்த வழக்கு விசாரணையை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி வரை ஒத்தி வைத்ததுடன் அதுவரை சந்தேக நபர்கள் இருவரையும் விளக்கமறியலில் வைக்கவும் நீதவான் உத்தரவிட்டார். (இ-4)

## தேசிய ரீதியில் செயற்பட்டு மகிழ்ந்து தங்கப் பதக்கம் வென்ற மாணவர்கள் கௌரவிப்பு





(யாழ்ப்பாணம்)

ஆரம்ப பிரிவுக்கான தேசிய மட்ட 'செயற்பட்டு மகிழ்வோம்" குழு போட்டியில், வெற்றியீட்டி தங்கப்பதக்கம் வென்ற கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு கடந்த 19 ஆம் திகதி பாடசாலையில் இடம்பெற்றது.

ஆரம்பப் பிரிவுக்கான தேசிய மட்ட போட்டி கடந்த 3, 4 ஆம் திகதிகளில் கண்டி போகம்பரை மைதானத்தில் நடைபெற்றது. 12 பேர் அடங்கிய குழுப் போட்டி மாவட்ட மட்டத்தில் இடம்பெற்று அதில் வெற்றியீட்டிய குழுவினர் தேசிய மட்ட போட்டியில் கலந்து கொண்டனர்.

அதில் கோப்பாய் கோட்டத்தில் இருந்து கலந்து கொண்ட கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய மாணவர்கள் தங்கப்பதக்கத்தினை பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வில் கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர். (இ-9)

# பிரதமர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையால் கூட்டு எதிரணிக்குள் குழப்பம்



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வரும் விடயத்தில், மகிந்த ராஜபக்ஷ ஆதரவு கூட்டு எதிரணிக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

கூட்டு எதிரணியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நாடாளுமன்ற வளாகத்தில் இடம்பெற்றது.

இதன்போது, ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கூட்டு எதிரணியினரின் கையெழுத்தைப் பெற முன்னர், அரச தரப்பில் உள்ளவர்களின் ஆதரவைப் பெற வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பொறிக்குள் கூட்டு எதிரணி சிக்கிக் கொள்ளக் கூடாது என்றும், ரணில் விக்கிரமசிங்கவைப் பதவி நீக்கினால், அடுத்த பிரதமராக யாரை நியமிப்பது என்ற முடிவை எடுக்காமல் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வரக் கூடாது என்றும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

தோல்வியடையக் கூடிய நிலையில் நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைக்கக் கூடாது என்றும் மகிந்தவுக்கு நெருக்கமானவர்களான பிரசன்ன ரணதுங்க, நிமால் லான்சா, குமார வெல்கம, ரமேஸ் பத்திரன போன்றவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அத்துடன் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் தாம் கையெழுத்திடப் போவதில்லை என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

இதனிடையே நம்பிக்கையில்லாப் பிரேரணையில் 52 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அதேவேளை, கூட்டு அரசாங்கத்தில் இடம்பெற்றுள்ள அமைச்சர்களான தயாசிறி ஜெயசேகர, சந்திம வீரக்கொடி போன்றவர்களும் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையெழுத்திடப் போவதில்லை என்று கூறியுள்ளனர். (இ-7)

# முகநூலில் இனக்குரோதப் பரப்புரை; இராணுவ அதிகாரிக்கு மறியல்

(கொழும்பு)

முகநூல் மூலம் இனங்களுக்கு இடையில் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் வெறுப்புணர்வுக் கருத்துக்களை வெளியிட்டதாக கைது செய்யப்பட்ட இராணுவ அதிகாரியை விளக்கமறியலில் வைக்க கொழும்பு பிரதம நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த, கிரிஷன் சிறிநாத் பெரேரா என்ற இராணுவ அதிகாரி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கடந்த 17 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

முகநூல் ஊடாக இவர் வெறுப்புணர்வைத் தூண்டும் பரப்புரைகளில் ஈடுபட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு கொழும்பு பிரதம நீதவான் முன்னிலையில் நிறுத்தப்பட்டார்.

இவருக்கு பிணை வழங்கக் கோரி சட்டவாளர் முன்வைத்த கோரிக்கையை நிராகரித்த நீதவான் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

அத்துடன், குறித்த இராணுவ அதிகாரியின் கணனி, தொலைபேசி உள்ளிட்டவற்றை அரச பகுப்பாய்வாளர் திணைக்களத்துக்கு அனுப்பி அறிக்கையை சமர்ப்பிக்கவும் முகநூல் நிறுவனத்தின் விரிவான அறிக்கை ஒன்றைப் பெற்று குற்றப் புலனாய்வுப் பிரிவு நீதிமன்றில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் நீதவான் உத்தரவிட்டுள்ளார். (இ-7)

# O/L பரீட்சை குறித்து புதிய தீர்மானங்கள்

(கொழும்பு)

க.பொ.த.சாதாரணப் தரப் பரீட்சை ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் மாதம் முதலாம் வாரத்தில் நடத்தப்பட்டு விடைத்தாள் மதிப்பீடு செய்யும் பணியும் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டு டிசெம்பர் மாதத்துக்குள்ளேயே சகல நடவடிக்கைகளையும் நிறைவு செய்ய கல்வி அமைச்சு திட்டமிட்டு வருகின்றது.

இந்தத் திட்டத்தை துரிதப்படுத்துவதற்கு பரீட்சை பணிகளில் ஈடுபடுத்தப்படும் சுமார் 30 ஆயிரம் ஆசிரியர்களைப் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணியிலும் கலந்துகொள்ளச் செய்ய கல்வி அமைச்சும், பரீட்சை திணைக்களமும் ஆராய்ந்து வருவதாகவும் கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-7)

## மத்திய வங்கி விவகாரம் முதல் வழக்காக எடுக்கப்பட வேண்டும்

# அரசு மீதுள்ள குற்றத்தை மறைக்க விஜித ஹேரத் எம்.பி.ஆலோசனை

(கொழும்பு)

வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்த அமைக்கப்பட்டுள்ள விசேட நீதிமன்றங்கள் நிறுவப்பட்டதன் பின்னர் இலங்கை மத்திய வங்கி பிணைமுறி மோசடியுடன் தொடர்பான வழக்கு முதலாவதாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றுகையில் இந்த வேண்டுகோளை அவர் விடுத்தார்.

தான் தனிப்பட்ட வகையில் நீதி அமைச்சருடன் இது தொடர்பில் கலந்துரையாடியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறு புதிய நீதிமன்றத்தின் முதலாவது வழக்கு விசாரணை மத்திய வங்கி பிணைமுறி தொடர்பான வழக்காக அமையுமாயின், அரசாங்கம் இந்த நீதிமன்றங்களை அமைப்பது அரசியல் பழிவாங்குவதற்காகும் என்ற குற்றச்சாட்டும் நீங்குவதற்குக் காரணமாக அமையும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### மாற்றங்களை ஏற்கும் மனநிலை

வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்கிறபோது கூட, அங்கெல்லாம் "இட்லி கிடைக்குமா? தோசை கிடைக்குமா? தயிர் சாதம் கிடைக்கிறது என்றால் 50 மைல் கூடப் பயணம் செய்து போய்ச் சாப்பிடத் தயார்" என்று சொல்லுகிறவர்களை நான் பார்த்திருக்கிறேன்.

இது என்ன பழக்கம்? இப்படியா காலம் பூராகவும் ஒரே வகையான உணவைத் உண்பது? இதற்கு என்ன காரணம்? பழக்கப்பட்டுவிட்ட மனம் (Mental Folds).

ஒரு காகிதத்தை அழுத்தி மடித்துவிட்டுக் காற்றில் தூக்கி எறிந்தால் கலைந்து பறந்து மறுபடி மடிக்கப்பட்ட பாணியிலேயே மூடிக் கொண்டு தரையிறங்கும்.

"இது இப்படித்தான் நடக்க வேண்டும்" என்று எண்ணுகிறவர்களும் இதே ரகத்தைச் சேர்ந்தவர்கள்.

"ஐயையோ, அதுவா? எனக்குச் சுத்தமாய்ப் பிடிக்காது"

"சேச்சே! நான் கஷ்டப்பட்டாலும் படுவேனே தவிர, அவன்கிட்ட போய் நிற்க மாட்டேன்"

"நான் 55 வருஷமா முண்டா வச்ச பனியன் தான் போடுறேன்"

"எனக்கு இது தான் ராசி" என்றெல்லாம் சிறு வட்டத்திலேயே வாழ்வது எப்படிச் சரி?

இப்படிப் பிடித்த பிடியை விட்டுப் பல விடயங்களில் விலகாதவர்களுக்குச் சில வார்த்தைகள்.

கொள்கைகளில் உறுதி காட்டுவது என்பது வேறு; கட்டாயமாகத் திணிக்கப்படும் மாறுதல்களை ஏற்றுக் கொள்ளும் மனநிலையை வளர்த்துக் கொள்வது என்பது வேறு.

உலகம் மாறி வருகிறது; மக்கள் மாறி வருகிறார்கள்; தேவைகள் மாறி வருகின்றன. இந்தப் புதிய சூழல்களுக்கு நம்மை மாற்றிக் கொள்ளாமல் "அந்தக் காலத்து" ஆசாமிகளாகவே இருந்தால் சரியாக வராது.

நம் உடலில் உள்ள செல்கள் தொடர்ந்து புதுப்பிக்கப்படுவதாக விஞ்ஞானம் கூறுகிறது. ஆனால் நாம் புதுப்பிக்கப்படுகிறோமா என்றால் பெரும்பாலும் இல்லை.

அதே இட்லியை உண்டு கொண்டு, அதே பழம் பார்வைகளைப் பார்த்துக் கொண்டு, அதை மன உறுதி என்றும் கொள்கைப் பிடிப்பு என்றும் கூறிக் கொண்டு வாழ்வைக் குதறிக் கொண்டிருக்கிறவர்கள் தவறு செய்கிறார்கள்.

மனத்தை இலகுவாக வைத்துக் கொள்ள வேண்டும். கிரிக்கெட் வீரர் பரூக் இன்ஜினியர்; ஒரு விக்கெட் கீப்பர். வேறு வழியில்லாமல் ஒருமுறை ஓப்பனிங் செய்தார். அதுதான் அவருக்குப் பெரிய பெயரைப் பெற்றுத் தந்தது. கிஷோர் குமார் நடிக்கத்தான் வந்தார். பாடத்தான் வாய்ப்புக் கொடுத்தார்கள். உலகம் வியக்கும் பாடகரானார். இல்லை நான் நடிக்கத்தான் செய்வேன் என்று வறட்டுத்தனம் செய்திருந்தால்? செக்கு மாட்டுத் தனமான வாழ்வில் என்ன இருக்கிறது? மாறுதல்களுக்கு நம்மை உட்படுத்தும் போதுதான் வாழ்வு இனிக்கிறது.

**லேனா தமிழ்வாணன்**

# கயிலாச யாத்திரை

## ஓர் அனுபவப் பகிர்வு 03

### பரமசாமி பஞ்சாட்சரம்

**கயிலாச மலையும் புராணங்களும்**


சிவபெருமானும் பார்வதி அம்மனும் சிவனும் சக்தியுமாக நிரந்தரமாக இருந்து அருள்பாலிக்கும் இடம் திருக்கயிலாசம். இத் திருக்கயிலாசத்தில் சிவனுக்கு வாகனமான வரும் திருவாசலில் இருந்து காப்பவராகவும் நந்தி தேவர் விளங்குகின்றார். சிவபெருமானுக்கு ஏவலாளர்களாகச் சிவகணங்களும் உதவியாளர்களாகச் சித்தர்களும் இருக்கிறார்கள். கயிலையின் எட்டுத் திசைகளையும் அட்டதிக்குப் பாலகர்கள் காவல் புரிந்துகொண்டு இருக்கிறார்கள். மேற்கூறிய தெய்வங்கள் அனைவரும் அருவ நிலையிலே இருந்து தத்தம் வேலைகளைச் செய்கின்றனர் என்று புராணங்கள் கூறுகின்றன.

கயிலாச மலையிலே நெற்றிக் கண்ணுடன் காணப்படும் முகம் தெற்கு நோக்கிக் காணப்படுகின்றது. இதன் பிரகாரம் இங்கு அருவமாக வியாபித்திருக்கும் சிவபெருமான் சதா காலமும் தென்திசை நோக்கி இருப்பதாகத் திருமுறைகள் கூறிகின்றன. கயிலாச மலையின் முகம் தெற்கு நோக்கிக் காணப்படும்.

சைவ ஞானியர் ஞான திருஷ்டியால் வெளிப்படுத்திய அறிவியற் செய்திகள் விஞ்ஞான அண்டவியல் உண்மைகளுக்கு ஒத்துப் போவதாகச் சான்றுகள் நிரூபித்து வருகின்றன.

பிரளய காலத்தில் சகல படைப்புகளும் அழியுமென்றும் புதுயுகம் தோன்றும் பொழுது புதுப் படைப்புகள் தோன்றுமென்றும் புராணங்கள் கூறுகின்றன. இவற்றில் அநேகமான விடயங்கள் உண்மையாக இருப்பதால் மேலும் சொல்லப்பட்ட விடயங்களையும் இந்துக்கள் ஆகிய நாங்கள் மேலும் ஆராயவேண்டும் என்பது எமது கடமையாகும்.

முதலாம் கரிகாலச் சோழ அரசன் இமயத்திலே தன்னுடைய புலிச் சின்னத்தைப் பொறித்தவன். கரிகாலச் சோழன் என்ற பெயரிலே காணப்படும் இலக்கிய வரலாற்றுக் குறிப்புகள் இரண்டு அல்லது மூன்று கரிகாலச் சோழ மன்னர்கள் ஆட்சிபுரிந்திருக்கக் கூடும் என்பதை உணர்த்துகின்றன.



ஆனால் சிலப்பதிகாரம் சொல்லும் கரிகாலச் சோழன் இமயத்தை வென்று தன் ஆட்சியை மேலும் விரிவுபடுத்தியிருப்பான் என ஆய்வாளர்கள் எழுதியுள்ளார்கள்.

ஆதி காலத்திலே கயிலாச யாத்திரைக்கு ஞானிகளும் சமயப் பெரியார்களும் முனிவர்களும் அரசர்களும் மோட்சமடைய விரும்பியவர்களும் சென்றார்கள். இவர்கள் கயிலையை இந்தியாவின் ஒரு பகுதியாக நினைத்துச் சென்று வந்ததாகத்தான் புராணங்கள் கூறுகின்றன.

**கயிலாச மலைப் பகுதி ஆட்சி மாற்றமும் ஒப்பந்தமும்**

கயிலாச மலைப் பகுதியையும் திபெத் நாட்டையும் 1959 ஆம் ஆண்டு சீனா தன்வசப்படுத்திக் கொண்டது. இதன் பின் இந்தியாவிலிருந்து கயிலைக்குச் செல்லும் யாத்திரிகர்களை 1959 ஆம் ஆண்டிலிருந்து 1981 ஆம் ஆண்டு வரை சீன அரசாங்கம் அனுமதிக்கவில்லை. அக்காலத்தில் கயிலை யாத்திரை செய்பவர்களின் தொகை மிகவும் குறைந்திருந்தது.

இந்திய அமைச்சர்கள் ஊக்கமெடுத்ததன் காரணமாக 1981 ஆம் ஆண்டில் இந்திய அரசும் சீன அரசும் இணைந்து இந்திய யாத்திரிகர்கள் கயிலை செல்வதற்குரிய ஒரு ஒப்பந்தத்தைச் செய்தன.

(தொடரும்)

# கதிர்காமத்தில் துப்பாக்கிச் சூடு! பொலிஸ் கான்ஸ்டபிள் காயம்

(கொழும்பு)

கதிர்காமத்திற்கு அருகாமையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் காயமடைந்துள்ளார்.

தங்காலை பொலிஸ் நிலையத்தின் புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றி வந்த பொலிஸ் கான்ஸ்டபிளே இவ்வாறு காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தகவல் வெளியிட்டுள்ளது.

தனிப்பட்ட முரண்பாடு காரணமாக இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் ருவான்குணசேகர தெரிவித்துள்ளார்.

கல்கடாஸ் ரக துப்பாக்கி ஒன்றினால் இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. காயமடைந்தவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-7)

# பிள்ளையான் மன்றில் ஆஜர்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தனின் வழக்கு நேற்றுப் புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன் கீழ் மூன்றாம் கட்ட விசாரணைகள் மற்றும் நான்காம் கட்ட விசாரணைகள் மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி இஸ்ஸடின் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்டத்தரணிகள் ஆஜராகியிருந்த இந்த விசாரணையின் போது கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் கொழும்பு உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப் பத்திரிகையின் அடிப்படையில் வழக்கு விசாரணைகள் நடைபெற்றன.



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலை தொடர்பாக சிவநேசதுரை சந்திரகாந்தன் மற்றும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பிரதிப்மாஸ்டர் உட்பட ஐந்து பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மணவாளக் கோலம் நாளை

(யாழ்ப்பாணம்)

இருபாலை கற்பகப் பிள்ளையார் கோவில் மணவாளக் கோல சங்காபிஷேகமும் தண்டிகைத் திருவிழாவும் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இடம்பெறும்.

கற்பகப் பிள்ளையாருக்கு 1008 சங்காபிஷேகமும் பரிவார மூர்த்திகளுக்கு 108 சங்காபிஷேகமும் நடைபெற்று விநாயகப் பெருமான் அழகிய பூந்தண்டிகையில் வீதி வலம் வருவார். (இ)

# த.தே.கூ. மூன்று உள்ளூராட்சி சபைகளில் தனித்து ஆட்சியமைக்கும்-துரைராசசிங்கம்




(ஏறாவூர்)

வடக்கு- கிழக்கு மாகாணங்களில் மூன்று உள்ளூராட்சி சபைகளைத் தவிர ஏனைய எந்தவொரு சபையிலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தனித்து ஆட்சியமைக்க முடியாத நிலை உருவாகியுள்ளது என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராசசிங்கம் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்யும் நிகழ்வில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் மூன்று உள்ளூராட்சி சபைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனித்து ஆட்சியமைத்துள்ளது. நினைத்த அளவிற்கு சபையை அமைத்துக்கொள்ள முடியாத நிலைமை இப்போது ஏற்பட்டிருக்கின்றது.

அறுபது ஆண்டுகால அரசியல் நிலைமைக்கும் 2015இற்குப் பின்னர் உள்ள அரசியல் நிலைமைக்கும் உள்ள வித்தியாசத்தை நாங்கள் உளப்பூர்வமாக உணர்ந்து கொண்டு அறிவுபூர்வமாக நடக்க வேண்டிய மிக முக்கியமான காலகட்டத்திலே இருக்கின்றோம்.

இதன் உண்மை நிலையை நாங்கள் அறிய மாவட்ட ரீதியில் மக்களைச் சந்தித்து கருத்தறியக்கூடிய செயற்பாடுகளைத் தொடர்ச்சியாகச் செய்தோம். இதன்மூலம் அறிக்கை தயாரிக்கப்பட்டு அதனை அடிப்படையாகக் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்டமைப்பில் மற்றும் அதன் செயற்பாட்டில் மாற்றங்களைச் செய்ய வேண்டுமென நாங்கள் கருதியிருக்கின்றோம்.

கட்சியில் இருப்பவர்கள் முழுக்க முழுக்க கட்சிக்காக உழைப்பவர்களாக இருக்க வேண்டும். மக்களால் தெரிவு செய்யப்பட்டு பதவிகளைப் பெறுபவர்கள் முழுமையாக மக்களுக்குச் சேவையைச் செய்யக்கூடிய விதத்திலே அவர்களுக்கு சில விடுவிப்புகள் இருக்க வேண்டும். அதற்கான மக்களின் ஆலோசனைகளை நாங்கள் பெற்றிருக்கின்றோம்" எனத் தெரிவித்தார். (இ-7)

# பாலர் விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலைய பாலர் விளையாட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.15 மணியளவில் வளர்மதி விளையாட்டு மைதானத்தில் நிலையத் தலைவர் இ.ஜனதன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி, சிறப்பு விருந்தினர்களாக முல்லைத்தீவு கல்விவலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.சாரங்கன், ஓய்வுநிலை அதிபரும் நிலைய மூத்த உறுப்பினருமான த.அப்புத்துரை, கௌரவ விருந்தினர்களாக சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜே/311 திருமதி றொகான் பிறேமினி, சாவகச்சேரி பனை தென்னை வள கூட்டுறவுச் சங்க அபிவிருத்தி (கல்வி) உத்தியோகத்தர் தி.விஜயதீபன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

# அதிகாரங்களைப் பறிக்கும் சட்டமூலத்திற்கு எதிராக வாக்களிக்க வேண்டும்-பந்துல எம்.பி



(கொழும்பு)

நாடாளுமன்றத்தின் அதிகாரங்களைப் பறிக்கும் சட்டமூலத்திற்கு எதிராக சகலரும் தங்கள் வாக்குகளைப் பயன்படுத்த வேண்டும் என மகிந்த ஆதரவு கூட்டு எதிர்க்கட்சியின் முக்கிய நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன கேட்டுக் கொண்டுள்ளார்.

சொத்துக்களை முகாமைத்துவம் செய்யும் புதிய சட்டமூலம் குறித்து கொழும்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

'சொத்துக்களை முகாமைத்துவம் செய்யும் சட்டமூலம் குறித்த விவாதம் நாடாளுமன்றில் நடைபெறவுள்ளது. இந்த சட்ட மூலம் நாடாளுமன்றத்திற்கு இருக்கும் நிதி அதிகாரத்தைப் பறித்து, நாடாளுமன்றத்தைத் தரைமட்டமாக்கியுள்ளது.

பிரதமரைப் பிரதானமாகக் கொண்டு துறைசார் அமைச்சர்கள் தங்களுக்கு இலாபம் கிடைக்கும் வகையில், சில உடன் படிக்கைகளுக்குஅமைய உள்நாட்டுவெளிநாட்டு உதவியாளர்களிடமிருந்து மொத்தமாக கடனைப் பெற்றுக் கொள்ள, இந்த சட்டமூலம் வழி செய்கிறது. இது மிகவும் பயங்கரமானது.

அவ்வாறு கடனைப் பெற்றுக் கொள்ள முன்னின்று செயற்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக சிவில் மற்றும் குற்றவியல் சட்டப்பிரிவில் குற்றம் சுமத்த முடியாத வகையில் அவர்களைப் பாதுகாப்பதாக இந்த சட்டமூலம் அமைந்துள்ளது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தற்போதும், நம்பிக்கையில்லாப் பிரேரணை பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளார்.

இலங்கை வரலாற்றில், மத்திய வங்கியில் இடம் பெற்ற பிணைமுறி மோசடி போன்றதொரு மோசடி எங்கும் நடைபெற்றது இல்லை.

பிணை முறியினால் இது வரையில் 2000 பில்லியன் நட்டம் ஏற்பட்டுள்ளதாக நாம் நாடாளுமன்றில் நிரூபித்துள்ளோம். இந்த சட்டமூலம் குறித்து நாம் சபாநாயகரின் கவனத்திற்கு கொண்டு வருவதுடன், நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் சகல உறுப்பினர்களிடமும் ஒன்றைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

கட்சி விசுவாசத்திற்கும் கட்சியின் நிலைப்பாட்டிற்கும் அப்பால்சென்று, நாடாளுமன்றத்தின் அதிகாரத்தைப் பறித்து எடுக்கும்இந்த சட்ட மூலத்திற்கு எதிராக, உங்கள்வாக்குகளை பயன்படுத்துங்கள்' என நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-7)

# கட்சிக்கு எதிரானவர்கள் உடன் நீக்கப்பட வேண்டும்

## வியாழேந்திரன் கோரிக்கை

(கொழும்பு)

தேர்தல் காலங்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் இருந்துகொண்டு அக்கட்சிக்கு எதிராக செயற்படுகின்ற நிலைமை எதிர்காலத்தில் முற்றாக நீக்கப்பட வேண்டுமென மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ் வியாழேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்யும் நிகழ்வில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கலந்து கொண்டுஉரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "தமிழ்தேசியக் கூட்டமைப்புக்குள் இருந்து கொண்டு கட்சியின் நடவடிக்கைக்கு எதிராக செயற்படும் நிலைமை நீக்கப்படாவிட்டால், எதிர்வரும் கிழக்கு மாகாணசபை தேர்தலில் கட்சி பாரிய பின்னடைவினை சந்திக்கும்.

தேர்தல் காலங்களில் ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியினர், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினை சேர்ந்தவர்கள் என்று கூறியே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மீதான விமர்சனங்களை முன்வைத்தனர். அது தமிழ் மக்கள் மத்தியில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இத்தனை தடைகளையும் தாண்டி வடக்கு மற்றும் கிழக்கில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அதிகமான ஆசனங்களைப் பெற்றுள்ளது. தமிழ் தேசியக் கூட்டமைப்பினை எதிர்வரும் காலங்களில் ஒரு கட்டுக்கோப்புடன் பலப்படுத்த வேண்டும்.

தேர்தல்காலங்களில்தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வெற்றியை சிதைப்பதற்காக திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட சவால்களை, விமர்சனங்களை, விசமத்தனங்களை தாண்டி உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் வெற்றி பெற்றுள்ளனர். உயரிய நோக்குடன் உருவாக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பில் மூன்று கட்சிகள் உள்ளன. அதனைச் சிதைக்காமல், கட்டியெழுப்ப நாங்கள் அனைவரும் இணைந்து தொழிற்பட வேண்டும்.

எதிர்காலங்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்யப்பட்ட கட்சியாக ஒரே நோக்குடன் பயணிக்குமானால், எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலின் மூலம் கிழக்கில் தமிழர் ஒருவர் முதலமைச்சராக வரும் நிலை யேற்படும்.

வடக்கு மாகாணத்தில் எடுக்கப்படும் தீர்மானங்களை கிழக்கு மாகாணத்தில் முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாது" எனத் தெரிவித்தார். (இ-7)

# போக்குவரத்து நெரிசல் காரணமாக நீதிமன்றில் ஆஜராக முடியவில்லை

## விமல் வீரவன்ச தகவல்



(கொழும்பு)

போக்குவரத்து நெரிசல் காரணமாக நீதிமன்றில் முன்னிலையாக முடியவில்லை என தேசிய சுதந்திர முன்னணியின்' தலைவர் விமல் வீரவன்ச நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

விமல் வீரவன்ச மற்றும் அவரது கட்சியின் உறுப்பினர் ஜயந்த சமரவீர ஆகியோரை நேற்று முன்தினம் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், இருவரும் நீதிமன்றில் முன்னிலையாகியிருக்கவில்லை. இதனால்இருவரையும் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இந்த நிலையில், வாகன போக்குவரத்து நெரிசல் காரணமாக நீதிமன்றில் முன்னிலையாக முடியவில்லை என இருவரும் சட்டத்தரணிகள் ஊடாக நேற்று நீதிமன்றுக்கு அறிவித் துள்ளனர்.

2016ஆம்ஆண்டில்ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த போது அவருக்கு எதிராக துன்முல்ல சந்தியில் போராட்டம் நடத்தும் நோக்கில், சட்ட விரோதமாக வீதியை மறித்து மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தியதாக குற்றம் சுமத்தி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேலும், இந்த வழக்குத் தொடர்பான விசாரணைகளில் விமல் வீரவன்ச, ஜயந்த சமரவீர ஆகியோர் முன்னிலையாகத் தவறியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1363

Search for people, places and things Nagendram Home

### துஷ்யந்தி

மனைவி: என்னாங்க இது. நாம காஷ்மீருக்கு போறதுக்கு ஒரேயொரு டிக்கெட் வாங்கிட்டு வந்திருக்கீங்க?



கணவன்: அடடே! சந்தோசத்துல என்னையே மறந்துட்டேன்!!!

### துஷிதா

நமக்காக யாரும் இல்லைனு பீல் பண்றத விட



நமக்கு யாரும் தேவையில்லைனு தூக்கி எறிஞ்சிட்டு போய்ட்டே இருக்கனும்...!

### துளசி

தாய்ப்பாசத்திற்கு இணை வேறு எதுவுமில்லை



### துஷான்

கருத்துக்களைத் துணிந்து பதிவு செய். இன்று தலையில் வைத்துக்கொண்டாடும் கருத்துக்கள் ஒரு காலத்தில் எதிர்க்கப்பட்ட கருத்துக்களாகவே இருந்திக்கக்கூடும்



### துளசிகா

நீ இருக்க ஒரு கருவறை இருந்தது என் வயிற்றில்



நான் இருக்க ஒரு இருட்டறை கூடவா இல்லை உன் வீட்டில் .

### துஷ்யந்த்

ஒரு உயிரை நீ நேசிப்பது நிஜம் என்றால் அதைப் பறவை போலப் பறக்கவிடு...



அது உன்னை நேசிப்பது உண்மை என்றால் அது உன்னை மீண்டும் தேடி வரும்....!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இந்து மதத்தை அவமதிக்கிறார் ஸ்டாலின் தமிழிசை பகிரங்க குற்றச்சாட்டு



(சென்னை)

இந்து மதம் சார்ந்த எந்த நடவடிக்கைகளும் தமிழகத்தில் இருக்கக்கூடாது என்ற ஸ்டாலினின் கொள்கை குறித்து மக்கள் புரிந்து கொள்ள வேண்டுமென, தமிழக பா.ஜ.க. தலைவர், தமிழிசை சௌந்தர்ராஜன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் செய்தியாளர்களை சந்தித்து பேசிய தமிழிசை மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

"தமிழகத்தில் இனி நேர்மறையான அரசியல் வரவேண்டும். எதிர்மறையான அரசியலுக்கு இடமில்லை. யாத்திரைக்கு எதிராக வேண்டுமென்றே போராடி கைதாகுபவர்களை என்ன செய்வது?

பா.ஜ.கவின் ஆட்சியில் தமிழகத்தில் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களைப் பற்றிக் கேட்டால் நாம் பட்டியலிடுவோம்.

ஆனால் காங்கிரஸ் மற்றும் தி.மு.க.இணைந்து ஆட்சி செய்த காலத்தில் மக்களுக்கு என்ன செய்தார்கள் என வினவினால் ஸ்டாலினால் பட்டியலிட முடியாது என தெரிவித்துள்ளார்.

இந்து சமயத்தை ஸ்டாலின் அவமதிக்கிறார் என்ற தமிழிசையின் குற்றச்சாட்டிற்கு இந்துமத ஆர்வலர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். (10)

# சமூக மாற்றத்தை விரும்புகிறது காங்கிரஸ் – ராகுல் காந்தி தெரிவிப்பு

(டில்லி)

பாரதிய ஜனதா கட்சி சமூகத்தில் பிரிவினையை



தூண்டிவிட்டு மோதலை உருவாக்குகிறது. ஆனால் காங்கிரஸ் சமூகத்தில் மாற்றத்தையும், அமைதியையும் ஏற்படுத்த முயற்சிக்கிறது என காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்தார்.

கர்நாடகாவில் விரைவில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெற உள்ளது. இதையொட்டி காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி அங்கு பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார். நேற்று முன்தினம் பெங்களூர் சென்ற அவரை முதல்வர் சித்தராமையா, மூத்த தலைவர் மல்லிகார்ஜீன கார்கே, மாநில தலைவர் பரமேஷ்வர் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

உடுப்பியை அடுத்துள்ள பாடுபிதரியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பங்கேற்ற ராகுல் காந்தி கருத்து தெரிவிக்கையில்,

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய பா.ஜ.க. அரசின் பொருளாதார கொள்கைகள் பணக்காரர்களுக்கும், கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும் சாதகமாக இருக்கிறது. ஏழைகளையும் விவசாயிகளையும் வாட்டி வதைக்கிறது. கடந்த சில ஆண்டுகளில் 15 பணக்காரர்களின் ரூ.2.5 இலட்சம் கோடி கடனை மோடி அரசு தள்ளுபடி செய்திருக்கிறது. ஆனால் கோடிக்கணக்கான விவசாயிகளின் கடன் தள்ளுபடி செய்யப்படவில்லை.

இதுபற்றி கேள்வி கேட்டால், விவசாயிகளின் கடனை தள்ளுபடி செய்வது மத்திய அரசின் கொள்கை அல்ல என பிரதமர் மோடியும், நிதி அமைச்சர் அருண் ஜேட்லியும் சொல்கிறார்கள். அதே நேரத்தில் காங்கிரஸ் ஆளும் கர்நாடகாவில் விவசாயிகளின் ரூ.8 ஆயிரம் கோடி கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

சமூகத்தில் இரு பிரிவினரிடையே பாஜக பிரிவினையை தூண்டிவிட்டு மோதலை உருவாக்குகிறது. கலவரத்தின் மூலம் வாக்குகளை அறுவடை செய்ய முயற்சிக்கிறது. ஆனால் காங்கிரஸ் சமூக மாற்றத்துக்கு வித்திட்ட பசவண்ணர், நாராயண குரு போன்றோரை பின்பற்றுகிறது.

சமூகத்தில் மாற்றத்தையும், அமைதியையும் ஏற்படுத்த முயற்சிக்கிறது. கர்நாடகாவில் சித்தராமையா தலைமையிலான ஆட்சியில் சமூக நீதி நிலைநாட்டப்பட்டுள்ளது.

தலித்துகள், பழங்குடிகள், சிறுபான்மையினர் மீதான தாக்குதல் குறைந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (10)

# அண்டார்டிக்காவில் உருகும் பனிமலை தீவு நாடுகள் கடலில் மூழ்கும் அபாயம்



(சிட்னி)

அண்டார்டிக்காவில் உள்ள ராட்சத பனிப்பாறையும் உருக தொடங்கிவிட்டது. இது முழுவதுமாக கரைந்துவிட்டால் கடலின் நீர்மட்டம் 9.8 அடி உயரும் வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்டார்டிக்காவில் பல பனிப்பாறைகள் மிதக்கின்றன. அவற்றில் பிரான்ஸ் நாட்டின் அளவுக்கு மிகப் பெரிய ராட்சத பனிப்பாறைக்கு 'ராட்டன்' என பெயரிட்டுள்ளனர். பொதுவாக பருவநிலை மாற்றத்தால் அண்டார்டிக்காவில் உள்ள பனிப்பாறைகள் மெல்ல மெல்ல உருகி வருகின்றன.

இது குறித்து 2002 முதல் 2016 ஆம் ஆண்டு வரை 'நாசா' மையம் ஆய்வு நடத்தியது. பனிக்கட்டிகள் உருகுவதால் அண்டார்டிக்கா ஆண்டுக்கு 125 ஜிகா தொன் ஐஸ் கட்டிகளை இழக்கிறது. இதன்மூலம் உலக அளவில் ஆண்டுக்கு 0.35 மில்லி மீற்றர் அளவுக்கு கடல்நீர் மட்டம் உயர்கிறது.

இந்தநிலையில் அண்டார்டிக்காவில் உள்ள 'ராட்டன்' ராட்சத பனிப்பாறையும் உருக தொடங்கிவிட்டது. பருவநிலை மாற்றத்தால் இப் பனிப்பாறை உருகுவதால் அது நகர்ந்து பல நூறுமைல் தூரத்தை கடந்து விட்டது.

இது முழுவதுமாக கரைந்து விட்டால் கடலின் நீர்மட்டம் 9.8 அடி உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் பல்வேறு நாடுகள், தீவுக்கூட்டங்கள் கடலில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (10)

# அமெ–தென்கொரியா போர்ப்பயிற்சி ஏப்ரலில் ஆரம்பம்





(வோஷிங்டன்)

அமெரிக்கா, தென்கொரியா கூட்டு போர்ப்பயிற்சி ஏப்ரல் முதலாம் திகதி ஆரம்பமாகும் என அமெரிக்க ராணுவ தலைமையகம் பென்டகனின் செய்தி தொடர்பாளர் கிறிஸ்டோபர் லோகன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவும், தென்கொரியாவும் ஆண்டு தோறும் கூட்டு போர்ப்பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன. இந்த ஆண்டு குளிர்கால ஒலிம்பிக், மாற்றுத்திறனாளிகளுக்கான 'பாரா ஒலிம்பிக்' போட்டிகள் காரணமாக சற்றே தாமதமாக நடைபெறும் என கடந்த ஜனவரி மாதம் தென்கொரியாவும், அமெரிக்காவும் அறிவித்தன.

இந்த நிலையில், "இவ்விரு நாடுகளின் கூட்டு போர்ப் பயிற்சி ஏப்ரல் முதலாம் திகதி தொடங்கும் என எதிர்பார்க்கிறோம். இது முந்தைய ஆண்டுகளில் எந்த அளவுக்கு இருந்ததோ அதே அளவில் இருக்கும்" என அமெரிக்க இராணுவ தலைமையகம் பென்டகனின் செய்தி தொடர்பாளர் கிறிஸ்டோபர் லோகன் தெரிவித்துள்ளார்.

எங்களது கூட்டு போர்ப் பயிற்சிகள், தற்காப்பு அடிப்படையிலானது. இதை ஆத்திரம் ஏற்படுத்தும் நடவடிக்கையாக வடகொரியா கருத வேண்டியது இல்லை எனவும் தெரிவித்தார்.

இந்த கூட்டு போர்ப்பயிற்சி தொடர்பாக வடகொரிய இராணுவத்துக்கும் தெரிவிக்கப்பட்டு விட்டது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

போர்ப்பயிற்சி மே மாத இறுதியில் நிறைவுபெறும். இதில் அமெரிக்கா சார்பில் 23 ஆயிரத்து 700 வீரர்களும் தென்கொரியா தரப்பில் 3 இலட்சம் வீரர்களும் கலந்து கொள்வார்கள்.

வடகொரிய தலைவர் கிம் ஜாங் உன்னை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் சம்மதம் தெரிவித்துள்ள நிலையில், இந்த கூட்டு போர்ப்பயிற்சி முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (10)

# பேஸ்புக் பாவனையாளர் தகவல் திருட்டு மார்க் நேரில் ஆஜராக அழைப்பாணை



(லண்டன்)

பேஸ்புக் பாவனையாளர்களின் தகவல்கள் திருடப்படுவது குறித்து பேஸ்புக் அதிபர் மார்க் ஜுக்கர்பெர்க் விளக்கம் அளிக்க வேண்டும் என்று இங்கிலாந்து எம்.பிக்கள் குழு உத்தரவிட்டது. சமூக வலைத்தளமான 'பேஸ்புக்' உலகம் முழுவதும் கோடிக் கணக்கானோர் பயன்படுத்தி வருகிறார்கள். இதற்கிடையே, பேஸ்புக் தொடர்பாக இங்கிலாந்தில் பெரும் சர்ச்சை வெடித்துள்ளது.

பேஸ்புக் பயன்படுத்தும் சுமார் 5 கோடி பேர் பற்றிய விபரங்கள் 'ஆப்' மூலம் திருடப்பட்டு, கேம்பிரிட்ஜ் அனாலிட்டிகா என்ற அரசியல் பிரசார நிறுவனத்திடம் பகிர்ந்து கொள்ளப்பட்டதாக தகவல் வெளியாகி அந்த விபரங்கள் அரசியல் பிரசாரத்துக்கு பயன்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி விசாரணை நடத்த இங்கிலாந்து எம்.பி. டாமியன் கொலின்ஸ் தலைமையில் எம்.பிக்கள் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த குழு, பேஸ்புக் அதிபர் மார்க் ஜுக்கர்பெர்க், 26 ஆம் திகதிக்குள் தங்கள் முன்பு நேரில் ஆஜராகி, இவ்விவகாரம் குறித்து விளக்கம் அளிக்க வேண்டும் என்று நேற்று முன்தினம் உத்தரவிட்டது. (10)

# 1963 ஆம் ஆண்டு வரையான மட்டக்களப்பு மாவட்டத்தின் குடித்தொகைப் பண்புகள்



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

1961 ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சியினரால் முன்னெடுக்கப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டத்தினால் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் மாவட்ட நிர்வாகம் செயலிழந்தன. மட்டக்களப்பு மாவட்டத்தின் குறிப்பாக கல்லோய திட்ட நடவடிக்கையை முன்னெடுக்க அன்றைய அரசாங்கம் மட்டக்களப்பு மாவட்டத்தை மட்டக்களப்பு, அம்பாறை என இரு மாவட்டங்களாகப் பிரித்து அம்பாறை மாவட்டத்தின் நிர்வாக மையத்தை அம்பாறை நகரில் அமைத்தது. 1961 இல் அம்பாறை மாவட்டத்தில் 70வீதத்திற்கு மேல் தமிழ் பேசும் தமிழ், முஸ்லிம்களைக் கொண்டிருந்த பொழுதும் சிங்கள மக்களின் நலனுக்காகவும், பாதுகாப்புக்காகவும் கச்சேரியை அம்பாறை நகரில் அமைத்தது. இச் செயற்பாட்டால் 1961 இல் இன்று வரை இம் மாவட்டத்தில் தமிழ் பேசும் கரையோரப் பகுதிவாழ் மக்கள் தங்களுக்கான சேவையைத் தமிழில் பெறுவதில் மிகவும் சிரமப்படுவதுடன் பல்வேறு நிலைகளில் பாதிக்கப்பட்டுள்ளனர். அன்றைய மட்டக்களப்பு மாவட்டம் வடக்கே வெருகலிலிருந்து, தெற்கே கும்புக்கன் ஓயா வரை நீண்டும், கிழக்கே மகாவலி கங்கை வரை வியாபித்து இருந்தது. இது நிர்வாக சுகத்திற்காக பிரிக்கப்பட வேண்டியதாக இருந்தபொழுதும் சமாதான சூழ்நிலை யில் இப்பிரிவுகள் இடம் பெற்றிருந்தால் மூன்று சமூகங்களுக்கும் பாதிப்பில்லாமல் மூன்று மாவட்டங்களாக பிரிக்கப்பட்டு இருக்கலாம்.

பிரிக்கப்படாத மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும்பான்மையினர் என்ற உணர்வுடன் வாழ்ந்த முன்னைய மட்டக்களப்பு மாவட்ட தென் பகுதி தமிழர்கள் இன்று அம்பாறை மாவட்டத்தில் கவனத்துக்கு எடுக்கப்படாத சிறுபான்மையினராக வாழும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. இதுபோல அம்பாறை மாவட்ட முஸ்லிம் சமூகமும் அம்பாறை மாவட்டத்திற்குள் கரையோர மாவட்டத்தை உருவாக்க வேண்டுமென்று போராடுகின்றது.

அம்பாறை மாவட்டம் உருவாக்கப்பட்ட பொழுது இம் மாவட்டத்துக்குள் இருந்த விந்தனைப்பற்று,நிர்வாகத்தை இலகுபடுத்த இதனை தற்காலிகமாக மொனராகலை மாவட்டத்துடன் இணைத்தனர். இவ்விணைப்பு சில காலம் இருந்தது எனினும் இன்று விந்தனைப் பகுதி அம்பாறை மாவட்டத்தின் ஒரு பகுதியாகவும், கிழக்கு மாகாணத்துக்குள்ளேயே இருக்கின்றது. 1963 இல் எடுக்கப்பட்ட குடிக் கணிப்புக்களில் எல்லை மாற்றங்களால் சிறிய பிரச்சினைகள் எழுந்த பொழுதும், நுண் மட்டத் தரவுகள் மூலம் சீர் செய்யப்பட்டு மாவட்டத்துக்குரிய தரவுகள் சரி செய்யப்பட்டுள்ளன. அன்று விந்தனைப்பற்றுக்குள் இருந்த பெரிய புல்லுமலைக் கிராமம் இன்று ஏறாவூர் பற்றுக்குள் இருக்கின்றது. மற்றும் கரவாகுப்பற்றுக்குள் இருந்த துறைநீலாவணை, பெரிய கல்லாறு இன்று மட்டக்களப்பு மாவட்ட மண்முனை தெற்குப் பிரிவுள் வருகின்றன.

இதேபோல படுவான் கரை பகுதி குடியிருப்புக்கள் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு பிரிவுகளுக்குள்ளும் வந்துள்ளன.

இலங்கையில் 1871 ஆம் ஆண்டு முதலாவது கணிப்புக்கு முன்னர் 1814 இலும், 1827 இலும் குடிக் கணிப்புக்கள் எடுக்கப்பட்டன. இம் மதிப்பீடுகளின் பிரிக்கப்படாத மட்டக்களப்பு மாவட்டத்தில் 1814 இல் 28126 பேரும் 1827 இல் 27483 பேரும் இருந்துள்ளனர். அட்டவணை I இல் மட்டக்களப்பு மாவட்டத்தின் குடித்தொகை, குடிகணிப்பு இடை அதிகரிப்புகள் எண்ணிலும் விகிதத்திலும் தரப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட குடி வளர்ச்சியை நோக்கின் 1946க்கு முற்பட்ட காலத்தில் வளர்ச்சி விகிதம் மிகக் குறைவாக இருந்தது. மாவட்டத் தின் குடி வளர்ச்சி நாட்டில் ஏற்பட்ட வளர்ச்சியிலும் குறைவாகும். 1881 இல் இம் மாவட்டத்தின் குடித்தொகை ஒரு இலட்சத்துக்கு மேல் அதிகரித்தது. குடித்தொகை இரட்டிப்பாக 65 வருடங்கள் எடுத்துள்ளன.

1946 இல் 2 இலட்சத்து க்கு அதிகரித்த குடித் தொகை 1963 இல் 420921 அதிகரித்தது.

| ஆண்டு | குடித்தொகை | குடிக்கணிப்பு இடை அதிகரிப்பு | குடிக்கணிப்பு இடை அதிகரிப்பு (வீதம்) |
|---|---|---|---|
| 1871 | 93210 | - | - |
| 1881 | 105538 | 12238 | 13.1 |
| 1891 | 122699 | 17341 | 16.5 |
| 1901 | 145161 | 22462 | 18.3 |
| 1911 | 153943 | 8782 | 6.0 |
| 1921 | 158709 | 4766 | 3.1 |
| 1931 | 174927 | 16220 | 10.2 |
| 1946 | 203186 | 28257 | 16.2 |
| 1953 | 270493 | 67307 | 33.1 |
| 1963 | 420921 | 149709 | 53.4 |
| மூலம்: இலங்கைக் குடிக்கணிப்புக்கள் | | | |

அதாவது மாவட்ட குடித்தொகை 17 வருடங்களில் இரட்டிப்பாகியது.

1946 இற்கு முன்னர் இம் மாவட்டத்தில் மலேரியாவாலும் மற்றும் தொற்று நோய்களால் மரணவிகிதம் உயர்வாக இருந்தது. மேலும் உயர்வான சிசு மரணங்களும் பிரசவத்தாய் மரணங்களும் உயர்வாக இருந்தன. 1946 இற்குப் பின்னர் பல்வேறு துறைகளில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் உணவு, ஊட்டச்சத்து, மருந்து, மருத்துவ வசதி மலேரியா மற்றும் தொற்று நோய்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாலும் கல்லோயாத் திட்ட குடியேற்றங்களால் ஏற்பட்ட குடியுள் வரவால் மக்கள் தொகை மிகவும் துரிதமாக ஏற்படலாயிற்று.

மட்டக்களப்பு மாவட்டம், மட்டக்களப்பு, அம்பாறை எனப் பிரிக்கப்பட்ட பொழுது இவ்விரண்டு மாவட்டங்களில் குடித்தொகை, குடி வளர்ச்சி, குடியடர்த்தி பின் வருமாறு,

அம்பாறை மாவட்டம் மட்டக்களப்பு மாவட்டத்திலும் குறைவான மக்கள் தொகையை 1953க்கு முன்னைய குடிக்கணிப்புக் காலங்களில் கொண்டிருந்த பொழுதும் மக்கள் தொகையில் 1963 இல் மட்டக்களப்பு மாவட்டத்தை முந்தியது. அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட நிலக் குடியேற்றங்களே இக்குடியதிகரிப்புக்கு காரணங்களாகும்.

| மட்டக்களப்பு மாவட்டம் | | | | |
|---|---|---|---|---|
| ஆண்டு | குடித் தொகை | குடிக் கணிப்பு இடை அதிகரிப்பு | குடிக்கணிப்பு இடை அதிகரிப்பு (விதம்) | குடியடர்த்தி (சதுர கிலோ மைல்) |
| 1921 | 83632 | - | - | 87 |
| 1931 | 93024 | 9392 | 10.5 | 96 |
| 1946 | 106649 | 8625 | 8.8 | 105 |
| 1953 | 139660 | 3304 | 30.9 | 167 |
| 1963 | 196090 | 56430 | 40.1 | 193 |

| அம்பாறை மாவட்டம் | | | | |
|---|---|---|---|---|
| ஆண்டு | குடித் தொகை | குடிக் கணிப்பு இடை அதிகரிப்பு | குடிக்கணிப்பு இடை அதிகரிப்பு (விதம்) | குடியடர்த்தி (சதுர கிலோ மைல்) |
| 1921 | 61829 | - | - | 53 |
| 1931 | 73725 | 11896 | 19.2 | 63 |
| 1946 | 88148 | 14423 | 19.5 | 75 |
| 1953 | 124011 | 35863 | 40.6 | 105 |
| 1963 | 211320 | 87801 | 70.6 | 180 |

பிரிக்கப்படாத மட்டக்களப்பு மாவட்டத்தின் குடித்தொகை அன்றிருந்த காரியாதிகாரி பிரிவுகள் (DRO) அடிப்படையில் 1921- 1946 ஆண்டுகள் ஒப்பிடப்பட்டுள்ளன.

| பிரிவுகள் | குடித்தொகை 1921 | குடித்தொகை 1946 | குடிக்கணிப்பு இடை வேறுபாடு எண்ணில் | குடிக்கணிப்பு இடை வேறுபாடு விகிதத்தில் |
|---|---|---|---|---|
| பானமைப்பற்று | 4310 | 6337 | 2027 | 47.2 |
| அக்கரைப்பற்று | 19924 | 21553 | 1659 | 8.2 |
| கரவாகு/ நிந்தவூர் | 29926 | 43784 | 13858 | 46.3 |
| சம்மாந்துறை | 9931 | 14075 | 5856 | 59.0 |
| வெவகம்பற்று | 2048 | 2399 | 351 | 17.1 |
| விந்தனைப்பற்று | 3482 | 5389 | 1907 | 54.8 |
| மண்முனைதெற்கு/ எருவில்/ போரதீவு | 21347 | 20255 | -1088 | -50 |
| மண்முனை வடக்கு | 25706 | 34883 | 8179 | 318 |
| மண்முனை மேற்கு | 7573 | 5522 | 2071 | -27.3 |
| ஏறாவூர் பற்று | 15067 | 21317 | 6250 | 41.5 |
| கோறளைப்பற்று | 17392 | 19301 | 1906 | 109 |

மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்கள் கரவாகு, நிந்தவூர், மண்முனை வடக்குப் பிரிவுகளில் கூடியளவு வாழ்ந்துள்ளார்கள். மட்டக்களப்பு மாவட்டத்தின் குடிப் பரம்பலை நோக்கின் வாழைச்சேனையில் இருந்து பொத்துவில் வரையில் கரையோரப் பகுதிகளில் பிரதான நெடுஞ்சாலை இருபக்கமும் செறிவாக வாழ்கின்றனர். மட்டக்களப்புக்கும் கல்முனைக்கும் இடைப்பட்ட 25 மைல் நீளமான மணல் தொடரிலேயே மக்கள் செறிவு காணப்படுகின்றது. படுவான்கரைப் பகுதியிலும் கடல் நீர் ஏரியை அண்டியே மக்கள் குடியிருப்புக் கள் காணப்படுகின்றன. 1946 இற்கும் 1963 இற்கும் இடைப்பட்ட குடித் தொகைக் குடிக்கணிப்பு இடை அதிகரிப்பு எண்ணிலும் விகிதத்திலும் பின் வருமாறு,

இக்காலப்பகுதியில் இயற்கை அதிகரிப்பு உயர்வாக இருந்ததுடன் கல்லோயாத் திட்டத்தின் மூலம் வெவகம்பற்று, சம்மாந்துறை பற்றுக் களில் அதிகளவு குடியுள் வரவினை மக்கள் தொகை அதிகரித்துள்ளது.

| பிரிவுகள் | 1946 | 1963 | குடிக் கணிப்பு இடை அதிகரிப்பு | வீதம் |
|---|---|---|---|---|
| பானமைப்பற்று | 6337 | 13572 | 7235 | 114.2 |
| அக்கரைப்பற்று | 21553 | 41987 | 20434 | 94.8 |
| கரவாகு/ நிந்தவூர் பற்று | 43784 | 64247 | 20463 | 46.7 |
| சம்மாந்துறை பற்று | 14075 | 57872 | 43791 | 311.2 |
| வெவகம்பற்று | 2399 | 34054 | 31655 | 1319.5 |
| விந்தனைப்பற்று | 5385 | 12291 | 6902 | 128 |
| மண்முனை தெற்கு/ எருவில்/ போரதீவு | 20259 | 41858 | 21599 | 106.6 |
| மண்முனை வடக்கு | 25706 | 60337 | 34631 | 134.7 |
| மண்முனை மேற்கு | 5522 | 19335 | 13813 | 250.1 |
| ஏறாவூர் பற்று | 21317 | 36810 | 15493 | 72.6 |
| கோறளைப்பற்று | 19301 | 37949 | 18648 | 96.6 |

1963 இல் பிரிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்களவர் 3.3 சதவீதமாகவும் தமிழர்கள் 80.3 சதவீதமாகவும் முஸ்லிம்கள் 23.5 சதவீதமாகவும் ஏனையோர் ஒரு சதவீதமாகவும் இருந்தனர். அம்பாறை மாவட்டத்தில் சிங்களவர் 29.3 சதவீதமாகவும் தமிழர்கள் 23.8 சதவீதமாகவும் முஸ்லிம்கள் 46.5 சதவீதமாகவும் ஏனையோர் 0.4 சதவீதமாகவும் இருந்துள்ளனர். இன்று இவ்விரண்டு மாவட்டங்களிலும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன. 2012 ஆம் ஆண்டுக் கணிப்பின்படி அம்பாறை மாவட்டத்தில் சிங்களவர் 38.7 சதவீதமாகவும் தமிழர் 17.8 சதவீதமாகவும் முஸ்லிம்கள் 43.6 சதவீதமாகவும் இருந்துள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்களவர் 1.2 சதவீதமாகவும் தமிழர்கள் 73.8 சதவீதமாகவும் முஸ்லிம்கள் 25.5 சதவீதமாக்வும் ஏனையோர் 1.2 சதவீதமாகவும் இருந்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டம் நிர்வாகக் காரணங்களுக்காகப் பிரிக்கப்படவேண்டிய தேவையிருந்திருப்பினும் பிரித்த முறையும் அம்பாறை நகரில் கச்சேரியை நிறுவியதும் தமிழ் பேசும் மக்களைப் பெரிதும் பாதித்துள்ளது. இன்று அம்பாறை மாவட்டத்தில் வர்ழும் தமிழ்மக்கள் பல்வேறு துறைகளில் தங்கள் இருப்பைத் தக்கவைக்கப் போராடிக் கொண்டிருக்கின்றன. கல்முனையை மையமாகக் கொண்ட கரையோர மாவட்டம் முஸ்லிம்களின் அரசியல் கோரிக்கையாகவும் இருந்து வருகின்றது. மட்டக்களப்பு மாவட்டம் இரண்டாகப் பிரிந்து, 50 ஆண்டுகளை எட்ட இன்னும் சில ஆண்டுகள் இருப்பினும் இப்பிரிவால் உருவாகிய அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்கு இன்னும் தீர்வுகள் காணப்படவில்லை.

# பங்குனி மாத இராசி பலன்கள்

## 15.03.2018-13.04.2018



### பொதுப்பலன்

உங்களுக்கு இந்த மாதம் பணத்தேவை பூர்த்தியாகும் மாதம் என்றே சொல்லலாம். இராசி நாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிப் பதால் நிதிநிலை உயரும். நிகழ்காலத் தேவைகளும் பூர்த்தியாகும். உங்களின் மதிப்பு, மரியாதை உயரும். வீண்பழிகளில் இருந்து விடுபடுவீர்கள். மனக்கவலை மாறும். அத்தியாவசியப் பொருட்களையும் வாங்கிச் சேர்ப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

### உத்தியோகம்

உத்தியோகத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் உண்டு. உடன் பணிபுரியும் பணியாளர்களால் ஏற்பட்ட பிரச்சினை அகலும். புதிய வேலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு அது கைகூடும். வெளிநாட்டு முயற்சியிலும் வெற்றி கிடைக்கும். தொழில் புரியவர்களுக்கு இலாபம் இருமடங்காக உயரும். கூட்டாளிகள் விலகினாலும் புதிய பங்குதாரர்கள் வந்திணைவர்.

### உடல்நலம்

உடல்நலம் சீராக அமைய உணவில் கட்டுப்பாடு அவசியம். ஜலதோஷம், இருமல் மற்றும் ஒவ்வாமை நோய் வரலாம். சுய மருத்துவம் செய்து கொள்ளாமல், அருகிலிருக்கும் மருத்துவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது. ஒருசில சமயங்களில் மன பயம் அதிகரிக்கும்.

### குடும்பம்

குடும்ப ஸ்தானம் பலம் பெற்றிருப்பதால் கவலைகள் அகலும். கடமையில் இருந்த தொய்வு அகலும். கொடிகட்டிப் பறந்த குடும்பப் பிரச்சினைகள் படிப்படியாக நல்ல முடிவிற்கு வரும். உறவினர்களின் ஒத்துழைப்பு திருப்திகரமாக இருக்கும். வீட்டுப்பராமரிப்பில் அக்கறை காட்டுவீர்கள். முன்னோர் சொத்துகளில் பங்கீடு கிடைக்கும்.

### பணவரவு

வருமானம் திருப்திகரமாக இருக்கும். சொத்து விற்பனையாலும் தனலாபம் கிடைக்கும். குருவின் பார்வை, தன ஸ்தானத்தில் பதிவதால் வங்கிச் சேமிப்பு உயரும். குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்டவர்களின் சம்பாத்தியத்தால் நிதிப் பற்றாக்குறை அகலும்.

### செவ்வாய்- சனி

உங்கள் இராசிக்கு 3,10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய், இராசிநாதன் சனியோடு இணைந்து சஞ்சரிப்பதால் தொழில் மாற்றச் சிந்தனை மேலோங்கும். ஏற்றுமதி இறக்குமதி வணிகத்தில் ஒருசிலர் இலாபம் குவிப்பர். பயணங்களால் பலன் கிடைக்கும். தூரதேசத்தில் இருந்து நல்ல தகவல் வந்து சேரும். அரசியல்வாதிகள் உங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பர்.

### புதன் வக்ரம்

மார்ச் 16ஆம் திகதி முதல் ஏப்ரல் 6ஆம் திகதி வரை மீனத்தில் புதன் வக்ரம் பெறுகிறார். பஞ்சம அஷ்டமாதிபதியான புதன் வக்ரம் பெறுவதால், பிள்ளைகளின் வழியில் பிரச்சினைகள் ஏற்படலாம்.

### மேஷ சுக்ரன்

மார்ச் 27ஆம் திகதி மேஷத்திற்கு சுக்ரன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 4,9இற்கு அதிபதியான சுக்ரன், சகாய ஸ்தானத்திற்கு வரும்பொழுது எண்ணற்ற நல்ல காரியங்களைச் செய்து கொடுக்க முன்வருவர். எனவே நினைத்தது நடக்கும். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். பணக்கவலை மாறும். பாதியில் நின்ற பணி மீதியும் தொடரும். தங்கம், வெள்ளி வாங்குவதில் தனிக் கவனம் செலுத்துவீர்கள். தாய், தந்தையரின் ஆதரவு கிடைக்கும்.




### துலாம் குரு

ஏப்ரல் 11ஆம் திகதி குரு பகவான் வக்ர இயக்கத்தில் துலாம் இராசிக்குச் செல்கிறார். அங்கிருந்து 1,3,5 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். எனவே உடல்நலம் சீராகும். சகோதர ஒற்றுமை பலப்படும். தனவரவு திருப்திகரமாக இருக்கும். தாய், தந்தையரின் அன்புக்குப் பாத்திரமாக விளங்குவீர்கள். முன்னோர்களின் சொத்துகளில் முறையான பங்கீடு கிடைக்கும். பிள்ளைகளின் படிப்பு சம்பந்தமாக வெளிநாடு செல்லும் வாய்ப்பு கிடைக்கும்.

### பெண்களுக்கு

பணப்புழக்கம் அதிகரிக்கும். பக்குவமாகப் பேசி காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். மனக்கவலை தீரும். அக்கறை காட்டாத செயலில் கூட ஆதாயம் கிடைக்கும். கணவன்- மனைவி உறவில் இணக்கம் ஏற்படும். பணிபுரியும் பெண்களுக்கு ஊதிய உயர்வும், உள்ளத்தில் திருப்தியும் காணப்படும்.

### கலைத்துறை

கலைஞர்களுக்கு கணிசமான வாய்ப்புகள் கைகூடி வரும். வாய்ப்புகளை உதறித் தள்ளாமல் ஏற்றுக் கொள்ளலாம். வெளிநாடுகளுக்குச் செல்லும் வாய்ப்பும், விரும்பியபடி அமையும். மாதத்தின் மையப் பகுதியில் நல்ல ஒப்பந்தங்கள் கிடைக்கும். வருமானம் திருப்திகரமாக இருக்கும்.

## சகோதர ஒற்றுமை பலப்படும்

### அரசியல்

இதுவரை தொல்லை தந்தவர்கள், தோள் கொடுத்து உதவ முன் வருவர். மூத்த அரசியல் வாதிகளின் ஆலோசனைப்படி நடந்து கொள்வது வெற்றியை வழங்கும். பதவி கிடைக்கும் முயற்சி பரிசீலனையில் இருக்கும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



### பொதுப்பலன்

உங்களுக்கு இந்த மாதம், பொருளாதார விருத்தியும், புதிய திருப்பங்களும் ஏற்படும் மாதமாக அமைந்துள்ளது. பொன், பொருள் சேர்க்கை உண்டு. பூமி யோகமும் உருவாகும் விதத்தில் கிரக நிலைகள் சாதகமாக உள்ளன. நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். மாலை சூடும் வாய்ப்புக்காகக் காத்திருப்பவர்களுக்கு அதற்கான நேரம் கைகூடி வரப் போகிறது. படிப்பிற்கேற்ற வேலையும், நல்ல சம்பளமும் கிடைக்கும்.

### உத்தியோகம்

அலுவலகப் பணியில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த மாற்றமும், ஏற்றமும் கிடைக்கும். உங்களுக்கு சிக்கல்களை வரவழைத்தவர்கள் விலகிச் செல்வர். சகப் பணியாளர்கள் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வர். உயரதிகாரிகளின் ஆதரவு கூடுதலாகக் கிடைக்கும். ஒப்பந்தங்களைப் புதுப்பித்துக் கொள்வீர்கள். தொழில் புரிவோருக்கு வளர்ச்சி கூடும். அரசு வழி ஆதரவோடு தொழிலை விரிவு செய்வீர்கள். புதிய பங்குதாரர்கள் வந்திணைவர்.

### உடல்நலம்

உங்கள் இராசிநாதன் குரு வக்ர இயக்கத்தில் இருப்பதால் ஆரோக்கியத் தொல்லை ஏற்படும். நரம்புத் தளர்ச்சி, சுவாசத் தொல்லை, இரத்த அழுத்தம், ஜீரணக் குறைபாடு போன்றவை அடிக்கடி வந்து போகும். பதப்படுத்தப்பட்ட உணவுகளை பக்குவமாகச் சமைத்து சாப்பிடுங்கள். உடலின் இடது பக்கத்தில் உபாதைகள் ஏற்பட்டால், உடனடியாக மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது.

### குடும்பம்

குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்கள் பகை மறந்து, பாசத்தோடு பழகுவர். திட்டமிட்ட காரியங்களைத் திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள். வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

## பணவரவு திருப்திகரமாக இருக்கும்

தடைபட்ட திருமண வாய்ப்புகள் துரிதமாக நடைபெறும். பழைய கடன்களை கொடுத்து மகிழ்வீர்கள்.

### செவ்வாய்- சனி

உங்கள் இராசிக்கு 10ஆம் இடத்தில் செவ்வாய், சனி சேர்க்கை பெற்றிருக்கிறார்கள். 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதி 10ஆம் இடத்தில் இலாபாதிபதியோடு சேர்ந்து சஞ்சரிப்பதால், தொழிலுக்கு பெற்றோர் வழியில் மூலதனம் கிடைக்கலாம். அல்லது பூர்வீகச் சொத்துகளை விற்று முதலீடு செய்வீர்கள்.

### புதன் வக்ரம்

மார்ச் 16ஆம் திகதி முதல் ஏப்ரல் 6ஆம் திகதி வரை மீனத்தில் புதன் வக்ரம் பெறுகிறார். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் வக்ரம் பெறுவது யோகம் தான். இக்காலத்தில் தாய்வழி ஆதரவு கிடைக்கும். வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

கல்யாண வாய்ப்புகள் கைகூடும்.




விலகிய சொந்தங்கள் விரும்பி வந்திணைவர்.

### மேஷ சுக்ரன்

மார்ச் 27ஆம் திகதி மேஷத்திற்கு சுக்ரன் செல்கிறார். இக்காலம் இனிய காலமாகும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள். குடும்பத்தில் இருப்பவர்களிடம் ஏற்பட்ட வாக்குவாதங்கள் மறையும். எதிர்காலத் திட்டங்கள் எளிதில் நிறைவேறும். நூதனப் பொருட்களின் சேர்க்கை உண்டு.

### துலாம் குரு

ஏப்ரல் 11ஆம் திகதி துலாம் இராசிக்கு குரு பகவான் வக்ர இயக்கத்தில் செல்கிறார். அங்கிருந்து 2,4,12 ஆகிய இடங்களைப் பார்ப்பதால் பயணங்களால் பலன் கிடைக் கும். பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும். குடும்பத்தில் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். தொழில் போட்டிகள் விலகும்.

### பெண்களுக்கு

இம்மாதம் சுபகாரியப் பேச்சுகள் நல்ல முடிவிற்கு வரும். சொல்லைச் செயலாக்கிக் காட்டுவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். புகுந்த வீட்டில் உங்கள் செல்வாக்கு மேலோங்கும். கணவன்-மனைவி உறவு பலப்படும். சகோதரர்கள் தேவையான நேரத்தில் உதவிக்கரம் நீட்டுவர். சுபச் செலவுகள் அதிகரிக்கும். பெண்களுக்குத் தடைபட்ட உறவு தானாக வந்து சேரும்.

### கலைத்துறை

கலைஞர்களுக்கு பெரிய மனிதர்களின் ஆதரவு கிடைக்கும். நல்ல திருப்பங்கள் உருவாகும். சந்தோஷத்தை நாளும் சந்திக்க இயலும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும்.

### அரசியல்

வாரிசுகளால் இருந்த முட்டுக்கட்டைகள் அகலும். வீண் வாக்குவாதங்களில் இருந்து விடுபடுவீர்கள். முக்கியப் புள்ளிகள் உங்கள் முன்னேற்றத்திற்கு வித்திடுவர். தைரியத்தோடு செயற்பட்டுச் சாதனை படைக்கும் நேரமிது.

(முற்றும்)

# மியன்மார் ஜனாதிபதி இராஜினாமா



(நேபிடா)

மியன்மார் ஜனாதிபதி ஹிதின் கியா தனது பதவியை ராஜினாமா செய்திருப்பதாக அவரது அலுவலகம் அறிவித்துள்ளது. மியன்மார் நாட்டில் கடந்த 2016 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் ஆங் சான் சூகி தலைமையிலான ஜனநாயகத்திற்கான தேசிய லீக் கட்சி அமோக வெற்றிபெற்றது.

இதன்மூலம் பல ஆண்டுகளாக நீடித்த இராணுவ ஆட்சி முடிவுக்கு வந்தது. ஜனாதிபதியாக ஹிதின் கியா பதவியேற்றார். இந்நிலையில் ஹிதின் கியா தனது பதவியை இராஜினாமா செய்திருப்பதாக அவரது அலுவலகம் அறிவித்துள்ளது. அவரது பதவி விலகலுக்கான காரணம் குறித்த தகவல்கள் இன்னும் வெளியாகவில்லை.

71 வயதான ஹிதிகியாவுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டதால், கடந்த சில மாதங்களாக அவர் பெரும்பாலான அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்காமல் இருந்தார். உடல்நிலை காரணமாகவே தற்போது அவர் பதவி விலகியிருக்கலாம் என அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன. (10)

# நிதி மோசடிக்குற்றச்சாட்டில் பிரான்ஸ் முன்னாள் ஜனாதிபதி கைது

(பாரீஸ்)

நிதிக் குற்றச்சாட்டுக்களில் பிரான்ஸ் முன்னாள் ஜனாதிபதி நிக்கோலஸ் சர்கோசி கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2007 ஆம்ஆண்டு நடைபெற்ற பிரான்ஸ் தேர்தல் பிரசாரத்தில் லிபிய நிதியை தவறான முறையில் பயன்படுத்தியதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.



இது தொடர்பான விசாரணைகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றிருந்த நிலையில் முன்னாள் ஜனாதிபதி நிக்கோலஸ் சர்கோசி தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

2007 ஆம்ஆண்டுஜனாதிபதி தேர்தலில் சர்கோசியின் வெற்றியில் மறைந்த லிபிய தலைவர் முகம்மது கடாபியின் சட்டவிரோத நிதிகள் பயன்படுத்தப்பட்டதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட நிலையில் அது தொடர்பான நீதி விசாரணைகள் 2013 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்நிலையில் எவ்வித சட்டவிரோத நிதிகளையும் பெற்றுக்கொள்ளவில்லை என தெரிவித்த சர்கோசி தன் மீதான குற்றச்சாட்டுக்கள் கோமாளித்தனமானது என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

நிக்கோலஸ் சர்கோசி கடந்த 2007 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையில் பிரான்ஸின் ஜனாதிபதியாக பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது. (10)

# பாதுகாப்பு அளித்தால் பாக்.வருவேன் முன்னாள் ஜனாதிபதி முஷாரப் நிபந்தனை

(இஸ்லாமாபாத்)

பாதுகாப்பு அளித்தால் தான் பாகிஸ்தான் வருவேன் என பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி முஷாரப் நிபந்தனை விதித்துள்ளார்.

வழக்கு விசாரணைகளுக்காக நான் பாகிஸ்தான் வரவேண்டுமென்றால், எனக்கு அரசு பாதுகாப்பு வழங்குவதை உறுதி செய்ய வேண்டும் என்று அந்த நாட்டின் முன்னாள் இராணுவ ஆட்சியாளர் முஷாரப் வலியுறுத்தியுள்ளார்.



இராணுவ தலைமைத் தளபதியாக இருந்த அவர் கடந்த 1999 ஆம் ஆண்டில் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றி கடந்த 2007 ஆம் ஆண்டு நாட்டில் நெருக்கடி நிலையை அறிவித்தார்.

அப்போது, அரசமைப்புச் சட்டத்தை தற்காலிகமாக முடக்கியதுடன், நூற்றுக்கும் மேற்பட்ட நீதிபதிகளை சிறையிலடைத்தார்.

இந்த விவகாரம் தொடர்பாக, முஷாரப் மீது தேசத் துரோக வழக்கு தொடரப்பட்டு, அவர் மீதான குற்றச்சாட்டு கடந்த 2014 ஆம்ஆண்டு நீதிமன்றத்தில் உறுதி செய்யப்பட்டது.

இந்தச் சூழலில், மருத்துவ சிகிச்சைக்காக அரசின் அனுமதியுடன் கடந்த 2016 ஆம் ஆண்டு டுபாய் சென்ற அவர், அங்கேயே தங்கிவிட்டார்.

அதனைத் தொடர்ந்து அவர் தலைமறைவுக் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டார்.

இந்த நிலையில், பாகிஸ்தான் உள்துறை அமைச்சகத்திடம் முஷாரப் அளித்துள்ள மனுவில், வழக்கு விசாரணையை எதிர்கொள்ள பாகிஸ்தான் வர வேண்டுமென்றால், உறுதியான பாதுகாப்பை வழங்குவதாக பாகிஸ்தான் அரசு உறுதி யளிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார். தலைமறைவுக் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட முஷாரப்பின் கோரிக்கை பாகிஸ்தானில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (10)

# அழிவின் விளிம்பில் தத்தளித்த கடைசி ஆண் காண்டாமிருகம் பலி



(நைரோபி)

கென்யாவில் லைகிபியா வன சரணாலயத்தில் உலகின் கடைசி வெள்ளை ஆண் காண்டாமிருகமான சூடான் முதிர்ச்சியின் காரணமாக உயிரிழந்தது.

உலகின் காண்டாமிருகங்களின் இனம் அழிந்து வருகிறது. சீனாவில் காண்டாமிருகங்களின் கொம்புகள் மருந்து தயாரிக்கப் பயன்படுத்தப்படுகிறது. எனவே அவை வேட்டையாடி அழிக்கப்பட்டன. ஏமனில் 1970 மற்றும் 1980ஆம் ஆண்டுகளில் காண்டாமிருகங்கள் வேட்டையாடி கொல்லப்பட்டன.



அழிந்த வெள்ளை காண்டாமிருகத்தின் கடைசி ஆண் காண்டாமிருகம் கென்யாவில் லைகிபியா வன சரணாலயத்தில் வைத்து பாதுகாக்கப்பட்டது.

45 வயதான அந்த காண்டாமிருகம் முதிர்ச்சியின் காரணமாக நோய் வாய்ப்பட்டது. அதை காப்பாற்ற உலகில் உள்ள கால்நடை மருத்துவர்கள் மற்றும் விஞ்ஞானிகள் தீவிர முயற்சி மேற்கொண்டனர்.

ஆனால் அந்த காண்டாமிருகம் நேற்று முன்தினம் பரிதாபமாக இறந்தது. 'சூடான்' என பெயரிடப்பட்டிருந்து.

தற்போது வெள்ளை காண்டாமிருகம் 'சூடான்' இறந்ததை தொடர்ந்து உலகில் 2 பெண் வெள்ளை காண்டாமிருகங்கள் மட்டுமே எஞ்சியுள்ளன.

இறந்த மிருகத்தின் உயிரணுக்களை விஞ்ஞானிகள் சேகரித்து பாதுகாத்து வருகின்றனர். இதன் மூலம் உயிருடன்இருக்கும்பெண்வெள்ளை காண்டாமிருகங்களுக்கு செயற்கை கருவூட்டல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்மூலம் அழிவில் இருந்து வெள்ளை காண்டாமிருகத்தை பாதுகாக்க முடியும் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர். குறித்த காண்டாமிருகம் உயிரிழந்தது வன விலங்கு ஆர்வலர்களிடையே சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (10)

# பள்ளத்தாக்கில் குடைசாய்ந்த பேருந்து



## 19 பேர் பலி

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டில் 50 அடி பள்ளத்தாக்கில் பேருந்து கவிழ்ந்த விபத்தில் 19 பேர் உயிரிழந்துள்ளனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகர் மணிலாவை ஒட்டியுள்ள ஆக்கிடெண்டல் மிண்டோரோ பேருந்து சென்று கொண்டிருந்தது.

ஒரு குறுகிய பாலத்தை கடக்கும் போது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து வீதியின் தடுப்புகளில் மோதி சுமார் 50 அடி பள்ளத்தாக்கில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் மீட்புப்பணிகளில் ஈடுபட்டனர். இந்த விபத்தில் 19 பேர் பலியானதாக முதல் கட்ட தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த விபத்துக்கு சாரதியின் கவனக்குறைவு காரணமா அல்லது தொழில் நுட்ப கோளாறு காரணமா என்பது பற்றி பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் வீதிகள் சரியாக பராமரிக்கப்படாததால் இதுபோன்ற வீதி விபத்துகள் இடம்பெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (10)

# புத்தாண்டுக் கொண்டாட்டத்தை இலக்குவைத்து காபூலில் தற்கொலைப் படைத்தாக்குதல்

(காபூல்)

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் நேற்று பாரசீக புத்தாண்டு கொண்டாட்டத்தின் போது தற்கொலைப்படை தீவிரவாதி நடத்திய தாக்குதலில் 25 பேர் உயிரிழந்துள்ளனர்.

உலகம் முழுவதும் பாரசீகர்கள் தங்களது புத்தாண்டை நேற்று கொண்டாடினர். ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் வசிக்கும் பாரசீக மக்கள், காபூல் பல்கலைக்கழகம் அருகே உள்ள பி.டி 3 என்ற இடத்தில் நேற்று ஒன்று திரண்டு புத்தாண்டை மகிழ்ச்சியாக கொண்டாடினர்.

மக்கள் கூட்டம் அதிகம் உள்ள பகுதியில், வெடிமருந்து நிரப்பப்பட்ட காருடன் புகுந்த தீவிரவாதி திடீரென வெடி மருந்தை வெடிக்க வைத்தான். இந்த கோர தாக்குதலில் 25 பேர் பலியாகியுள்ளனர். 18




பேர் படுகாயங்களுடன் அருகிலுள்ள வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தாக்குதல் நடந்த இடத்தை சீல் வைத்துள்ள பொலிஸார், விசாரணை நடத்தி வருகின்றனர். (10)

மண் குதிரை நம்பி ஆற்றில் இறங்கலாமா?
- தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# உண்மையை உணர்ந்த கூட்டமைப்பின் தலைவர்

அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கியதால்தான் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்காமல் விட்டனர் என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் கூறியுள்ளார்.

அவர் கூறிய காரணம் சரியானதா? என்பது ஆய்வுக்குரியது. ஆனால் வாக்களிப்பு ஊடான தமிழ் மக்களின் தீர்ப்புத் தொடர்பில் கூட்டமைப்பு தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும் என்ற உண்மையை இரா.சம்பந்தர் உணர்ந்துள்ளார் என்பதுதான் இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம்.

அரசாங்கத்தை ஆதரித்ததாலேயே உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கூட்டமைப்பு பின்னடைவைச் சந்தித்தது என்று இரா.சம்பந்தர் அவர்கள் கூறுவதென்பதன் மெய்ப்பொருள் காண்பது இங்கு கட்டாயமானது.

அவ்விதம் அவர் கூறிய **அரசாங்கத்துக்கு ஆதரவு** என்பது, ஒரு குறியீடேயன்றி அரசுக்கு ஆதரவளித்ததால்தான் தமிழ் மக்கள் தங்களுக்கு வாக்களிக்கவில்லை என்ற காரணம் உண்மையன்று.

ஆக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தான் வழங்கிய வாக்குறுதியைக் கைவிட்டு; சர்வதேசப் போர்க்குற்ற விசாரணை என்பதை வலியுறுத்தத் தவறி; காணாமல்போனவர்களின் விடயத்தில் அசமந்தப் போக்கைப் பின்பற்றி; தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் கதைத்து ஒரு நல்ல முடிவைக் காணாமல் விட்டது வரையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்குப் பாதகம் செய்துவிட்டது என்ற உண்மையை கூட்டமைப்பின் தலைவர் உணர்ந்துள்ளார் என்பதுதான் மெய்ப்பொருள்.

இவ்வாறு தமிழ் மக்கள் தங்களுக்கு வாக்களிக்காமல் விட்டதற்கான காரணத்துக்கு ஏதோவொரு வடிவத்தைக் கொடுத்தாலும் உண்மையை உள்ளார்ந்தமாக ஏற்றுக் கொள்வது வரவேற்கத்தக்கது.

எனினும் இரா.சம்பந்தர் ஏற்றுக் கொண்ட உண்மையை கூட்டமைப்பின் ஏனைய முக்கியஸ்தர்களும் இளம் உறுப்பினர்களும் உணர்ந்து கொண்டனரா? என்பது ஐயத்துக்குட்பட்டது.

எதுஎவ்வாறாயினும் போர் முடிந்த 2009 ஆம் ஆண்டிலும் அதற்கு அண்மித்த ஒரு சில ஆண்டுகளிலும் சர்வதேச மட்டத்தில் தமிழ் மக்களுக்குச் சாதகமாக இருந்த காலச் சூழல் இப்போது இருக்கிறதா? என்றால் இல்லை என்பதே பதிலாகும்.

ஆக, எங்களுக்குச் சாதகமாக இருந்த சர்வதேச சூழலை எங்களைக் கொண்டே இலங்கை ஆட்சியாளர்கள் அறுத்தெறிந்து விட்டனர்.

இந்தக் கொடுமைக்கு தமிழ் அரசியல் தலைமை என்ற அந்தஸ்தில் இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேருதவி புரிந்தது என்பதுதான் உண்மை.

நிலைமை இதுவாக இருந்தாலும் கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் தங்களின் வாக்குகள் மூலமாக தமிழ் அரசியல் தலைமையை சரிப்படுத்தும் புனராவர்த்தன குடமுழுக்கை நடத்தியுள்ளனர் என்பது நிறுதிட்டமான உண்மை.

# நித்தகை குளத்தைப் பார்வையிட்டனர்

## விவசாய அமைச்சர் தலைமையிலான குழுவினர்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மணலாறு பிரதேசத்திற்கு உட்பட்ட நித்தகை குளத்தை வடக்கு மாகாண விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன் தலைமையிலான அணி சென்று பார்வையிட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

தொடர்ச்சியாக மாவட்ட செயலகம் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற அபிவிருத்திக்குழுக் கூட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு கூட்டங்களில் குறித்த குளத்தையும் அதற்கான வீதிகளையும் புனரமைத்து தருமாறு மக்களால் கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வந்த நிலையில் குறித்த குளத்தைப் பார்வையிட்டு அதனை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தோடு வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், வடக்கு மாகாண நீர்ப்பாசன பொறியியலாளர், முல்லைத்தீவு மாவட்ட பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர், விவசாய திணைக்களம் மற்றும் கமநல சேவை திணைக்களங்களின் அதிகாரிகள், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், குறித்த பகுதி கமக்கார அமைபபின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் நேற்றுக் காலை 9.30 மணியளவில் குளத்தை சென்று பார்வையிட்டுள்ளனர்.

குறித்த குளத்தில் உடைவு ஏற்பட்டுள்ள பகுதி, கலிங்கு பகுதி, அணைக்கட்டு மற்றும அதன்கீழ் செய்கை பண்ணப்பட்ட வயல்கள் மற்றும் நீர்ப்பாசன வாய்க்கால்கள் என்பனவற்றை பார்வையிட்டு அவற்றை அபிவிருத்தி செய்து மக்களுக்கு வழங்குவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இது தொடர்பில் மாவட்ட செயலாளரிடம் வினவிய போது,

தொடர்ச்சியாக விவசாயிகளால் யுத்த காலத்திற்கு முனபாக பாதிக்கப்பட்ட வயல் நிலங்களையும் குளத்தையும் மீளவும் பயன்படுத்துவதற்கு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வந்துள்ள நிலையில், அதற்கமைவாக நித்தகைகுளம் என்ற கைவிடப்பட்ட குளத்தையும் அதனகீழான விவசாய நிலங்களையும் மீளவும் பயிர்ச் செய்கையில் ஈடுபடுத்த நாங்கள் பார்வையிட்டுள்ளோம்.

இதன்மூலமாக இந்த குளத்தை விவசாய திணைக்களம் விவசாய மக்களின் உதவியுடன் புனரமைத்து மக்களுக்கு வழங்க எண்ணியுள்ளோம் என்று தெரிவித்தார்.

தொடர்ந்து இங்கு கருத்து தெரிவித்த வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன்,

நித்தகை குளம் 1982 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்தில் இங்குள்ள மக்கள் இந்த வயல் செய்கையில் ஈடுபட்டு வந்துள்ளார்கள். அது திருத்தவேலைகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கும்போது போர ஏற்பட்டதால் அது நிறுதப்பட்டுள்ளது.

இதன் கீழ் பல வயல் நிலங்கள் இன்றும் செய்கை பண்ணப்படாமல் பாழடைந்து போயுள்ளது.

பாழடைந்து போயுள்ள இந்த குளத்தைத் திருத்தி மக்களுக்கு வழங்குவதறகாக மாவட்ட செயலாளரின் உதவியை பெற்று நீர்ப்பாசன திணைக்களத்தின் ஊடாக அபிவிருத்தி செய்ய எண்ணியுள்ளோம்.

அத்தோடு விவசாயிகளால் புனரமைத்து தருமாறு கோரப்பட்டுவரும் குருந்தூர் குளத்தையும் குறித்த தரப்பினர் பார்வையிட்டுள்ளனர். (2-281)

# சாவகச்சேரி வைத்தியசாலையில் இளைஞர் குழு அட்டகாசம்

## பொலிஸில் முறைப்பாடு

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வளாகத்திற்குள் நுழைந்த இளைஞர் குழு ஒன்று வைத்தியசாலை பொருட்களை சேதப்படுத்தி அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளது.

மேற்படி சம்பவம் நேற்று புதன்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இதன்போது வைத்தியசாலையின் இரும்புக் கதவு, மேசை ஆகியன சேதமடைந்துள்ளன.

அட்டகாசத்தில் ஈடுபட்ட இந்த குழு, வைத்தியசாலையில் கடமையில் ஈடுபட்ட வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களையும் மிரட்டி விட்டு தப்பிச் சென்றுள்ளது.

வைத்தியசாலை சொத்துக்களை சேதப்படுத்தியமை மற்றும் வைத்தியசாலை உத்தியோகத்தர்களை மிரட்டியமைக்காக வைத்தியசாலை அத்தியட்சகர் வைத்தியர் அச்சுதனினால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது. (ம)

# இலவச வழிகாட்டல் வகுப்புக்கள்

முகாமைத்துவ உதவியாளர் சேவையின் விசேட தரத்துக்கு திறமை அடிப்படையில் தரமுயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சைக்குரிய இலவச வழிகாட்டல் வகுப்புக்கள் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறும் என பொது முகாமைத்துவ உதவியாளர் சேவைச் சங்கத்தின் செயலாளர் ப.மயூரன் தெரிவித்துள்ளார். (ம)

# கைதிகளின் விடுதலைக்கு கருணை காட்டவேண்டும்

## மைத்திரியிடம் மகிந்த அணி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு இனியாவது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கருணை காட்ட வேண்டும்என்று மகிந்த அணி கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வலி.மேற்கு வட்டுக்கோட்டைத் தொகுதி தலைவர் ந.திரிலோகநாதன் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

பல வருடகாலமாக ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் அரசியல்கைதி ஆனந்த சுதாகரனின் மனைவி அண்மையில் உயிரிழந்தார். மனைவியின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்ள வந்த அரசியல் கைதியின் மகள் தந்தையுடன் சிறைச்சாலை வாகனத்தில் ஏற முற்பட்டமை தொடர்பில் வலம்புரியின் ஆசிரியர் தலையங்கத்தில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

இதனை வாசித்தபோது அரசியல் கைதிகளின் குடும்ப நிலை குறித்து நான் மிகவும் மனவேதனை அடைந்தேன்.

அரசியல்கைதியின்மனைவியினுடைய இறுதிக் கிரியைகள் முடிந்ததன் பிற்பாடு கைதியின் குழந்தை தனது தந்தையுடன் சிறைச்சாலை வாகனத்தில் ஏறி அமர்ந்த காட்சியானது இன, மத பேதங்களுக்கு அப்பால் அனைவரது நெஞ்சங்களையும் உருக வைத்துள்ளது.

எனவே அரசியல் கைதியின சின்னஞ்சிறு பிள்ளைக்காக அரசியல் கைதியின் தண்டனைக் காலத்தைக் குறைத்து சிறு பிள்ளையின் எதிர்காலத்திற்கு ஒளியூட்டுமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றேன் என அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-9)

# சத்திய தரிசனம்



## பொருளுக்காகப் பூஜை வேண்டாம்

❖ உன்னுடைய பொருள், அந்தஸ்து, ஜாதி ஆகியவற்றை எண்ணி இறுமாப்பு கூடாது. உன்னுடைய உடமை, திறமை, அறிவு, ஆற்றல் அனைத்தையும் கடவுளின் சேவைக்கு அர்ப்பணித்து விட்டால் உன் அகங்காரம் நிச்சயம் அழிந்துவிடும்.

❖ தொட்டியில் தண்ணீர் நிரம்பி இருந்தாலும் தானாகக் கொட்டாது. குழாயைத் திறந்துவிட வேண்டும். அன்பு மனதின் உள்ளே நிரம்பி இருந்தாலும் நற்செயல்களினால் திறந்து விட வேண்டும்.

❖ பொருள் வேண்டி பூஜை செய்வதைவிட, இறைவன் அருள் வேண்டி தர்மம் செய்வதே நலம்.

❖ பிறர் நமக்கு என்ன செய்ய வேண்டும் என எதிர்பார்க்கிறோமோ அதை நாம் அவருக்கு செய்ய வேண்டும்.

❖ கிணற்றில் இறைக்க இறைக்கச் தண்ணீர் சுரக்கும். அதுபோல் செலுத்த செலுத்த அன்பு வலுக்கும். மனிதரகள் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்த வேண்டும்.

❖ பசுவின் பாலில் இருந்து பாலாடை, வெண்ணெய், நெய், தயிர், மோர் எனப் பல பொருள்களைப் படைத்தோம். இறைவன் நமக்கு அறிவைத் தந்தார். நாம் அதில் இருந்து பல பொருள்களைப் படைக்க வேண்டும்.

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**செப்டிங் டாங்க், கழிப்பிடம் அமைக்கும் முறைகள்**

கிழக்கு முக கழிப்பிடம்: ஆரோக்கியத்தைக் கொடுக்கும்

வாவியத்தில் கழிப்பிடம்: வெறுப்புணர்ச்சி கொடுக்கும்

வாவியத்தில் குழியுடன் இருக்கும் கழிப்பிடம் வீண்வம்புகளை வரவழைக்கும்

ஈசானியத்தில் கழிப்பிடம் இருப்பது: கேடு

தெற்கு முக கழிப்பிடம்: நோய் போக்கும்

தென்மேற்கில் குழியுடன்: கேடு

ஆக்நேயத்தில் கழிப்பிடம்: ஆரோக்கியம்

ஆக்நேயத்தில் குழியுடன் கூடிய கழிப்பிடம்: ஆரோக்கியத்தைக் கெடுக்கும்

மேற்கு முக கழிப்பிடம்: உடல் நலக்கேடு

வடக்கு முக கழிப்பிடம்: ஆரோக்கியம்

கிழக்கு செப்டிக் டாங்க் குழி: வளர்ச்சி

தெற்கில் செப்டிக் டாங்க் குழி: ஆரோக்கியம்

**140 ஆழ்துளை கிணறு அமைய வேண்டிய இடம் எது?**

கிழக்கு திசை போர் கிணறு: இன்பம்

தெற்கு திசை போர் கிணறு: பெண் துயரம்

மேற்கு திசை போர் கிணறு: ஆண்துயர்

வடக்கு திசை போர் கிணறு: நன்மை

ஈசானியத்தில் கிணறு போர்: செல்வம்

வாவியத்தில் போர் கிணறு: உறவு கேடு

நைருதியில் போர் கிணறு: சண்டைகள்

ஆக்நேயத்தில் கிணறு போர்: பெண் துயரம் (தொடரும்)

# ஜெரி-ஒநாசியஸ் சிறந்த இணைப்பாட்டம் வெற்றி வாகை சூடியது விங்ஸ் அணி

சிறிலங்கா கிரிக்கெட் தொடர் கடந்த சனிக்கிழமை 17.03.2018 யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது. இத் தொடரில் இருந்து மாகாண சுற்றுக்கு 2 அணிகளைத் தெரிவு செய்வதற்கான தகுதிகாண் போட்டிகளை யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கம் மேற்கொண்டுள்ளது. இதன் அடிப்படையில் முதலாவது போட்டி கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாண கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போது விங்ஸ் அணி ஓல்ட் கோல்ஸ் அணியை 5 இலக்குகளால் வெற்றி பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஓல்ட் கோல்ஸ் அணி 30.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 178 ஓட்டங்களை பெற்றனர். மதூஸன்-10, மாதவரூபன்-21, நிரோஸன்-18 , பிரியலக்ஸன் -16, சிறிகுகன் 31, திலீபன்-11, மதூஸன்-15, விபிஸ் ஆட்டமிழக்காது 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிலக்ஸன்-02, வின்சன்-01, மைக்கல்-01, வினோத்-02 ஜெரி-1 இலக்கினைக் கைப்பற்றினர். பதிலுக்கு விங்ஸ் அணி 37.5 ஓவர்களில் 5 இலக்குகளை இழந்து 179 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தனர். ஜெரி -49, ஒநாசியஸ்-19, விதுஸன்-21, யூட்-31, விநோத்-13, மைக்கல் ஆட்டமிழக்காது-11 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிரோஸன்-3, பிரியலக்ஸன், சிறிகுகன் தலா-1 இலக்குகளை கைப்பர்றினர். (க)

# மைதானத்தில் கோல் மழை குருநகர் பாடும்மீன் வெற்றி

நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்திய வடமாகாண கழகங்களுக்கிடையிலான அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை உரும்பிராய் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் குருநகர் பாடும்மீன் அணியினரை எதிர்த்து உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழகம் மோதியது. போட்டியின் ஆரம்பம் முதல் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த குருநகர் பாடும்மீன் அணி கோல் மழை பொழிந்து கொண்டே இருந்தது.

பாடும்மீன் அணிக்காக சாந்தன் மூன்று கோல்களையும், ஜெயரட்ணம் இரண்டு கோல்களையும் மயூரன் மற்றும் ஜோன் ஆகியோர் தலா ஒரு கோல்களையும் அடிக்க ஆட்ட நேர முடிவில் குருநகர் பாடும்மீன் அணி உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழகத்தை 7:00 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சாதித்தனர். (க-106)

# சிறப்பாக நடைபெற்ற சாவகச்சேரி பிரதேச செயலக விளையாட்டு விழா



சாவகச்சேரி பிரதேச செயலகத்தின் பிரதேச விளையாட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் சாவகச்சேரி நகரசபை விளையாட்டு மைதானத்தில் பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண விளையாட்டு திணைக்களப் பணிப்பாளர் இ.குருபரனும் சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் கே.விஜிதரனும் கௌரவ விருந்தினர்களாக நகரசபைச் செயலாளர் க. சண்முகதாசனும் வணிகமன்றச் செயலாளர் வை.சிவராஜரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றியீட்டிய வீர, வீராங்கனைகளுக்கு பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் என்பன விருந்தினர்களால் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன. (க-60)

**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**

# தமிழகத்தில் தமிழனாகப் பிறந்தும் சென்னை அணியில் இல்லையே

## கார்த்திக் வருத்தம்



இந்திய அணியின் விக்கெட் கீப்பரான தினேஷ் கார்த்திக் தமிழனாக இருந்து சென்னை அணிக்காக விளையாடமல் இருப்பது தற்போது வரை வருத்தமளிப்பதாக கூறியுள்ளார்.

இலங்கையில் முத்தரப்பு இருபது-20 தொடர் அண்மையில் நடைபெற்று முடிந்தது. இதில் இறுதிப் போட்டியின் போது பங்களாதேஷ் அணியை இந்திய அணி வீழ்த்தி கிண்ணத்தை கைப்பற்றியது.


இப்போட்டியின் போது, கடைசிப் பந்தில் சிக்ஸர் அடித்து ஹீரோவான தமிழக வீரர் தினேஷ் கார்த்திக்கைப் பற்றித்தான் கிரிக்கெட் விமர்சகர்கள், ரசிகர்கள் எனப் பலர் பேசி வருகின்றனர்.

என்னுடைய நீண்ட நாள் ஆசை ஐ.பி.எல். தொடரில் சென்னை அணிக்காக விளையாட வேண்டும் என்பதே. நான் உள்ளூர் தொடர்களிலும் தமிழக அணிக்காக விளையாடியுள்ளேன்.

ஆனால் ஐ.பி.எல்.தொடரில் சென்னை அணிக்காக விளையாட முடியாமல் போவது மிகுந்த வருத்தமளிப்பதாகக் கூறியுள்ளார்.

மேலும் உள்ளூர் போட்டிகளில் தமிழக வீரர்கள் சிறப்பாகச் செயற்பட்டாலே, அது நேரடியாக இந்திய அணிக்குக் கொண்டு செல்லப் போதுமானதாக இருக்கும் எனவும் தெரிவித்துள்ளார். (க)

# அடித்துக் கொண்ட வீரர்கள் அணைத்துக் கொண்டனர்



இலங்கை வீரர் திசர பெரேராவும், பங்களாதேஷ் வீரர் மக்முதுல்லாவும் பாகிஸ்தான் சுப்பர் லீக்கில் ஒரே அணியில் விளையாட உள்ளனர்.

இலங்கையில் நடந்த முத்தரப்பு இருபது-20 தொடரில் இலங்கை மற்றும் பங்களாதேஷ் வீரர்கள் இடையே மோதல் ஏற்பட்டது நாம் அனைவரும் அறிந்ததே.

குறிப்பாக இலங்கைக்கு எதிரான போட்டியில் பங்களாதேஷ் வீரருக்கு நோபோல் கொடுக்காததால் கோபமடைந்த ஷாகிப் அல்ஹசன், துடுப்பாட்ட வீரர்களை பெவிலியனுக்கு அழைத்து சர்ச்சையை உண்டாக்கியது.

இந்நிலையில், பாகிஸ்தானில் நடைபெறவுள்ள பி.எஸ்.எல் இருபது-20 தொடரில் திசர பெரேரா மற்றும் மக் மதுல்லா ஆகிய இருவரும் ஒரே அணியில் இணைந்து விளையாடவுள்ளனர். (க)

# நியூசிலாந்து-இங்கிலாந்து மோதும் பகல்- இரவு டெஸ்ட் இன்று ஆரம்பம்

இங்கிலாந்து கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையேயான 5 போட்டி கொண்ட ஒருநாள் தொடரை இங்கிலாந்து 3-2 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இரு அணிகள் இடையேயான 2 டெஸ்ட் போட்டித் தொடரில் முதல் டெஸ்ட் போட்டி ஆக்லாந்தில் இன்று தொடங்குகிறது. இந்த டெஸ்ட் போட்டி பகல்-இரவாக நடக்கிறது. நியூசிலாந்தில் முதல் முறையாக பகல்-இரவு டெஸ்ட் போட்டி நடைபெறுகிறது. அதே நேரத்தில் அந்த அணி ஏற்கனவே பகல்-இரவு டெஸ்டில் விளையாடி இருக்கிறது.

நியூசிலாந்து விளையாடும் 2ஆவது பகல்-இரவு டெஸ்ட் இதுவாகும். இங்கிலாந்து அணி விளையாடும் 3 ஆவது பகல்-இரவு போட்டியாகும். இதற்கு முன்பு மேற்கிந்திய தீவுகள், அவுஸ்திரேலியாவுடன் விளையாடி இருக்கிறது.

இதில் மேற்கிந்திய தீவுகளை இன்னிங்ஸ் மற்றும் 209 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றிருந்தது. அவுஸ்திரேலியாவிடம் 120 ஓட்டங்களில் தோற்றது. (க)







கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக கரவெட்டிப் பிரதேச செயலர் ஈ.தயாரூபன், சிறிமோகன், நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி விமலவீர, கரவெட்டி உதவிபிரதேச செயலர் ரஜீவ் ஆகியோர் கலந்து கொண்டு போட்டிகளில் வெற்றியீட்டிய வீரர்களுக்கு கேடயங்கள் , சான்றிதழ்கள், பதக்கங்கள் வழங்கிக் கௌரவித்தனர். (க)

## பாதகத்தை தற்போது...

மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஜெனிவாவில் முன்வைக்கப்பட்ட எமக்கெதிரான பரிந்துரைகள் அனைத்தும் எம்மாலேயே உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் நேற்று கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார். (ம)

## கொடிகாமம் பகுதியில்...

யளவில் இடம்பெற்றுள்ளது. வீட்டில் இருந்தவர்கள் வெளியில் சென்ற நேரம் பார்த்து இந்த திருட்டு இடம்பெற்றுள்ளது.

வீட்டின் முன்கதவினை உடைத்தே திருடர்கள் உள்ளே சென்றுள்ளனர். மதியம் வீட்டுக்கு வந்த உரிமையாளர் கதவு திறந்து இருந்ததனை கண்டு அதிர்ச்சி அடைந்துள்ளார்.

உள்ளே சென்று பார்த்த போது வைக்கப்பட்ட இடத்தில் இருந்து பணம் மற்றும் கைபேசி தங்கச்சங்கிலி களவாடப்பட்டமை தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம)

## உடுப்பிட்டி இமையாணன்...

துடன் சிலர் நடமாடியதைக் கண்ணுற்ற ஒருவர் வாகனத்தில் இலக்கத்தை குறிப்பெடுத்து வைத்துள்ளார்.

இந்நிலையில் பிற்பகல் வேளை ஓர் வீடு உடைக்கப்படுவதாக அப்பகுதி மக்களிற்கு தகவல் கிடைக்க அவ்வீட்டினை அப்பகுதி இளைஞர்கள் முற்றுகையிட மூவர் தப்பிச் சென்று தயாரான நிலையில் நின்ற வாகனத்தில் ஏறி தப்பியோடியுள்ளனர். ஒருவர் வீட்டிற்குள் வைத்து மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

அவரின் தகவலின்படி ஏற்கெனவே இரு வீடுகள் உடைக்கப்பட்டமை தெரியவந்தது.

இதனையடுத்து தப்பியோடிய வாகனத்தை இளைஞர்கள் சிலர் துரத்திச் சென்றுள்ளனர். வல்லை உப்பு வீதி-கனம் புளியடி-நுணாவில் வீதி வழியாக தப்பிச் சென்ற பாதையினை பொலிஸாருக்கு தெரியப்படுத்தியவாறு செல்ல நுணாவில் சந்தியில் சாவகச்சேரிப் பொலிஸார் தயார் நிலையில் நின்று அப்பகுதி இளைஞர்களின் துணையுடன் படி வாகனத்தை மாலை 4.30 மணியளவில் மடக்கிப் பிடித்து அதிலிருந்த புத்தளம், வவுனியா, ஊர்காவற்றுறைப் பகுதியைச் சேர்ந்த மூவரைக் கைது செய்ததுடன் அவர்களிடமிருந்து தொலைபேசிகள், கால் செயின், பணம் என்பன மீட்கப்பட்டது.

இது தொடர்பில் வல்வெட்டித்துறைப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டதில் முதலில் தூப்புலம் பகுதியில் உள்ள வெளிநாட்டில் வசிப்பவர்களின் வீடு ஒன்றை கூரையை பிரித்து இறங்கியமை தெரியவந்தது. வீட்டில் யாரும் இல்லாததால் திருடப்பட்ட விபரம் தெரியவரவில்லை. இரண்டாவது வீடு சற்று தொலைவில் ஆரியமலை எனுமிடத்தில் உள்ளது. வீட்டில் இருந்தோர் தோட்டத்திற்கு சென்றதை சாதகமாகப் பயன்படுத்தி அலவாங்கால் கதவு உடைக்கப்பட்டுள்ளது.

அங்கு எவையும் திருடப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

மூன்றாவது வீடும் அதற்கு அருகாமையில் உள்ளது. அதுவும் கதவு உடைக்கப்பட்டே திருடப்பட்டுள்ளது. அங்கு 34 ஆயிரம் ரூபா பெறுமதியான தொலைபேசி, கால் செயின் என்பன திருடப்பட்டுள்ளது.

சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர்கள் வல்வெட்டித்துறைப் பொலிஸில் நேற்றிரவு பாரப்படுத்தப்பட்டனர். இளைஞர்களால் வீட்டில் வைத்து பிடிக்கப்பட்ட நபரும் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டான். மேலதிக விசாரணைகளை வல்வெட்டித்துறைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-60)

## சர்வதேச பங்களிப்புடன்...

இலங்கை தொடர்பாக ஐ.நா மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பான வாய்மூல அறிக்கை சமர்ப்பிக்கும் நிகழ்வில் நேற்று ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் இளவரசர் செயிட் அல் ஹுசைன் பங்கேற்கவில்லை. சார்பாக வாய்மூல அறிக்கையை ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் உதவி ஆணையாளர் ஒக்ஸ் ட்ரொயிட்ஸ் டெல் கோமே சமர்ப்பித்திருந்தார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

சர்வதேச பங்களிப்புடன் விசேட நீதிமன்றம் ஒன்றை நிறுவி இவ்விடயங்களை ஆராய வேண்டும். இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படாவிடின் சர்வதேச நியாயாதிக்கம் என்ற மாற்றுவழியை ஆராயுமாறு உறுப்புநாடுகளை கோருவோம் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் செய்ட் அல் ஹுசென் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அண்மையில் இலங்கையில் இடம்பெற்ற சிறுபான்மை மக்கள் மீதான இனரீதியான தாக்குதல் குறித்து நாம் கவலை அடைகிறோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2015ஆம் ஆண்டு இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்டு பின்னர் 2017ஆம் ஆண்டு இரண்டு வருட கால நீடிப்புக்குள்ளான பிரேரணையை இலங்கை அரசாங்கம் எவ்வாறு அமுல்படுத்துகின்றது என்பது குறித்த ஐ.நா மனித உரிமை ஆணையாளர் செய்ட் அல் ஹுசெய்னின் அறிக்கை மீதான விவாதமே இவ்வாறு நடைபெற்றது.

ஐக்கிய நாடுகள் சபையுடன் ஈடுபாட்டுடன் செயற்படும் இலங்கையின் செயற்பாட்டை வரவேற்கின்றோம். எனினும் பொறுப்புக்கூறல் பொறிமுறையை முன்னெடுப்பதில் இலங்கை தாமதத்தை கடைபிடிக்கின்றமை கவலைக்குரியதாகும்.

மேலும் எதிர்வரும் 2019ஆம் ஆண்டுக்குள் ஜெனிவா பிரேரணையை இலங்கை முழுமையாக அமுல்படுத்தும் என்பது சந்தேகத்துக்குரியதாக மாறியுள்ளது. அத்துடன் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு 20 மாதங்கள் கடந்தே காணாமல்போனோர் அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளமை குறித்தும் அதிருப்தியடைகின்றோம்.

அத்துடன் காணிகளை மீள வழங்குவதில் தாமதம் நீடிக்கின்றது. காணிகளை தொடர்ந்து அபகரித்தால் நம்பிக்கை கட்டியெழுப்புவது கடினமாகும். மேலும் காணிகளுக்கான நட்ட ஈடுகள் சுயாதீன பொறிமுறைகள் ஊடாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

கண்டி மாவட்டத்தில் முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதலினால் 12 நாட்களுக்கு அவசரகால நிலையை கொண்டுவர நேர்ந்தது. சித்திவதைகள் தொடர்வதாகவும் மனித உரிமை காப்பாளர்களை கண்காணிப்பது தொடர்பாகவும் அறிக்கையிடப்படுகிறது.

எப்படியும் இலங்கையின் இந்த நிலைமை தொடர்பிலும் நல்லிணக்கம் பொறுப்புக்கூறல் குறித்தும் ஐ.நா மனித உரிமை பேரவை அவதானத்துடன் இருக்க வேண்டும் என கோருகிறோம்.

ஜெனிவா மனித உரிமை பேரவையில் நேற்று நடைபெற்ற இலங்கை ஜெனிவா பிரேரணையை எவ்வாறு அமுல்படுத்தியது என்பது குறித்த விவாதத்தின்போது செய்ட் அல் ஹுசெய்ன் வெளியிட்ட அறிக்கையிலேயே மேற் குறிப்பிட்ட விடயங்களை குறிப்பிட்டுள்ளார். (ம)

## காணாமல் ஆக்க...

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைக்கு தமிழ் தலைமைகளும் ஐக்கிய நாடுகள் சபையும் இணைந்து தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் எனக் கோரி, மூதூரில் நேற்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டம் நடத்தினர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை மீட்டுத்தருமாறு கோரி மூதூர் பிரதேசத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று கிளிவெட்டி பாரதிபுரம் சிவன் ஆலயத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை கண்டுபிடித்து தரும் விடயத்தில் நல்லாட்சி அரசாங்கம் பாராமுகமாக செயற்படுவதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் குற்றம் சுமத்தியுள்ளனர். உயிருடன் கடத்தப்பட்ட தமது உறவுகள் மீண்டும் திரும்பி வரும் வகையில் அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் தமது உறவுகளை பறிகொடுத்து நிர்க்கதியான நிலையில் வாழும் தமக்கு அரசாங்கம் வீட்டுத்திட்டம் உள்ளிட்ட எந்தவொரு உதவிகளையும் வழங்குவதில்லையென போராட்டத்தில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (ம)

## இராணுவத்தினரால்...

ரஞ்ஜித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில், ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது, வடக்கில் யுத்தகாலத்தில் பாதுகாப்பு நிமித்தமாக தமிழர்களின் இடங்கள் கைப்பற்றப்பட்டன. அந்த இடங்கள் இன்று வரை மீள ஒப்படைக்கப்படவில்லை. ஒப்படைக்கப்பட்ட பகுதிகளில் மக்களின் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை இதற்கான காரணம் என்ன? என கேள்வி ஒன்று முன்வைக்கப்பட்டது.

குறித்த கேள்விக்கு ரஞ்ஜித் மத்தும பண்டார பதிலளிக்கும் போது,

தற்போதும் மக்கள் நிலங்களுக்காக போராட்டங்களைச் செய்து வருகின்றார்கள். அவர்களுக்கான நிலவிடுவிப்புகளை துரிதப்படுத்துவோம். இதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளது உண்மைதான்.

ஆனாலும் இதுவரையிலும் 1000 ஏக்கருக்கும் அதிகமான மக்களின் காணிகள் மீள ஒப்படைக்கப்பட்டுள்ளன அதனைப் பற்றி ஏன் யாரும் பேசுவதில்லை. வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும் காணிப் பிரச்சினைகள் உண்டு.

இப்போது காணி விடுவிப்புகளை அரசாங்கம் மறக்கவில்லை. இந்தச் செயற்பாட்டினை துரிதப்படுத்தப்படவேண்டும் என்ற நிலையே உள்ளது. விரைவில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என ரஞ்ஜித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார். (ம)

## ஜனாதிபதி, பிரதமருக்கு...

மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்வராவிட்டால் , மாற்று அரசியல் சக்தியாக செயற்பட வேண்டிய நிலை உருவாகும் என அமைச்சரவை இணை பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்கள் அறிவிக்கும் ஊடக சந்திப்பு நேற்று அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது.

இதன்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில் ,

அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் எதிர்கால பொருளாதார கொள்கை திட்டம் குறித்து அமைச்சரவையில் பேசப்பட்டது. அதனை முன்னெடுக்காவிட்டால் மாற்று அரசியல் சக்தியினை உருவாக்கியேனும் முன்னெடுப்போம் என்ற விடயத்தினை நான் வலியுறுத்தினேன். ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கும் இந்த விடயத்தை வெளிப்படையாகவே கூறினேன்.

2015ஆம் ஆண்டு ஆட்சிக்குவரும் போது பொது மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகள் உள்ளன. நல்லாட்சி அரசாங்கம் என்ற வகையில் அவற்றை நாங்கள் நிறைவேற்ற வேண்டும்.

எமது தாமத நிலையை உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மக்கள் தெளிவுபடுத்தியுள்ளனர். அர்த்தமற்ற முரண்பாடுகளை வளர்த்துக் கொண்டு ஆட்சியை முன்னெடுக்க முடியாது. கொள்கைகளில் இருந்து வெளியேறி செயற்படவும் முடியாது. யாருடைய தனிப்பட்ட விடயங்களுக்காகவும் நல்லாட்சி அரசாங்கத்தை நாங்கள் உருவாக்கவில்லை.

ஆகவே மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளுக்கு அமைவான எதிர்கால திட்டத்தினையே அமைச்சர் சம்பிக்க ரணவக்க அமைச்சரவை கூட்டத்தில் முன்வைத்தார்.

அதனை முன்னெடுக்க ஜனாதிபதி மற்றும் பிரதமர் முன் வரவேண்டும். நாட்டு மக்கள் அரசாங்கத்தின் திட்டங்கள் குறித்து எதிர்பார்ப்புடன் உள்ளனர். அவை நிறைவேற்றப்படாத பட்சத்தில் தேர்தல்களில் பின்னடைவுகளே ஏற்படும் என தெரிவித்தார். (ம)

## ரணிலுக்கு எதிரான...

பிரேரணையில் 55 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆளும் கட்சியை சேர்ந்த ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்களான டி.பீ. ஏக்கநாயக்க, நிஷாந்த முத்துஹெட்டிகம, எஸ். புஞ்சிநிலமே மற்றும் காதர் மஸ்தான் ஆகியோர் குறித்த பிரேரணையில் கையொப்பமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான யோசனையில் முன்னாள் ஜனாதிபதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷ கையெழுத்திடவில்லை.

இது தொடர்பாக ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டுள்ள கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும,

மகிந்த ராஜபக்ஷ என்பவர் நாட்டின் தேசிய தலைவர். அவரது கையெழுத்து, அவரது வருகை, அவரது வாக்கு என்பன சாதாரண நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருடையதை விட பலமானதும், பெறுமதியானதுமாகும்.

அதனை நாங்கள் தேவையான நேரத்தில் பயன்படுத்துவோம். அதனை பிரச்சினையாக எடுத்துக் கொள்ள வேண்டாம். நம்பிக்கையில்லாப் பிரேரணையை சபாநாயகரிடம் கையளிக்கும் போது அவர் தலைமை தாங்கினார்.

மக்கள் அரசாங்கத்தை தோற்கடித்தனர். கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தலைமை தாங்கினார் என டளஸ் அழகப்பெரும குறிப்பிட்டுள்ளார். (ம)

## தமிழர்களின் சொத்து...

என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 37ஆவது கூட்ட தொடர் இடம்பெற்று வரும் நிலையில் அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் பேசிய அவர், "நல்லுறவை பேண மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் அனைத்தும் தெளிவற்றவையாகவும் போதுமானதாகவும் இல்லை.

அத்துடன், உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல போதுமான ஆதரவை அளிக்க அரசும் அவ்வப்போது தவறி வருகிறது.

மிகக் கொடூரமான இன அழிப்பு காலகட்டத்தில் துயரத்தை அனுபவித்தவன் என்ற முறையில், UNHRC மற்றும் முந்தைய உயர் ஆணையாளர் ஆகியோரது பங்களிப்பில் எமக்கு முழு திருப்தி உள்ளது.

எனினும், இலங்கை அரசு அவை அனைத்தையும் நடைமுறைப்படுத்த தவறியுள்ளது.

மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் 30/1 படி எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள மறுக்கும் இலங்கை அரசு, ஐக்கிய நாடுகள் மன்றத்தையோ, சர்வதேச சமூகத்தையோ மதிக்கத்தவறியுள்ளது.

தமிழர்கள் இன அழிப்பு காலத்தில் அனைத்தையும் இழந்தோம், இராணுவத்தினர் தமிழர்களின் சொத்துக்களை கொள்ளையிட்டு செல்வதை கண்கூடாக காண முடிந்தது என அவர் மேலும் கூறியுள்ளார். (ம)

## 2020 ஆண்டு வரை...

கூட்டு எதிர்க்கட்சிக்கு தேவையான வகையில் அரசாங்கம் நாட்டை ஆட்சி செய்யாது எனவும் அவர் கூறியுள்ளார்.

அம்பேவல பால் தொழிற்சாலைக்கு நேற்று கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்ட பின்னர், ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

நாட்டை ஆட்சி செய்ய ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் முறை ஒன்று உள்ளது. அந்த முறைமைக்கு முரணாக எவராலும் நாட்டை ஆட்சி செய்ய முடியாது.

பிரதமருக்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சி கொண்டு வரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான யோசனையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அமைச்சர்கள் சிலர் கையெழுத்திட்டிருந்தாலும், ஐக்கிய தேசியக் கட்சியினர் எவரும் அதில் கையெழுத்திடவில்லை எனவும் அமைச்சர் ஹரிசன் குறிப்பிட்டுள்ளார். (ம)

# யாழ்.பல்கலைக் கழக...

கட்டளையிட்டுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தினுடைய இராமநாதன் மண்டபத்தின் பிரதான நுழைவாயிலை தடைசெய்வதற்காக யாழ் பல்கலைக்கழக ஊழியர்கள் சங்கத்தின் தலைவர் உட்பட 25 பேர் வரையிலானோர் நின்று தமது கடமைகளுக்கு இடையூறு விளைவிப்பதாக யாழ் பல்கலைக்கழக உத்தியோகத்தர்களால் நேற்று முன்தினம் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

அவ்விடயம் தொடர்பாக நேற்று கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியால் மன்றின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. அதற்கமைய யாழ் நீதவான் நீதிமன்றின் அதிகாரத்தின் பிரகாரம் இராமநாதன் மண்டபத்தின் பிரதான நுழைவாயிலை தடைசெய்யாமல் இருக்கவும் பல்கலைக்கழக உத்தியோகத்தர்களுக்கோ மாணவர்களுக்கோ இடையூறு ஏற்படாமலும் கட்டிடங்களுக்கோ சொத்துக்களுக்கோ சேதம் ஏற்படாவண்ணம் செயற்படுமாறு ஊழியர் சங்கத்தின் தலைவருக்கும் ஊழியர்சங்க உறுப்பினர்களுக்கும் யாழ் நீதிமன்று கட்டளை பிறப்பித்துள்ளது. (ம-9)

# முதலமைச்...

பல வருடங்களாக சிறையில் உள்ளார். இவருக்கு மனைவி மற்றும் இரு பிள்ளைகள் இருந்த நிலையில், கடந்த சில தினங்களுக்கு முன்னர் சுகவீனம் காரணமாக அவரது மனைவி உயிரிழந்துள்ளார்.

இந்த நிலையில் தாய் உயிரிழந்து விட்ட நிலையிலும், தகப்பன் சிறையில் உள்ள நிலையிலும் இரு பிள்ளைகளும் நிர்க்கதியான நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

இந்த நிலையில் மனைவியின் இறுதிக் கிரியைகளுக்காக ஆனந்தசுதாகரன் வந்த நிலையில், அவரது இரு பிள்ளைகளும் தகப்பனை கட்டி தழுவி கதறியழுதனர். இறுதி கிரியை முடிவடைந்து தகப்பன் சிறைச்சாலை வாகனத்தில் ஏறிய போது அவரது பிள்ளையும் சேர்ந்து ஏறியுள்ளது.

இந்த சோகம் அனைவரது மனங்களையும் நெகிழ வைத்த நிலையில், சமூக ஊடகங்கள் எங்கும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. எனினும் இதுவரை அரச தரப்பு மௌனம் காத்து வருவதோடு, தமிழ், சிங்கள மனிதவுரிமை செயற்பாட்டாளர்களும் மௌனம் காத்து வருகின்றனர். இந்த நிலையில் தான் முதலமைச்சர் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். (ம-4)

# தொண்டரா...

முல்லைத்தீவு துணுக்காய் கல்வி வலயத்தைச் சேர்ந்த தொண்டராசிரியர் ஒருவர் தற்கொலை செய்த நிலையில், நிரந்தர நியமனம் வழங்குவதில் ஏற்பட்ட தாமதமே இந்த தற்கொலைக்கு காரணம் என தொண்டராசியர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

வட மாகாணத்திலுள்ள 680 தொண்டராசிரியர்கள் தமக்கான நிரந்தர நியமனத்தை கோரி ஆர்ப்பாட்டம் செய்திருந்த நிலையில், அவர்களில் 182 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியிருந் தது.

எனினும் இந்த நியமனத் திற்கான தெரி வில் முறைக் கேடுகள் இடம் பெற்றுள்ளதாக தெரிவித்து ஏனைய தொண்டராசியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் வடமாகாண முதலமைச்சரின் தலையீட்டை அடுத்து தொண்டாசிரியர்களுக்கான நியமனம் நிறுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் ஏற்கெனவே தெரிவு செய்யப் பட்ட 180 பேருக்கும் இம் மாதம் நியமனம் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்ட நிலையில் முல்லைத்தீவைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியை ஒரு வர் நேற்றையதினம் தற்கொலை செய்ததாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த நிலையில் தமக்கு தாமதமின்றி நிரந்தர நியமனம் வழங்குமாறும் வலியுறுத்தி முதலமைச்சர் அலுவலகத்திற்கு முன்னால் தொண்டர் ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியுள்ளனர். நிரந்தர நியமனம் வழங்குவதில் காட்டப்படும் தாமதம் காரணமாகவே தொண்டராசியர் தற்கொலை செய்துள்ளதாகவும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொண்டராசிரியர்களை வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சந்தித்து பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்துள்ளார்.

இந்த பிரச்சினை தொடர்பில் மத்திய கல்வி அமைச்சுடன் கலந்துரையாடி உரிய தீர்வை பெற்று தர நடவடிக்கை எடுப்பதாக முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உறுதி அளித்துள்ளார். (ம-4)


## பணிப்பெண் தேவை

பிள்ளைப்பேறு பார்க்கக் கூடியவர் அல்லது வீட்டுப் பணிப்பெண் தேவை. தொ.பே : 077 923 8376

(3319)

## வீடு விற்பனைக்கு

நல்லூர்ப்பகுதியில் வீடு விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :- 0772203140

(3310)



அறிமுகம் - Rs. 250/=

## சிக்கன் பிரியாணி

ப்றைட் சிக்கன் -றைஸ் & பைட்ஸ்

Fried Chicken - Rice & Bites

யாழ் பாடியில் (C-1914)

49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

021 222 6868, 077 736 0353, 075 987 5800

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

வங்கியியல் கற்கை நெறிகள்

**Banking Courses**

**IABF & DABF**

(Tamil & English Medium)

Qualification:- G.C.E. O/L 6 Passes with 5 credits including Maths.

ஆரம்பம் :- 24 – 03 - 2018

கணக்காளர் கற்கை நெறிகள்

**Chartered Accounting Courses**

Executive Level & Business level

(Tamil & English Medium)

Qualification:- G.C.E. A/L 3 Passes.

ஆரம்பம் :- 24 – 03 - 2018

**Certificate Course in English**

16 Batches have successfully Completed the course. Started 24 – 03 -2018.

Further Details: Jaffna College Undergraduate Dept. 464, Hospital Road, Jaffna.

0212223382 / 0212229149

(C-1911)

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS

UK – 550*/=Kg

கனடா-1050*/=Kg

(C-1828)

தொடர்புகளுக்கு: 0768226240

●யாழ்ப்பாணம் ●கிளிநொச்சி ●சாவகச்சேரி ●நெல்லியடி ●பருத்தித்துறை ●வல்வெட்டித்துறை

V2 TRAVELs

## பதவிக்கான தேடல்

சர்வதேச ரீதியில் இயங்கிவரும் எமது நிறுவனத்தின் புதிய கிளைகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் ஆரம்பமாக உள்ளதால் 6 வகையான பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

- O/L, A/L உள்ளவர்கள் உடனே அழையுங்கள்.
- O/L இல்லாதவர்களுக்குமான விசேட வாய்ப்புக்கள்.
- அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.
- வயதெல்லை 18 - 30.

தொடர்பு: 0766668385,0215679002

(3381)

## சரித்திரம் படைத்த எமது கம்பனியில் தொழில்வாய்ப்பு

யாழ் நகரில் முதல்தரமாக இயங்கிவரும் எமது கம்பனியில் நீங்கள் இணைய விரும்புகின்றீர்களா? ஆரம்பமாகஇருக்கும்புதியகிளைகள் ➢கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ➢வயதெல்லை 18 தொடக்கம் 40 வரை ➢சம்பள எல்லை 15,000/= தொடக்கம் 40,000/= வரை ➢கல்வித்தகைமை தரம் 9 தொடக்கம் O/L, A/L. எங்கள் கம்பனியில் இணையும் உங்களுக்கு தகுதிகாண்காலத்தின் பின்னர் நிரந்தர வேலையினை பெற்றுக்கொள்ள முடியும்.

தொடர்புகளிற்கு - 0779858580, 0772272681, 0769468553

Everest02Jaffna@gmail.com

(3317)

## Techno World

(வெலிங்டன் சந்தி லிங்கன் கூல்பார் அருகாமை - யாழ்)

**A/L தொழில்நுட்பப் பிரிவு**

**இலவசக் கருத்தரங்கு**

**தவணைப் பரீட்சையை நோக்கியது**

**A/L 2019 - SFT**

**A/L 2018 - SFT, ICT**

ஆரம்பம் : 24,25.03.2018 சனி, ஞயிறு 8.00 am - 1.00 pm

(C-1958)

யாழ்,மட்டக்களப்பு பிரபல ஆசிரியர்களினால் நடாத்தப்படவுள்ளது. அனுமதி இலவசம் (மாதிரி வினாத்தாள் விடைகளுடன் வழங்கப்படும்)

T.P : 077 017 5346

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532

## போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்

வவுனியாவில்

- மாகாண முகாமைத்துவ உதவியாளர்
- முன்பள்ளி ஆசிரியர்
- சாரதி தெரிவு
- திட்டமிடல் சேவை

திறந்த மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைகளுக்கு பிரதி சனிக்கிழமைகளில் மு.ப 9.30 தொடக்கம் பி.ப 3.00 மணி வரை

CCA - வவுனியா

மாவரவ புளியங்குளம் கதிரேசன் வீதி

0779987479, 0772205126

(C-1954)


## காணவில்லை



சின்னத்தம்பி அருளானந்தன்

(வயது 81) என்பவரை 21.03.2018 புதன்கிழமை அன்று முற்பகல் 11.00 மணியளவில் கொக்குவில் மேற்கு கொக்குவிலில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இருந்து காணவில்லை.

இவர் கடைசியாகக் காணப்பட்டபோது வெள்ளை செக் சேட்டும் நீலச்சாரமும் அணிந்திருந்தார். தகவல் தெரிந்தோர் தொடர்பு கொள்ளவும்.


வேம்படி முருகன் வீதி, கொக்குவில்.

077 616 0345 / 077 616 5378 / 0212215792

(3320)

## மரண அறிவித்தல்

### பொன்னையா சத்தியவான்



சிவகுலவீதி உரும்பிராய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சத்தியவான் நேற்று 21.03.2018 புதன்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - றோசம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் சின்னத் தங்கச்சியின் பாசமிகு அன்புக் கணவரும் பகிரதன் (பிரான்ஸ்), கலைஅரசி (உள்ளூராட்சி உதவியாளர், யாழ். மாநகரசபை), கலைவாணி (ஜேர்மனி), பார்த்தீபன்( பிரான்ஸ்), மயூரன் (லண்டன்), கல்யாணி (ஆசிரியர், யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இரத்தினகலா (பிரான்ஸ்), யசோதரன் (ஆசிரியர், யா/வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்), ஸ்ரீதரன் (ஜேர்மனி), தாரணி (பிரான்ஸ்), லதாஜினி (லண்டன்), கலாமோகன் (ஆசிரியர் யா/வசாவிளான் ஸ்ரீவேலுப்பிள்ளை வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பாரத், ராகவி, ஹரி (பிரான்ஸ்), தர்சனா, அஞ்சனா (பிரான்ஸ்), மகிசா, மகிபன் (லண்டன்), தனுஸ்கா, மிதுன் ஆகியோரின் அன்புப் பேரனும் பூமாதேவி, சிவன்யோகம், காலஞ்சென்ற அருமைத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற அருளம்பலம், அன்னபூரணம், காலஞ்சென்ற சுப்பிரமணியம், சரஸ்வதி, செல்லத்துரை ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.03.2018) வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி முற்பகல் 10 மணிக்கு பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தொ.பே : 077 212 1915, 021 373 7295

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.
சிவகுலவீதி, உரும்பிராய் மேற்கு.

(3312)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.03.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.